# ரோஹிங்யா:
## துயரத்தின் சில துளிகள்



மாகாண சபை திருத்தச் சட்ட மூலம்

## வென்றது அரசாங்கம் தோற்றது ஜனநாயகம்




மீள்பார்வை
මීල්පාර්වෙ
Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/75/NEWS/2017 - ISSN 2012-5038
Meelparvai Fortnightly
meelparvai.net
සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்
இதழ் - 378 • 29 செப்டம்பர் 2017 வெள்ளிக்கிழமை • முஹர்ரம் 1439 • விலை 40.00



RI MOBILE
Wholesale Dealers in Mobile Phone Accessories
077-3050949
077-4843323
Tel: 011-2439470
151/11, Mumbai Plaza, 2nd Cross Street, Colombo - 11
Branch: 159/21, Green Arcade, Main Street, Colombo - 11
தேவையான பொருட்களை இருக்குமிடத்தில் இருந்தே மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள அழையுங்கள் 0777 777 761
0777 674 941


# அகதிகளாகியுள்ள அப்பாவி மக்களுக்கு அனுதாபம் காட்டுங்கள்

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ரோஹிங்ய அகதிகள் மீது பௌத்த மதகுருமார் உள்ளிட்ட குழுவினர் நடத்திய தாக்குதல் தொடர்பில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில், குறித்த நிகழ்வுகளை அது அறிந்தும் அவதானித்தும் வருவதாகத் தெரிவித்துள்ளது.

இவ்வருடம் ஏப்ரல் மாதம் இலங்கைக் கடற் படையினால் காப்பாற்றப்பட்டு புகலிடம் அளிக்கப்பட்டிருந்த பெண்களும் குழந்தைகளுமாக 31 அகதிகளைக் கொண்ட (பக்.14)



## அரச காணிகள் பற்றிய விபரம் இணையத்தில்

தொல்பொருள், வன பாதுகாப்பு என்ற ரீதியில் திடீரென வர்த்தமானி அறிவித்தல் மூலமாக காணிகள் அரசுடைமையாக்கப்பட்டு வரும் நிலையில், அரசுடைமையிலுள்ள காணிகளை பொது மக்கள் அறிந்து கொள்வதற்கான வசதிகளை அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கை அரசாங்கத்துக்குச் சொந்தமாக பல்வேறு காரணங்களுக்கெனவும் ஒதுக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பான விபரங்களை அடங்கிய இந்த விஷேட வரைபடம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளின் பேரில் நில அளவையாளர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (பக்.14)

## பட்ஜட்டுக்கான யோசனைகள் சமர்ப்பிக்க வேண்டுகோள்




நவம்பர் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் யோசனைகளை முன்வைக்குமாறு அரசாங்கம் பொருளியல் துறை சார்ந்தவர்களையும் மற்றவர்களையும் கேட்டுள்ளது.

பலம் மிக்க பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல், வளமான நாடொன்றை உருவாக்குதல், பத்து இலட்சம் தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல் என்ற இலக்குகளில் வெற்றிகரமான ஒரு வரவு செலவுத் திட்டத்தை முன்வைப்பதற்கான யோசனைகளை நிதி, ஊடக அமைச்சில் கையளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (பக்.14)

## ஹம்பாந்தோட்ட எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையம் நவம்பரில்

ஹம்பாந்தோட்டை துறைமுகம் 99 வருட கால குத்தகையில் சீனாவுக்கு வழங்கப்பட்டதன் பின்னர், அங்கு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த ஒப்பந்தத்தை செய்வதாக எதிர்பார்க்கப்படும் China Merchants Port Holdings - CMPH நிறுவனம் இதற்கென 3 பில்லியன் டொலர்களை முதலிடவிருக்கிறது. இந்தத் தொகை ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் பெறுமதியை விட அதிகமாகும். ஒக்டோபர் மாத இறுதியில் இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்தாகுமென இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தலைவர் பராக்கிரம திஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார். (பக்.14)



## GSP: கோரிக்கைகளுக்கு தலைசாய்ப்பதற்காக இலங்கைக்கு மேலும் 400 கோடி




மந்தமான போக்கில் தற்பொழுது சென்றாலும், GSP சலுகைக்கான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யக் கூடிய ஆற்றல் இலங்கைக்கு இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டமைச்சர் திலக் மாரப் பன, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளியல் விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா உட்பட மற்றும் பல அதிகாரிகள் ப்ரஸல்ஸுக்கு விஜயம் மேற்கொண்டு ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளைச் சந்தித்த போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (பக்.14)

## அரச கொள்கைக்கு முரண். ஆனாலும் அரசு கண்டிக்கவில்லை



இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ள எழுதப்பட்ட, எழுதப்படாத சர்வதேச சமவாயங்களுக்கு எதிரான முறையில், ரோஹிங்ய அகதிகள் மீது பௌத்த மதகுருமார் அத்துமீறிய போதிலும் இது தொடர்பில் அரசாங்கம் எந்தக் கண்டனத்தையும் வெளியிடாமல் இருப்பது பற்றி மனித உரிமை ஆர்வலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (பக்.14)


NCH
New City Hardware
உங்களுக்குத் தேவையான தரமான உபகரணங்களுக்கு நாடுங்கள்
58, Messeger Street, Colombo - 12
Tel: 011-43777931, 011-5830188, 011-4377934
Fax: 011-2334671 Email: newcity@hotmail.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநாகரிகத்தின் உச்சத்தில்

- அலிப்

சட்டத்தை பாதுகாக்க வேண்டிய போலிஸார் முன்னிலையிலேயே, இனத் துவேஷத்தை பச்சையாக காறி உமிழ்ந்து, அதை அவர்களே வீடியோ செய்து, பெருமையுடன் Share பண்ணியிருப்பது, அநாகரிகத்தின் உச்ச கட்டம். இலங்கை நாடு எங்கே போய்க்கொண்டிருக்கிறது? முஸ்லிம் புத்திஜீவிகள், சிவில் சமூக அமைப்புகள் உடனடியாக ஏதாவது செய்ய வேண்டும், செல்லாக் காசுகளாய் போன எமது முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகளை நம்பி எந்தப் பலனுமில்லை.






# மீண்டும் சோரம் போன முஸ்லிம் அமைச்சர்கள்

- முபாரக் அப்துல் மஜீத்

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் 33 பாராளுமன்ற உறுப்பினர்களை துணைக்கு அழைத்துக் கொண்டு எழுத்து மூலம் பிரதமர் ரணிலிடம் கொடுத்ததாகச் சொல்லப்படும் சிறுபான்மை மக்களை பாதிக்காத தேர்தல் திருத்த திட்டத்தின் பிரதியை முஸ்லிம் காங்கிரஸால் இங்கு பகிரங்கமாக வெளியிட முடியுமா?


## மேர்சி கல்வி வளாகம்

### 2018 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர் அனுமதி

புத்தளம் மதுரங்குளியில் அமைந்துள்ள ISO சர்வதேச தரச் சான்றிதழ் பெற்ற மேர்சி கல்வி வளாகத்தினால் முஸ்லிம் மாணவர்களுக்கு உள் நாட்டுக் கலைத்திட்டத்திற்கமைய இரு மொழி (Bilingual) மூலம் பாடசாலைக் கல்வி வழங்கப்படுவதுடன் மார்க்கக் கல்வியும் அதற்கான பயிற்சியும் வழங்கப்படுகின்றது. இன்ஷா அல்லாஹ் 2018 ஆம் ஆண்டிற்காக பாலர் பாடசாலை முதல் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையான மாணவர்களை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கமைய சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

❖ பாலர் பாடசாலை முதல் தரம் 5 வரையிலான மாணவர்கள் நாளாந்தம் வந்து கல்வி கற்றுச் செல்ல வேண்டும். அவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்து கொடுக்கப்படும். ( நிபந்தனைகளுக்குட்பட்டது )

அனுமதிக்கான தகைமைகள்
- சிறந்த ஒழுக்கமுள்ளவராக இருத்தல்.
- சுக தேகியாக இருத்தல்.
- பெற்றோர் /பாதுகாவலர் பொறுப்பாக இருத்தல்.

விண்ணப்பப் படிவங்கள்:

- இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கு ஏற்ப A4 அளவில் விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்து சரியாகப் பூர்த்தி செய்து பதிவுத் தபால் மூலம் "மாணவர் தெரிவு 2018" என காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு **The Director, Mercy Institute for Islamic Studies, P.O. Box No - 01, Madurankuliya** " என்ற முகவரிக்கு 17-10-2017ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
- விண்ணப்பப் படிவங்களுக்காக ரூபாய் 100 /= ஐ **The Accountant , Mercy Institute for Islamic Studies** என்ற பெயருக்கு **Money Order** செய்து அதன் பற்றுச் சீட்டினை உங்களது 'விண்ணப்பப் படிவத்துடன் தவறாது இணைத்து அனுப்பவும்.
- பற்றுச் சீட்டு இணைத்து' அனுப்பப்படாத அல்லது தாமதித்து வருகின்ற விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் நேரில் வந்து ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம். அல்லது 0774463665 / 0314939330 / 0322268401 என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்வதோடு **www.mecunique.lk** என்ற எமது இணையத்தளத்தின் ஊடாகவும் பெற்றுக் கொள்ள முடியும்.
- புதிய மாணவர் தேர்வுப் பரீட்சை **29/10/2017** ஆம் திகதி நடை பெறும்.

குறிப்பு:
- 9 ஆம் ஆண்டு மாணவர்கள் இரு மொழியில் கல்வி கற்றவராக இருத்தல் வேண்டும்.
- 10ஆம், 11ஆம் ஆண்டுக்கான மாணவர்கள் இரு மொழியில் கல்வி கற்றிருப்பதோடு மாகாண ரீதியாக நடாத்தப்பட்ட பரீட்சைகளில் உயர் சித்திகளைப் பெற்றிருப்பின் நிருவாகத்தின் விஷேட நிபந்தனைகளுடன் சேர்த்துக் கொள்ளப்படலாம்.

பணிப்பாளர்.

மேர்சி கல்வி வளாகம்
மதுரங்குளி, புத்தளம்.

2018ம் ஆண்டில் புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பம்

அனுமதி கோரும் தரம் [ ]　　　　[ | ]

01.மாணவர் தொடர்பான விபரங்கள்　　　　அலுவலக உபயோகத்திற்கு

a) முழுப் பெயர்:........................................
b) பிறந்த திகதி:........................ 01/01/2018 இல் வயது............ *
c) தற்போது கற்கும் பாடசாலை:........................................
d) தற்போது கற்கும் தரம்:............ 2018 இல், கற்கவிருக்கும் தரம்........................
e) பரீட்சைக்குத் தோற்றும் மொழி: ........................................
f) தற்போது கற்கும் ஊடக மொழி (Medium)........................................
g) முகவரி:........................................
h) தற்போது வசிக்கும் மாவட்டம்........................................
i) மாணவரின் தந்தை உயிருடன் இருக்கின்றாரா? ( குறிப்பிடவும் ) ........................

02.பெற்றார் / பாதுகாவலர் தொடர்பான விபரங்கள்
j) முழுப் பெயர்........................................
k) மாணவருக்கான உறவு முறை........................................
l) தபால் விலாசம் ( தயவு செய்து மிகச் சரியான முகவரியை ஆங்கிலத்தில் ( **Capital Letters** ) தருக:
........................................
........................................
m) தொடர்பு கொள்ளக்கூடிய 2 தொலைபேசி இலக்கங்கள்: ..................../....................
n) பெற்றார் / பாதுகாவலரின் பிறந்த திகதி........................................
o) பெற்றார் / பாதுகாவலரின் அடையாள அட்டை இலக்கம் ........................
p) பிறந்த ஊர்:........................................

மேற்குறித்த விபரங்கள் யாவும் சரியானவை என்றும் இதில் ஏதாவது பிழையான தகவல்கள் வழங்கப்பட்டிருப்பின் நிர்வாகம் எடுக்கும் எந்த ஒரு முடிவையும் நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வேன் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

..........................　　　　..........................
திகதி:　　　　பாதுகாவலர் கையொப்பம்

* மாணவர்களின் வயதெல்லை அரசாங்கப் பாடசாலைகளின் நிபந்தனைகளுக்கு அமைய ஏற்றுக்கொள்ளப்படும்


# நீதியைப் பெற்றுக் கொடுப்போமா?

- சப்வான் பஷீர்



பேஸ்புக்கில் கட்டுரை எழுதினோம்.....
கொழும்பில் ஆர்ப்பாட்டம் செய்தோம்....
ரோஹிங்யாவில் என்ன நடக்கிறது
என்று உரைகள் நிகழ்த்தினோம்....
ரோஹிங்ய முஸ்லிம்களுக்கு நடக்கும் அநீதிகள் குறித்த செய்திகளைப் பகிர்ந்தோம்......

உலகில் முஸ்லிம்களுக்கு என்ன நடந்தாலும் நான் மேலே சொன்ன அனைத்தையும் நாம் தவறாமல் செய்து வருகின்றோம். இப்போது எமக்கான ஒரு சந்தர்ப்பம் வந்திருக்கிறது.

கொழும்பில் தங்கியிருந்த நான்கைந்து ரோஹிங்ய அகதிகள் குடும்பத்தையும் வீடுகளில் இருந்து விரட்டியிருக்கிறது ஒரு காவிக் கும்பல். இந்தக் காவிக் கும்பலின் நேற்றைய நடவடிக்கைகளுக்கு நாமும் பொறுப்புச் சொல்ல வேண்டும்.

பேஸ்புக்கில் நாம் ரோஹிங்ய மக்களுக்கு குரல் கொடுப்பதாக நினைத்து செய்யும் நிறைய விடயங்கள் இங்குள்ள சிங்களப் பேரினவாதிகளுக்கு இங்கே ஒரு இனவாத அலையை உருவாக்க நல்லதொரு கருப்பொருளாக அமைந்து விடுகின்றது.

எமது ஆர்ப்பாட்டங்களும் இங்கே இருக்கும் சிங்களப் பேரினவாதிகளை உசுப்பேத்துகிறதே தவிர பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்த நீதியையும் பெற்றுக் கொடுப்பதில்லை. இந்த மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அவர்களுக்கு ஒரு பாதுகாப்பான வாழ்விடத்தை அமைத்துக் கொடுப்பதுற்கும் எம்மால் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்ய வேண்டும்.

# 'முள்ளிவாய்க்கால் பாணியில் இலங்கை முஸ்லிம்களையும் கவனிக்க வேண்டும்'

- ஸாபர் அஹ்மத்




நான் தெஹிவலையில் இருந்து இரத்மலானை வந்து கொண்டு இருந்தேன். கல்கிஸ்ஸ சந்தி எங்கும் பரபரப்பாய் இருந்தது. பொலிஸ் உயரதிகாரிகளும் விசேட அதிரடிப்படையினரும் குழுமி இருக்க ஒரு மிகப் பெரும் கலவரத்தை அடக்குவதற்குத் தேவையான அத்தனை உபகரணங்களும் அவர்கள் வசம் இருந்தன...

ஐக்கிய நாடுகள் சபையும் அரசாங்கமும் ஏற்படுத்திக் கொடுத்த கட்டிடத் தொகுதி ஒன்றில் வாழ்ந்த ரோஹிங்யா முஸ்லிம்கள் ஏற்கனவே வெளியேற்றப்பட்டு இருந்தார்கள். ஆனாலும் பதட்டம் தணியவில்லை. இளம் பெண்களும், இளைஞர்களும் குழுமி இருந்தனர். கூட்டத்தோடு கூட்டமாய் அவர்கள் பேசுவதைக் கவனித்தேன். அத்தனை ஆவேசமாய் இருந்தார்கள். கைகளில் இருந்த மொபைல் போன்களில் சிங்கள இனவாதப் பக்கங்கள். அச்சில் ஏற்ற முடியாத அருவருப்பாய் இருந்தன அவர்களின் வாயில் இருந்து வந்த வசனங்கள். இஸ்லாமிய ஆடை அணிந்த பெண்கள் அந்த இடத்தில் நடந்து செல்வதெல்லாம் பேர்முடா முக்கோண வலயத்திற்குள் போவது போல அத்தனை பயமான சமாச்சாரமாய் இருந்தது. 'முள்ளிவாய்க்கால் பாணியில் இலங்கை முஸ்லிம்களையும் கவனிக்க வேண்டும்' என்றாள் தடித்த ஒரு பெண். அவள் பேசும் போது காண்டா மிருகம் ஒன்று குத்த வருவது போல இருந்தது.

இதை எல்லாம் பார்க்கும் போது ஒன்று மட்டும் புரிகிறது. இன்னும் இருபது வருடங்களில் இந்த தேசம் அடையப் போகும் அடைவுகள் மிகத் துல்லியமாய் எம் கண் முன்னே தெரிகின்றன. அகிம்சையைப் போதித்த புத்தரைப் பின்பற்றும் மக்களுக்குள்ளே எப்படி இப்படி ஒரு காட்டுமிராண்டித்தனம் என்று கேட்கிறார்கள்.. மதங்களுக்கும் மனிதர்களின் நடத்தைக் கோலங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அவர்கள் திருந்தப் போவதில்லை.

ஒரு இனவாதப் பதிவு ஒன்றுக்கு பல்லாயிரம் லைக்ஸ் சேர் என்று கொண்டாடும் ஆட்டு மந்தைக் கூட்டம் ஒன்று உருவாகிவிட்டது. போலித் தேசப் பற்றுக் கோஷங்களைத் தூக்கி கிணற்றில் போட்டு விட்டு எமது எதிர்கால இருப்பு தொடர்பாக தீவிரமாய் சிந்திக்க வேண்டிய தருணம் இது.

# நாமும் அனுதாபத்திற்குறியவர்கள்

- நப்ஹான் ஷிஹாப்தீன்

பள்ளியுடைத்தார்கள். பர்தாவை இழுத்தார்கள்.
பார்த்துக் கொண்டிருந்தார்கள் ஆட்சியாளர்கள்.

பல்லக்கில் தூக்கி வைத்தவர்கள் தருணம் பார்த்து
தரைக்கு இழுத்தார்கள். பதவிகவிழ்த்தார்கள்.

அப்போதெல்லாம், மைத்திரி வந்தால் மகத்துவ
மென்றார்கள். மகிழ்ச்சிப் பெருக்கில், பாற்சோறு
உண்டார்கள். மைத்திரி வந்தால்
மகத்துவமென்றார்கள்.

மண்ணாங்கட்டி. மகிந்த காலத்து மான்குட்டியெல்லாம்,
மதில் மேலேரி சிங்க வேஷம் போடுகின்றன.
சங்கதோஷம் பாடுகின்றன. பள்ளியுடைத்த
போது பயமுறுத்த போதான பயம் மீண்டும்
தவ்விக்கொள்கிறது. காவிகள் நம்மைக் கொத்தித்
திண்ணுமோவென்று.

கொச்சை மொழியேனும்
பேசத் தெரியாத கட்சிக்காரர்களை வைத்திருக்கிற நமக்கு
இப்போது மீண்டும்,
சிவப்புச் சட்டைக்காரர் பேச்சுசிறப்பாய் தெரிகிறது.
சிவப்பு ஆட்சிக்கு வந்தால் சாலச் சிறப்பெனத்
தோன்றுகிறது. பச்சை, நீளம் கடந்து,
சிவப்பில் நம்பிக்கை பிறக்கிறது.

காவிகள் கொட்டம் அடங்கிய 'கலர்புல்' ஆட்சியொன்று
கண்ணுக்குள் தெரிகிறது.

மீண்டும் மீண்டும் புதிய புதிய நம்பிக்கைகளோடு
புல்லடியிடத் தயாராவோம்.

பர்மா அகதிகளின் கைக்குழந்தைகள் போல நாம்
அனுதாபத்திற் குறியவர்கள் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• நேசன்

# அதிகாரத்தின் ஆடுகளம்

## ஒரு பாடப் புத்தக உதாரணம்

உலகில் உள்ள நாடற்றவர்களில் எழு பேரில் ஒருவர் ரோஹிங்கியர்கள் என்று ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிபரம் எடுத்துக் காட்டுவதன்படி, உலகின் நாடற்றவர்கள் தொகையில் ரோஹிங்யர்களே அதிகமானவர்கள். 2014 இன் கணிப்பின்படி 1.3 மில்லியன் ரோஹிங்கியர்கள் மியன்மாரிலும், 01 மில்லியின் ரோஹிங்யர்கள் பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான், மலேசியா, இந்தோனேஷியா, சவூதி அரேபியா, தாய்லாந்து ஆகிய நாடுகளிலும் வாழ்கிறார்கள்.

1948 சுதந்திரத்தின்போது அரகான் மாநிலத்தில் வாழ்ந்த மக்களை ரோஹிங்கிய இனமாக அங்கீகரிக்கக் கோரி அரசியலமைப்புப் பேரவை உறுப்பினர் கப்பார் முன்வைத்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனவே ரோஹிங்யர்கள் என்ற ஒரு இனம் மியன்மாரிலே இல்லை என்றும், 1824 இலே ஆங்கிலேயர்கள் பர்மாவை ஆக்கிரமித்தபோது, பங்களாதேஷில் இருந்து கூலிகளாகக் கொண்டுவரப்பட்டவர்களே இவர்கள். ஆகவே இவர்கள் மியன்மார் பிரஜைகள் அல்ல எனவும் இவர்களை நாடற்றவர்களாக மாற்றுவதற்கான வாதங்களாக முன்வைக்கப்படுகின்றன.

ரோஹிங்ய மக்களில் பெரும்பான்மையாக உள்ள முஸ்லிம்கள், 07-08 ஆம் நூற்றாண்டுகளிலேயே இங்கு குடியேறியவர்கள் என்பதையும், இஸ்லாமிய சாம்ராஜ்யத்தில் ஒரு பிரதேசமாக, நரமீஹ்லா சுலைமான் ஷாஹ்வின் தலைமையில் அரக்கான் ஆட்சி செய்யப்பட்டது என்பதையும், பர்மாவின் முதலாவது பெண் பாராளுமன்ற உறுப்பினரான ஸூரா பேகம் உட்பட 05 ரோஹிங்கியர்கள் 1951 பாராளுமன்றத்தில் அங்கம் வகித்ததையும் முற்றாகவே இருட்டடிப்புச் செய்து விட்டுத் தான் இவர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற வலுவான வாதம், அதிகாரவர்க்கத்தின் வசதிக்காக மறக்கடிக்கப்பட்டுள்ளது.

மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நகர்கின்ற உலகின் அதிகார பலம், அமைதியாக இருக்கின்ற ஆசியப் பிராந்தியத்தை தனது பலப்பரீட்சைக்கான ஆடுகளமாக மாற்றிவருகின்றதன், அடையாளங்களே தற்பொழுது வெளித் தெரியத் தொடங்கியிருக்கின்றன. பிராந்தியத்தின் வல்லரசுப் போட்டியில் கயிறிழுத்துக் கொண்டிருக்கும் அமெரிக்க சார்பு இந்தியாவும் கம்யூனிஸ சீனாவும் தத்தமது மேலாதிக்



கத்தை இந்தப் பிராந்தியத்தில் நிறுவுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இஸ்ரேல் விஜயத்தின் பின்னர் கிழிக்கப்பட்ட அமெரிக்க-இஸ்ரேல்-இந்திய இணைகோட்டுக்குப் பின்னர், பிராந்தியத்தில் இந்தியாவின் வல்லாதிக்கத்தை மேம்படுத்தும் முயற்சிகள் பலம் பெற்றிருக்கின்றன. இந்தப் பலப்பரீட்சையின் ஆடுகளமாகவே ரோஹிங்யா மாறியிருக்கிறது.

1824 ஆங்கிலேய ஆதிக்கத்தின் பின்னர் கிழக்கிந்தியக் கம்பனியால் கொண்டு வந்து குவிக்கப்பட்ட இந்தியர்களால் பர்மா மக்களின் சுதேசியம் அற்றுப் போவதற்கு எதிராக இளம் சட்டத்தரணி ஆங்சாங் போராட்டம் நடத்தினார். அவருடைய இந்திய எதிர்ப்பு மனப்பான்மையின் தொடராகவே அவரது மகள் ஆங்சாங் சூகியின் சீனச் சார்பு நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன. 1962 இலிருந்து மிலிடரி ஜுன்டாக்களே மியன்மாரில் ஆட்சி நடத்தி வருகின்றனர்.

ரோஹிங்யர்கள் மீதான இனச் சுத்திகரிப்புக்கு மத்தியில் இந்தியப் பிரதமர் மோடி மியன்மாருக்கு விஜயம் செய்து, முஸ்லிம் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக மியன்மார் அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை பாராட்டியதுடன், இந்த நடவடிக்கைகளில் இந்திய அரசாங்கம் மியன்மார் அரசாங்கத்தைச் சார்ந்திருக்கும் என்றும் தெரிவித்துள்ளார். ஆளுகின்ற மிலிடரி ஜுன்டாக்களும் அதிகாரமில்லாத தலைவி ஆங்சாங் சூகியும் வேறு வேறு தரப்புகளாக இருந்து நல்லாட்சி நடத்தும் நிலை தான் மியன்மாரிலே நிலவுகிறது.

இந்த வகையில் வளங்கள் நிறைந்த ரக்கெய்ன் மாநிலத்தை யார் அனுபவிப்பது என்பதில் பிராந்திய வல்லரசுகளுக்கிடையே நடக்கின்ற போட்டிதான் மனிதாபிமானத்தைக் குழிதோண்டிப் புதைத்து வருகிறது. தமது ஆதிக்கத்தைப் பலப்படுத்துவதற்காக எத்தனை உயிர்களையும் மிருகத் தனமாகப் பலியெடுப்பதற்குத் தயங்காதவர்கள் இவர்கள் என்பதற்குக் கடந்த கால வரலாற்றுச் சான்றுகள் இருக்கின்றன.

ஆட்சிக்கெதிராக 1989 இல் தியனென்மன் சதுக்கத்தில் கிளர்ந்தெழுந்த பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட 300 இற்கும் 1000 இற்கும் இடைப்பட்டோரை புல்டோசர் மூலம் அரைத்துக் கொன்ற வரலாறு சீனாவுக்கு இருக்கிறது. அதேபோல 2002 இல் 1000 இற்கும் மேற்பட்ட சிறுபான்மை முஸ்லிம்களை தீயிலிட்டுக் கருக வைத்த சம்பவத்தின் போது குஜராத்தின் முதலமைச்சராக இருந்த நரேந்திர மோடியின் இந்தியாவுக்கும் அதிகாரத்துக்காக மனிதப்படுகொலை புரிவது புதிய அனுபவமல்ல.

அண்மைய டொக்லம் உடன்பாட்டைத் தவிர, இந்தக் கீரியையும் பாம்பையும் ஒரே இடத்தில் வளர்க்கும் எந்த மண்ணுக்கும் இந்த நிலைமை வரும் என்பதைத் தான் ரோஹிங்யா உணர்த்துகிறது. இனச்சுத்திகரிப்புக்கான பாடப்புத்தக உதாரணமாக ரோஹிங்ய அவலத்தை செய்யித் அல் ஹுஸைன் குறிப்பிட்டது போல, இன்னும் பல பாடப் புத்தக உதாரணங்களை இந்தச் சம்பவங்கள் இதுபோன்ற நாடுகளுக்கு எடுத்துக் காட்டுகின்றன.

கிழக்குலகில் மேலோங்கியிருக்கின்ற மதவாதத்தை தூண்டிவிட்டு அதில் அதிகாரக் குளிர்காய்வது என்பது இந்தப் பாடப்புத்தகத்திலுள்ள முக்கிய உதாரணம். ரோஹிங்யர்களில் ஆறு இனக் குழுமங்கள் இருந்தாலும், ரக்கெய்னில் பெரும்பான்மையாகவுள்ள முஸ்லிம்களுக்கும், மியன்மாரில் பெரும்பான்மையாகவுள்ள பௌத்தர்களுக்கும் இடையிலான பிரச்சினையாகவே இந்தப் புவி அரசியல் பிரச்சினையைக் காட்ட முயற்சிக்கப்பட்டது. அதிர்ஷ்டவசமாக இலங்கையருக்கு மத்தியில் இந்தப் பருப்பு வேகவில்லை.

அடுத்ததாக, தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முன்வந்தவர்களையே எதிரியாகச் சித்திரித்து தமது அக்கிரமத்தை நியாயப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகள். 1947-48 களில் ரோஹிங்யர்களின் இன உரிமையை நிலைநாட்டுவதற்காக போராடிய முஜாஹிதீன்கள் குழுவினர் 1955 இல் அடக்கப்பட்டதில் இருந்து ரோஹிங்ய மக்கள் இனவன்முறைகளுக்கு ஆளாகி வருகின்றனர். இந்த நிலையில் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவென அண்மையில் உருவாகிய ARSA அமைப்பு தமது நாட்டுக்கு அச்சுறுத்தலாக உள்ளதாகவும் அவர்களை அழித்தொழிப்பதற்கே தாக்குதல் நடத்தப்படுவதாகவும் மிலிடரி ஜுன்டாக்கள் காரணம் கற்பித்தனர். இந்த 'நியாயமே' இலங்கையிலுள்ள ஊடகங்களுக்கும் பேசுபொருளாக அமைந்தது கவனிக்கத் தக்கது.

அடிமேல் அடி விழுகின்ற போதும் தமது இனத்துக்கென்று ஆர்ப்பரித்துக் கொண்டு முன்னே செல்லுகின்ற முன் ரோஷக் குழுக்களுக்கு இதுவொரு பாடப் புத்தக உதாரணமாக அமைகிறது.

அகிம்சைக்கு முற்றிலும் மாற்றமான வகையில் அப்பாவி மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட காட்டுமிராண்டித்தனத்தின் பின்னால் இருந்து செயற்பட்டது 969 இயக்கத்தின் பௌத்த தலைவர் அசின் விராது என்பது உலகம் அறிந்த உண்மை. இருந்த போதிலும், இந்தப் பயங்கரவாதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவோ, அவரைத் தேடிப் படை எடுக்கவோ அல்லது அவரால் பாதிப்புக்குள்ளாகின்ற மில்லியனுக்கும் மேற்பட்ட மக்களை பாதுகாப்பதற்கு அமைதிப்படை அனுப்பவோ எந்த உலக அமைப்புக்களும் முன்வரவில்லை. பயங்கரவாதம், பயங்கரவாதி, அப்பாவி மக்கள் என்பதெல்லாம் அவரவர் வசதிக்கேற்ப செய்து கொள்ளப்படும் கற்பிதங்கள்தான் என்பதற்கு ரோஹிங்யா நல்லதொரு பாடப் புத்தக உதாரணம்.

கீரியையும் பாம்பையும் ஊட்டி வளர்க்கின்ற இலங்கைச் சரணாலயத்தின் மக்களுக்கும் இதில் பல முன்னுதாரணங்கள் இருக்கின்றன. நாட்டிலே தற்போது விதைக்கப்பட்டு வருகின்ற பகைமை உணர்வுகள் மனிதத் தன்மையை குழிதோண்டிப் புதைக்கும் அளவுக்கு வளர விடாமல் சகல இனங்களும் கவனம் செலுத்த வேண்டும். வெளிச்சக்திகளின் தேவைக்காக நாட்டிலே அடாவடித்தனம் புரிவதைத் தவிர்த்து சகல இனங்களையும் இணைத்து நாட்டை வளப்படுத்துகின்ற முறைமை பற்றியே நமது அவதானம் இருக்க வேண்டும்.

கடலிலே தத்தளித்த ரோஹிங்யர்களை காப்பாற்றிக் கரைசேர்த்து உரியவர்களிடம் ஒப்படைக்கின்ற பணியை 2008 ஆம் ஆண்டிலிருந்து நமது கடற்படை செய்து வருகின்றது. கடற்படையின் இந்த மனிதாபிமான உணர்வுதான் இன்று நாட்டுக்குத் தேவைப்படுகிறது. ரோஹிங்யர்களின் பிரச்சினையையும் அப்போது தான் நமக்கு மனிதாபிமானப் பிரச்சினையாகப் பார்க்க முடிகிறது.

---

• பேராசிரியர் அ. மார்க்ஸ்

# ரோஹிங்யா முஸ்லிம்கள்

## அகதிகளா, சட்டவிரோதக் குடிகளா?

ஆகஸ்ட் 25 இலிருந்து தினசரி 15,000 முஸ்லிம்கள் மியன்மாரிலிருந்து தப்பி ஓடி வருகின்றனர் என ஐ.நா. அவையின் மனித உரிமை கவுன்ஸில் (UNHRC) தெரிவித்துள்ளது. ஆகஸ்ட் முதல் பத்து நாட்களில் சுமார் 150,000 பேர் தப்பி ஓடி வந்துள்ளனர்.

சென்ற ஆகஸ்ட் 24 அன்று அராக்கான் ரோஹிங்யா பாதுகாப்புப் படை (Arakan Rohingya Salvation Army & ARSA) எனும் தீவிரவாத அமைப்பு மியன்மாரின் வடமேற்குப் பகுதியில் உள்ள ரெகைன் மாநிலத்தைச் சேர்ந்த சுமார் முப்பது காவல் நிலையங்களைக் குறிவைத்துத் தாக்கியதைச் சாக்காகக் கொண்டு அம்மக்கள் மீதான இன்றைய இராணுவத் தாக்குதல் தொடங்கியது. அரக்கான் படையின் தாக்குதல் மற்றும் எதிர் தாக்குதலில் சுமார் 12 காவலர்களும் 59 தீவிரவாதப் படையினரும் கொல்லப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

அதை ஒட்டி இராணுவம் ரோஹிங்யா மக்களின் மீது கடுமையான தாக்குதல்களைத் தொடங்கியது. பெரியளவில் முஸ்லிம் கிராமங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. இராணுவத்தின் தாக்குதலின் விளைவாக அவர்கள் தப்பி ஓடும் நிலை ஏற்பட்டுள்ளது. தாக்குதலுக்கு அஞ்சித் தப்பி ஓடி வரும் அப்பாவி மக்களையும் இராணுவம் சுட்டுத் தள்ளிய செய்திகள் பத்திரிகைகளில் வந்தன. இதுவரை கிட்டத்தட்ட 400 பேர் கொல்லப்பட்டதாகத் தெரிகிறது.

தரைவழி தவிர கடல்வழியாகவும் இம்மக்கள் தப்பி ஓடி வருகின்றனர். பாதுகாப்பற்ற கடல் பயணத்தில் விபத்துக்கள் ஏற்பட்டு சிலர் மரணித்த செய்திகளும் வந்துள்ளன.

ரோஹிங்யா தீவிரவாதிகள் முஸ்லிம் அல்லாதவர்களைக் கொல்கிறார்கள் எனவும், தமது கிராமங்களைத் தாமே கொளுத்திக் கொள்கிறார்கள் எனவும்



மியன்மார் இராணுவம் குற்றம் சாட்டுவதை ரோஹிங்யா மக்களும் பன்னாட்டு மனித உரிமைப் போராளிகளும் கடுமையாக மறுத்துள்ளனர். ஐ.நா. அதிகாரி ஒருவர், அங்கு நடப்பது மனித குலத்துக்கு எதிரான குற்றம் (Crime against Humanity) என்று கூறியுள்ளார். உலகில் மிக அதிகமாகத் துன்புறுத்தப்பட்ட சிறுபான்மை மக்கள் என ஐ.நா. மனித உரிமை அமைப்பு இம்மக்களை வரையறுத்துள்ளது.

பதவியில் இல்லாத போதும் மியன்மாரில் இன்று பெரியளவில் அதிகாரத்தைக் கையில் வைத்துள்ளவரும், ஜனநாயக தேவதையாகக் கொண்டாடப்படுபவரும், சமாதானத்துக்கான நோபல் பரிசைப் பெற்றவருமான ஆங்சாங் சூகி கடைசி வரை மௌனம் காத்தார். அவருக்குக் கொடுக்கப்பட்ட அமைதிக்கான நோபல் பரிசை திரும்பப் பெற வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்ற பின் இறுதியாக வாயைத் திறந்தார்.

மனித உரிமைகள் மீறப்படுவதாலும், ஜனநாயகப் பாதுகாப்புகள் அற்றுப் போவதாலும் ஏற்படும் பாதிப்புக்களைப் பற்றி எங்களுக்கு நிறையவே தெரியும் எனக் கூறியது தவிர அவர் வேறெதும் பெரிதாகச் சொல்லவில்லை.

இது ஒருபுறம் இருக்க பா.ஜ.க. அரசும் பரிவார அமைப்புக்களும் தொடர்ந்து ரோஹிங்யா முஸ்லிம்கள் மீது வெறுப்பை பரப்பிக் கொண்டே இருந்தன. இங்குள்ள ரோஹிங்யா அகதிகளை வெளியேற்ற வேண்டும் என ஆர்ப்பாட்டங்களை எல்லாம் நடத்திக் கொண்டிருந்தன.

ரோஹிங்யா முஸ்லிம்கள் உட்பட சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்துள்ள அனைத்து வெளிநாட்டவரையும் (Illegal immigrants) வெளியேற்றப் போவதாக சென்ற மாதம் உள்துறை துணை அமைச்சர் கிரண் ரிஜிஜூ நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தியாவில் தற்போது 40,000 ரோஹிங்யா முஸ்லிம்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் 16,000 பேர்களுக்கு துன்புறுத்தப்படுதல், போதிய காரணமின்றிக் கைது செய்யப்படுதல் போன்றவற்றால் இடம்பெயர நேரிட்டவர்கள் என ஐ.நா. அவையின் அகதிகளுக்கான உயர் ஆணையர் பதிவுசெய்து அடையாள அட்டையும் வழங்கியுள்ளார். மற்றவர்களுக்கும் இப்படி அடையாள அட்டை வழங்கும் நிலை உள்ளது.

இது குறித்துக் கேட்டபோது ரிஜிஜூ, அவர்கள் பாட்டுக்குப் பதிவு செய்து கொண்டுள்ளனர். அதை எங்களால் தடுக்க முடியாது. ஆனால் அகதிகளுக்கான ஐ.நா. உடன்பாட்டில் இந்தியா இதுவரை கையெழுத்திடவில்லை என அலட்சியமாகப் பதிலளித்தார். அகதிகளுக்கான ஐ.நா. உடன்பாட்டில் தாம் கையெழுத்திடாததால் ஐ.நா. வழங்கியுள்ள அடையாள அட்டையை வைத்திருந்தாலும் அவர்களை நாங்கள் வெளியேற்றுவதைத் தடுக்க முடியாது என்பது இதன் பொருள்.

இந்தியாவுக்கு என தேசிய அளவிலான ஒரு அகதிகள் கொள்கை கிடையாது. அகதிகள் குறித்த ஐ.நா. ஒப்பந்தத்தில் அது கையெழுத்து இடவுமில்லை. இதன் விளைவாக அகதிகளைக் கையாள்வதில் அது ஒவ்வொரு பிரச்சினையிலும் ஒவ்வொரு மாதிரி நடந்து கொள்கிறது. திபத்திய அகதிகளை ஒரு மாதிரியாகவும், ஈழ அகதிகளை சற்றே அலட்சியமாகவும் நடத்த முடிகிறது. ராஜீவ் கொலையை ஒட்டி கிட்டத்தட்ட ஒரு இலட்சம் ஈழத் தமிழ் அகதிகள் போர் நடந்து கொண்டிருந்த இலங்கைக்கு கட்டாயமாக திருப்பி அனுப்பப்பட்டது நினைவிருக்கலாம்.

துன்புறுத்தப்பட்டு தங்களின் சொந்த நாட்டில் வாழ முடியாமல் இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களைப் பொறுத்த மட்டில் அவர்களை அகதிகளாகத்தான் கருத வேண்டுமே ஒழிய சட்டவிரோதக் குடியேறிகள் (Illegal Immigrants) எனச் சொல்வது அறமுமல்ல, வழமையுமல்ல. மனித உரிமைப் பிரச்சினைகளில் இந்தியா எப்போதும் பன்னாட்டளவில் மிகவும் அறக்கேடாகத்தான் நடந்து வருகிறது. உலக அளவிலான மனித உரிமை தொடர்பான உடன்பாடுகளில் அது அவ்வளவு எளிதாகக் கையெழுத்து இட்டு விடுவதில்லை.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL

49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# எல்லை மீள்நிர்ணயத்தையும் கோட்டை விட்டுவிடாதிருக்க...

அடுத்த தேர்தல்தான் அரசியல்வாதிகளுக்குப் பாடம் புகட்டுவதற்கான சரியான தருணம் என்று எண்ணிக் கொண்டிருக்கும் சமூகங்களால்தான் அரசியல் கெட்டுப் போயிருக்கிறது. தமக்கு மக்களால் வழங்கப்பட்ட அரசியல் அதிகாரத்தை வைத்து தமது சுயலாபங்களைப் பெற்றுக் கொள்வதேயன்றி சமூகத்தைப் பற்றியோ நாட்டைப் பற்றியோ எந்த அக்கறையுமின்றிச் செயற்படுவதற்கு மக்களே அவர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கின்றார்கள். தங்களுக்குக் கிடைக்கின்ற எச்சில்களுக்காக வாலையாட்டி விட்டு மீண்டும் அடுத்த தேர்தலுக்காக இந்த மக்கள் காத்திருக்கிறார்கள்.

தற்போது நிறைவேற்றப்பட்டு வருகின்ற முக்கியமான அரசியல் தீர்மானங்களின்போது அரசியல் தலைமைகள் நடந்து கொள்கின்ற பொறுப்பற்ற விதம் பற்றித் தட்டிக் கேட்கும் திராணியில்லாத சமூகமாகவே இலங்கை முஸ்லிம் சமூகம் இருக்கிறது. சமூகத்தை ஆபத்தில் தள்ளிவிடக் கூடிய பல்வேறு தீர்மானங்களுக்கும் எந்தத் தயக்கமுமின்றி முஸ்லிம் தலைமைகள் கைதூக்கி ஆதரவு தெரிவிப்பதை முதுகெலும்பில்லாத ஒரு சமூகம் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

ஜனாதிபதியின் மட்டற்ற அதிகாரத்தை அதிகரித்து வாழ்நாள் முழுவதும் ஜனாதிபதியாக்கக் கூடிய வகையில் கொண்டுவரப்பட்ட 18 ஆம் திருத்தத்துக்கு முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஆதரவு தெரிவித்து வாக்களித்தனர். பின்னர் அந்த அதிகாரத்தைக் குறைப்பதற்குக் கொண்டு வரப்பட்ட 19 ஆம் திருத்தத்துக்கும் இவர்கள் ஆதரவளித்தனர். எந்த விதமான நிலைப்பாடுகளுமின்றி தமது பதவியைத் தக்க வைத்துக் கொள்வதை மட்டும் குறியாக வைத்தே இவர்கள் செயற்படுகின்றனர் என்பதை 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு கிழக்கு மாகாண சபை தெரிவித்த ஆதரவு தெளிவாக எடுத்துக் காட்டியது. இன்னும் ஒரு வருட காலம் பதவியில் இருப்பதற்காகவே மாகாண சபைகளின் அதிகாரத்தைக் குறைப்பதற்கான திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவளிக்கப்பட்டது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவமே சிறுபான்மைக்குத் தீர்வு என்பதையும், புதிய தேர்தல்கள் சட்டத்தினால் சிறுகட்சிகளுக்குப் பாதிப்பு என்பதையும் வாய்கிழியக் கத்தி, பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளையும் நடத்தி விட்டு 50:50 தீர்வுக்கு ஆதரவாகவும் வாக்களித்து விட்டு வருகிறது இந்த அரசியல் தலைமைகள்.

இந்த இலட்சணத்தில் அடுத்து முன்வைக்கப்படவிருக்கின்ற எல்லை மீள்நிர்ணயத்தில் இந்த அரசியல் வியாபாரிகள் முஸ்லிம் சமூகத்துக்கு எதையாவது பெற்றுத் தருவார்கள் என்று எதிர்பார்க்குமானால் அது முஸ்லிம் சமூகத்தின் முட்டாள்தனமேயன்றி வேறில்லை. இந்த நிலையில் வங்குரோத்தாகிப் போன முஸ்லிம் தலைமைகளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதை விட சிவில் அமைப்புக்கள் ஒன்று திரண்டு தமக்கான தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சித்தாக வேண்டும்.

எல்லை மீள்நிர்ணயத்தினால் சிறுபான்மைச் சமூகங்கள் பெரியதொரு பாதிப்பை நிச்சயமாக எதிர்நோக்கியிருக்கும் நிலையில், இந்தப் பணிக்காக சமூகத்தில் உள்ள சிவில் நிறுவனங்கள் இணைந்து, இதற்கென ஒரு தனியான அமைப்பை ஏற்படுத்திச் செயற்பட வேண்டும். இந்தப் பணியில் மக்கள் காட்டுகின்ற விரைவும் காத்திரமான செயற்பாடுகளும் தான் முஸ்லிம் சமூகத்துக்கு தீர்வைப் பெற்றுத் தரும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. : 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011-5353635
பெக்ஸ் : 011-5335500
ஈமெயில் : srockwood@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# சீர்திருத்தங்கள் யாருக்கு?

• ஹெட்டி ரம்ஸி

இலங்கையில் ஜனநாயகத்தை நிலைநாட்ட எவ்வளவு தொகை செலவாகின்றது என்பது இந்நாட்டில் ஒருவருக்கும் தெரியாது. அதைக் கணக்கிடுவது அவ்வளவு இலகுவான விடயமல்ல. மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கு பிரதேச, மாகாண, தேசிய மட்டங்களில் தேர்தல்கள் நடாத்தப்படுகின்றன.

இது தவிர மக்களின் வாக்குகளாலேயே நிறைவேற்று அதிகார மிக்க ஜனாதிபதியும் தெரிவுசெய்யப்படுகின்றார். தெரிவுசெய்வதற்கு மேலதிகமாக அவர்களைப் பராமரிப்பதற்கும் கூடுதலான நிதி செலவு செய்யப்படுகிறது. அந்நிதியானது இந்நாட்டு பொருளாதாரத்தின் ஒரு பகுதியாகும். மக்கள் செயற்பாட்டின் தன்மையைப் பொறுத்தே பொருளாதாரம் உருவாகின்றது. அரசின் வருமானத்திற்காக வேண்டி சகல பக்கத்திலிருந்தும் வரி அறவிடப்படுகின்றது.

அரசாங்கம் இவ்வரியினை மக்கள் நலனுக்காகவும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்காகவும் செலவு செய்வதாக தெரிவிக்கின்றது. இருந்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களுக்கான செலவு தொடர்பில் நாட்டில் பொதுவானதொரு விமர்சனம் உள்ளது. ஜனாநாயகத்தின் பெயரிலேயே உள்ளூராட்சி மன்றங்களுக்கும் மாகாண சபைகளுக்கும் பாராளுமன்றத்திற்குமான மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்றார்கள்.

இந்நடவடிக்கை செலவைக் கட்டுப்படுத்தும் மக்களின் கௌரவத்தை பாதுகாக்கும் விடயமாக இருக்க வேண்டும். இவ்வாறான நிலையில் மக்கள் பிரதிநிதிகளை இன்னுமின்னும் அதிகரிக்கின்ற தீர்மானத்திற்கு பொதுமக்களின் உடன்பாடு பெறப்பட்டதா என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும்.

புதிய உள்ளூராட்சிமன்ற சீர்திருத்தச் சட்டத்தின் படி, ஜனநாயக ஆட்சியின் கீழ் மட்டப் பிரிவின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படவுள்ளது. தற்பொழுது நாடு முழுவதிலும் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் 4,739 பிரதிநிதிகள் உள்ளார்கள். 2016 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டத்தின் படி, இப்பிரதிநிதிகளின் எண்ணிக்கை மூன்றில் ஒன்றாக, அதாவது குறைந்தபட்சம் 1580 பேர்களால் அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன. 1987 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் படி, நாடு முழுவதிலுமுள்ள 9 மாகாண சபைகளில் 383 பிரதிநிதிகள் உள்ளார்கள்.

இதுபோக ஆளுநர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். புதிய திருத்தத்தின் பிரகாரம் 40,000 பிரஜைகளுக்கு ஒரு மாகாண சபை உறுப்பினர் நியமிக்கப்படுவதற்கான வாய்ப்புள்ளது. குறைந்தபட்சம் 530 பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவார்கள். அதிகாரத்தைப் பகிரும் பிரிவொன்றாக 13 ஆவது திருத்தத்தில் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறை இன்று எதிர்பார்த்த அளவில் வெற்றியை தரவில்லை என்கின்ற விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

அரசியலமைப்பிலும் இது விடயம் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டிய நிலையில் அதை ஒரு புறத்தில் வைத்து விட்டு மாகாண சபையை இன்னும் விரிவுபடுத்துவதற்கு தயாராகி வருகிறார்கள்.

தற்பொழுது பாராளுமன்றத்திற்கு 225 பேர் தெரிவுசெய்யப்படுகின்றார்கள். புதிய அரசியலமைப்பு திருத்தத்தின்படி, இத்தொகை இன்னும் அதிகரிக்கப்படவுள்ளது. கடந்த தினம் அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கை பாராளுமன்றில் சமர்பிக்கப்பட்டது. இதில் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 233 ஆக அதிகரிக்கப்பட வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. 50 பேரை கொண்ட செனட் சபையொன்றும் உருவாக்கப்பட வேண்டும் என அதில் முன்மொழியப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக இலங்கையில் செனட் சபையொன்று காணப்படவில்லை. செனட் சபையில் நியமிக்கப்படுகின்றவர்களுள் இருவருக்கு கபினட் அமைச்சுப் பதவி வழங்கப்பட வேண்டும் என்ற யோசனையும் அதில் முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்விரு பதவிகளும் போதாதென்றும் 10 கபினட் அமைச்சுப் பதவிகளை வழங்க முடியுமான வகையில் செனட் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 60 ஆக அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

நாட்டை ஆட்சி செய்வதற்கே அரசாங்கம் தெரிவுசெய்யப்படுகின்றது. ஆனால் தெரிவுசெய்யப்படுகின்ற மக்கள் பிரதிநிதிகள் நாட்டிற்கு பேரிடியாய்ப் போயுள்ளனர். பிரதிநிதிகளை நடத்துவது இலகுவான காரியமல்ல. இவ்வாறு இருக்கையில் தலைவலிக்கு மாற்றிய தலையனை பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தவுள்ளது.

மக்கள் அரசியலமைப்பை சீர்திருத்துமாறு வேண்டுகோள் விடுத்ததாக எமக்கு நினைவில்லை. தமது உள்ளூராட்சி மன்றம் அல்லது மாகாண சபைத் தேர்தலை ஒரே தினத்தில் நடாத்துமாறு அதிகாரிகளை வலியுறுத்தவுமில்லை. அவ்வாறு வலியுறுத்துவதாக இருந்தால் மக்களிடம் மாற்றுக் கருத்தே இருந்திருக்கும். ஒருநாளில் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் மற்றொரு தினத்தில் மாகாண சபைத் தேர்தலையும் நடத்தாமல் ஒரே தினத்தில் ஜனாதிபதி, பாராளுமன்றம், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடாத்தி அங்கத்தவர்களை தெரிவுசெய்யும் முறையொன்றையே சிபாரிசு செய்திருப்பார்கள். அது சிக்கலான விடயம் என்றாலும் இன்றைய தொழில்நுட்ப உலகில் அது செய்ய முடியாததொரு விடயமல்ல.



இன்றைய மக்கள் புத்திஜீவிகள். அதன் படி, பல வாக்குச் சீட்டுக்களை அடையாளமிட்டு ஒரே நாளில் ஆட்சி மாற்றத்தை செய்வது ஒன்றும் கடினமான விடயமல்ல. அதன் மூலம் அதிகூடிய நிதித்தொகையை மீதப்படுத்திக் கொள்ள முடிகிறது. அத்தகைய முன்னேற்றகரமான சீர்திருத்தத்திற்கு தயாரில்லாத இந்நாட்டின் அதிகாரிகள் மிகவும் குறுகிய வழிமுறையில் பிரதிநிதிகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டுள்ளார்கள்.

இது எமக்கு தருகின்ற பாடங்கள் என்ன? இச்சீர்திருத்தங்கள் ஒன்றும் மக்களுக்கு தேவையானவை அல்ல. ஜனநாயக ஆட்சியை முன்னெடுப்பதாக கூறி அதிகாரத்திற்கு வரும் அரசியல்வாதிகள் தமது இருப்பை தக்கவைத்துக்கொள்ள மேற்கொள்ளும் பிரயத்தனங்களே இவை. இது மிகவும் மோசமான செயல் என்பதை தெரிவிக்க வேண்டியுள்ளது.

புதிய அரசியலமைப்பின் படி, பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரித்தால் என்ன நடக்கும்? அதன் சுமையும் பொதுமக்கள் மீதே சுமத்தப்படும். அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் முதல் புதிய வரி ஒழுங்கு அமுலுக்கு வரவுள்ளது. மறைமுக வரி குறைக்கப்பட்டு நேரடி வரி அதிகரிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்கு மக்கள் எவ்வளவு வரியை செலுத்துகிறார்கள் என்பதை நேரடியாகத் தெரிந்து கொள்வதற்குரிய முறையொன்று ஏற்படுத்தப்பட்டால் சிறந்தது. புதிய யோசனைக் கமைய உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் தொகையை அதிகரித்தால் உள்ளூராட்சி மன்ற சபைகளின் கேட்போர் கூடத்தில் உள்ள கதிரை, மேசைகளின் எண்ணிக்கையும் போதாமல் போகும் என்பதாக தற்பொழுது கலந்துரையாடி வருகிறார்கள்.

புதிய கட்டிடங்கள், புதிய கதிரை மேசைகளினால் பொதுமக்களின் அன்றாட பிரச்சினைகளை தீர்க்க முடியுமா? கிராமங்களின் வீதி, வீதிக்கு மின்விளக்குகளை மாற்றுவதற்கும் குப்பைகளைச் சேகரிப்பதை துரிதப்படுத்துவதற்கும் பிரதிநிதிகளின் தொகை அதிகரிக்கப்பட வேண்டுமா? தற்பொழுது நிகழும் அமைப்பில் நோக்கினால் பேச்சை அல்லது வாதத்தை அதிகரிப்பதற்கே இவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளார்கள் என்பது தெரிகிறது.

சும்மா கதைப்பதற்கு மக்கள் பிரதிநிதிகள் தேவையா? மாகாண சபை மற்றும் பாராளுமன்றம் தொடர்பிலும் மக்கள் மத்தியில் நல்லதொரு மனப்பதிவில்லை. அங்கு அடிக்கடி வெட்டிப் பேச்சுக்களும் மோதல்களுமே காணப்படும். இதுவே யதார்த்தம். அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை அதிகரித்தன் பின்பு அவர்களுக்கான வாகனச் செலவு, அலுவலகம், வீடு, எரிபொருள், பாதுகாப்பு என்பதாக புதிதாக சேர்கின்ற செலவுகளை மதிப்பிட்டும் பார்க்க முடியாது.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மாதாந்தச் சம்பளம் 54285 ரூபாவாகும். பிரதியமைச்சர் ஒருவருக்கான சம்பளம் 63500 ரூபாவாகும். அமைச்சர் ஒருவரின் சம்பளம் 65000 ரூபா. இது தவிர ஒரு பாராளுமன்ற தொடரில் கலந்துகொள்ள 2500 ரூபா வழங்கப்படுகின்றது. மாதாந்தம் 8 நாட்கள் பாராளுமன்றம் கூடும். 8 நாட்களுக்கும் 20,000 ரூபா கிடைக்கும். அமைச்சரொருவருக்கு 2 வாகனங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். பிரதியமைச்சருக்கும் 2 வாகனங்கள் வழங்கப்பட்டிருக்கும். சகல அமைச்சர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் 62500 அமெரிக்க டொலர் பெறுமதியான தீர்வை வரியற்ற வாகனமொன்றை கொள்வனவு செய்துகொள்ளும் சலுகையும் வழங்கப்பட்டுள்ளது.

இதுதவிர, மேல் மாகாணத்திற்கு வெளியில் உள்ள அமைச்சர் ஒருவருக்கு எரிபொருள் செலவாக பெற்றோல் வாகனத்திற்கு மாதாந்தம் 75,000 ரூபாவும் டீஸல் வாகனத்திற்கு 30,000 ரூபாவும் வழங்கப்படுகின்றது. மேல் மாகாணத்திற்குள் உள்ள அமைச்சருக்கு பெற்றோல் வாகனத்திற்கு 50,000 ரூபாவும் டீஸல் வாகனத்திற்கு 20,000 ரூபாவும் வழங்கப்படுகின்றது. மேல் மாகாணத்திற்கு வெளியில் உள்ள பிரதியமைச்சர் ஒருவருக்கு பெற்றோல் வாகனத்திற்கு 65000 ரூபாவும், டீஸல் வாகனத்திற்கு 30,000 ரூபாவும் வழங்கப்படுகின்றது.

மேல் மாகாணத்திற்குள் உள்ள பிரதியமைச்சருக்கு பெற்றோல் வாகனத்திற்கு 40,000 ரூபாவும் டீஸலுக்கு 20,000 ரூபாவும் வழங்கப்படுகின்றது. தீர்வை வரியற்ற வாகனத்தை இறக்குமதி செய்யும் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பெரும்பாலான அமைச்சர், உறுப்பினர்கள் தீர்வை வரியற்ற வாகனங்களை கூடுதல் விலைக்கு விற்பனை செய்கின்றார்கள் என்பது ஒன்றும் இரகசியமல்ல. 5 வருடங்களுக்கு ஒரு தடவை தீர்வை வரியற்ற வாகனக் கொள்வனவிற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது. இவ்வகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொட்டு பிரதியமைச்சர் அமைச்சர்கள் வரையில் சலுகைகளின் பட்டியலை அடிக்கிக் கொண்டே செல்லலாம்.

புதிய திருத்தங்களின் மூலம் மக்கள் பிரதிநிதிகளை அதிகரிப்பதால் நாட்டின் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள முடிகிறது என்றிருந்தால் சுதந்திரம் பெற்ற நாள் முதல் இன்று வரையில் செய்யப்பட்ட சீர்திருங்களால் சாதகமான விளைவுகளை பெற்றிருக்க வேண்டும். மக்களிடம் வினவினால் அவர்கள் ஒரே பதிலையே அளிப்பார்கள். "தேர்தல் காலங்களில் வருவார்கள் அதற்கு பின்னர் அவர்களை கண்டுகொள்ள முடியாது." நாட்டிற்கு இப்படிப்பட்டதொரு பின்னணி இன்னும் உருவாக்கப்பட வேண்டுமா?

உலகின் ஏனைய நாடுகள் ஜனநாயகத்தை வேறு கோணங்களில் நோக்குகிறார்கள். மக்களின் தேவைகளை மிக விரைவில் நிறைவேற்றுவதற்கு தொழில்நுட்பத்தை பயன்படுத்துகிறார்கள். பொதுமக்கள் சேவைக்காக வேண்டி ஸ்மாட் நகரங்களை நிர்மானிக்கின்றார்கள். இவ்வாறான நிலையில் இலங்கை இன்னும் எவ்வளவோ தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. முன்னேற்றகரமான திட்டங்களே இன்றைய யுகத்தில் நாட்டிற்கும் உலகிற்கும் தேவை என்பது எழுதப்பட்ட நிபந்தனையாக உள்ளபோது இன்னும் காலம் கடந்த திருத்தங்களை புதிதுபடுத்தி மக்களை மடையர்களாக்கும் ஆட்சியாளர்களின் திட்டம் எப்போது முற்றுப்பெறும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றவூப் ஸெய்ன்

நல்லாட்சி அரசியல்

# மாகாண சபை திருத்தச் சட்ட மூலம்



# வென்றது அரசாங்கம் தோற்றது ஜனநாயகம்

செப்டம்பர் 20 அன்று பாராளுமன்றத்தில் அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்ட மாகாண சபை திருத்தச் சட்ட மூலம் இலங்கையின் ஜனநாயகத்துக்குக் கிடைத்த மிகப் பெரிய தோல்வியாகும். வாக்கெடுப்பில் அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு வெற்றி பெற்றது. இது நல்லாட்சிக்குக் கிடைத்த ஆதரவு என்றும் அரசாங்கம் கூறிக் கொள்கின்றது. நல்லாட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ் முஸ்லிம் சிறுபான்மைக் கட்சிகள் ஆரம்பத்தில் இதனை எதிர்த்த போதும் பின்னர் அதற்கு ஆதரவாக கைகளை உயர்த்தியுள்ளனர்.

இச்சட்ட மூலம் நிறைவேற்றப்பட்ட முறைமை, நடந்தேறிய அவசரம், தொடக்கத்தில் ஆட்சேபித்த சிறுபான்மை கட்சிகள் பின்னர் ஆதரவளித்தமை இவற்றை உன்னிப்பாக நோக்கும் போது இலங்கையின் ஜனநாயகப் பாரம்பரியங்களை மாகாண சபை திருத்தச் சட்டமூலம் மீறியுள்ளதாகவே பலராலும் பார்க்கப்படுகின்றது.

20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் முயற்சித்தபோது, அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம் எனவும், மக்கள் கருத்தெடுப்பிற்கு அது உட்பட வேண்டும் எனவும் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு அது முரணானது எனவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதில் தோல்வியடைந்த கையோடு அரசாங்கம் மாகாண சபை திருத்தச் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளது.

நீதிமன்றத் தீர்ப்புக்களை நல்லாட்சி அரசாங்கம் மதித்துச் செயல்படுவது போன்ற ஒரு விம்பம் வெளிப்படையில் கட்டமைக்கப்படுகின்றபோதும், நீதித் துறையை கையாள்வதில் முன்னைய ஆட்சிக்கும் தற்போதுள்ள ஆட்சிக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் எதுவும் தென்படவில்லை. நீதித் துறையை தனது கைப்பிடியில் வைத்திருந்த மஹிந்த, நீதிபதிகளை தனது சொற் கேட்டு நடக்கும் அதிகாரிகளாகவே நடத்தி வந்தார்.

தேவையான நேரத்தில் தனக்கு வசதியான தீர்ப்புக்களை நீதிமன்றங்கள் மூலம் பெற்று, அவரது அரசியல் ஆட்டத்தைத் தொடர்ந்தார். மூன்றாம் முறை தேர்தலில் குதிப்பதற்கான 18 ஆம் திருத்தம் குறித்த நீதிமன்றத் தீர்ப்பு அவர் எதிர்பார்த்தது போலவே கிடைத்தது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் எதிர்பார்த்தது போன்று நீதிமன்றத் தீர்ப்பு கிடைக்கப் பெறாததினால் தலைமை நீதிபதியான ஷிராணி பண்டாரநாயக்கவை முன்னைய அரசாங்கம் தூக்கியெறிந்தது. நீதித் துறையில் சுயாதீனம் இவ்வாறுதான் கிடப்பில் போடப்பட்டது.

நீதி ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்று. அதை யார் எந்த வகையில் மீறினாலும் அது ஜனநாயக விரோத செயலே. மாகாண சபைத் தேர்தலுக்குச் செல்வதற்கு நல்லாட்சியில் இணைந்திருக்கும் இரு கட்சிகளும் அஞ்சுகின்றன. மக்கள் ஆதரவு குறைந்திருக்குமோ என்ற ஊகம் வலுவாக நிலவுகின்றது.

திருத்தச் சட்டமொன்றை நிறைவேற்றுவதாயின், அதனை வர்த்தமானியில் வெளியிட்டு மக்களின் அபிப்பிராயத்தைப் பெற மக்களுக்கு குறைந்தது இரு வார கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். அக்காலப் பகுதியில் மக்களிடமிருந்தும் அரசியல் பிரதிநிதிகளிடமிருந்தும் கிடைக்கப் பெறும் ஆலோசனைகள், கருத்துக்களை உள்ளடக்கிய சட்ட மூலமே வாக்கெடுப்பிற்கு விடப்பட வேண்டும்.

இந்த அடிப்படைத் தத்துவத்தை மீறி இரு பெரும் அரசியல் கட்சிகளின் நலன்களுக்காக ஒரே நாளில் மாகாண சபை திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியமை ஜனநாயக விழுமியங்களை மீறும் செயலாகவே விமர்சிக்கப்படுகின்றது.

30% மான இடங்களை பெண்களுக்கு ஒதுக்குவதனை உறுதிப்படுத்தும் சட்டமூலம் ஏற்கனவே நிலுவையில் உள்ளது. அதனை நிறைவேற்றிக் கொள்வதோடு, தொகுதி வாரி மற்றும் வீதாசார முறைகள் உள்ளிட்ட கலப்புத் தேர்தல் முறையொன்றை மாகாண சபைத் தேர்தலில் அறிமுகப்படுத்துவதற்கே மாகாண சபை திருத்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமாயின் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டும். அதற்கான எல்லைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும். உறுப்பினர்களின் தொகை தீர்மானிக்கப்பட வேண்டும். எல்லை நிர்ணயித்தலின்போது ஏற்படும் ஐயங்களையும் முரண்பாடுகளையும் களைய வேண்டும். இவற்றைச் செய்வதற்கு ஆகக் குறைந்தது 6 மாதங்கள் தேவை. இதனை கருத்திற்கொண்டே பிரதமர் ரணில் மாகாண சபைத் தேர்தல்களை 2018 மார்ச் மாதளவில் நடத்த முடியும் என்கிறார்.

இக்கால இடைவெளியில் கட்சித் தொண்டர்களை உசார்படுத்தலாம். வாக்கு வங்கிகளை கொள்ளையடிக்கும் மூலோபாயங்களை வகுக்கலாம். செல்வாக்குச் சரிந்துள்ள தொகுதிகளில் வாக்காளர் அலைகளை அதிகரிக்கலாம் என்று அரசாங்கம் எண்ணுகின்றது. அதற்காகவே இச்சட்ட மூலத்தை நிறைவேற்றியுள்ளது. இதனால், ஏற்கனவே காலாவதியான மாகாண சபைகளின் ஆயுட்காலம் நீடிக்கப்படுகின்றது.

நீடிக்கப்படும் இந்த கால இடைவெளியில் மாகாணத்தின் நிர்வாக நடவடிக்கைகளின் அதிகாரம் அனைத்தும் ஆளுநரின் கையில் ஒப்படைக்கப்படுவதுதான் மிகுந்த ஆட்சேபனைக்குரிய விடயமாகும். வாக்களிப்பின் மூலம் மக்களாணை பெற்ற முதலமைச்சர் அதிகாரத்தில் இருக்க, அவருக்கு மேல் அவரையே கையாளும் உயர் அதிகாரம் கொண்ட ஆளுநர் நியமன முறையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். மத்திய அரசாங்கத்தின் நேரடிப் பிரதிநிதியான ஆளுநர் மாகாண சபை நிருவா கத்தில் மூக்கை நுழைப்பதும் அநாவசியமாகத் தலையிடுவதும் கடந்த காலங்களில் பெரும் அரசியல் தலைவலியாகவே பார்க்கப்பட்டது.

இப்போது மாகாண சபை திருத்தச் சட்டம் மூலம் என்ன நிகழப் போகின்றது. 2017 செப்டர்பர் 24 உடன் கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட வேண்டும். ஆனால், நிறைவேற்றப்பட்டுள்ள மாகாண சபை திருத்தச் சட்டத்தின் மூலம் அதன் பதவிக் காலம் இன்னும் ஆகக் குறைந்தது ஒரு வருடமாக நீடிக்கப்படும். சிலபோது ஒரு வருடத்தை விடவும் பதவிக் காலம் நீடிக்கப்படலாம்.

ஏனெனில், 2018 மார்ச் மாதத்தின் பின்னர் தேர்தல் எப்போது நடைபெறும் என்பதை அரசாங்கம் திட்டவட்டமாக அறிவிக்கவில்லை. எனவே தேர்தல் நடைபெறும்வரை மாகாண ஆளுநராலேயே மாகாண சபையின் நிருவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஏதோ ஒரு திகதியில் தேர்தல் நடைபெற்றாலும் ஆகக் கூடிய காலம் கிழக்கு மாகாண சபையே ஆளுநனரின் முழுக் கட்டுப் பாட்டில் இருக்கப் போகின்றது.

இது உருவாக்கப் போகும் பிரச்சினைகள் குறித்து கிழக்கு மாகாண சிறுபான்மை மக்களுக்கு நிறைந்த அனுபவம் உள்ளது. ஏற்கனவே, மாகாண முதலமைச்சரின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்து வந்த ஆளுநர் முழு அதிகாரம் பெறுதல் என்பது பாரிய அரசியல் நெருக்கடிகளை உருவாக்கலாம். ஏனெனில், கிழக்கு மாகாண சபை மட்டுமே முஸ்லிம் அரசியல் கட்சியின் செல்வாக்கில் உள்ளது. மேலே உள்ள ஆளுநரின் தலையீட்டினால் பாரிய அபிவிருத்தித் திட்டங்களையோ நிருவாக சீர்திருத்தங்களையோ முன்னெடுக்க முடியாத சூழல் கடந்த காலங்களில் இருந்தது.

மாகாணத்தின் சனத்தொகைப் பரம்பலுக்கேற்ற தொழில் வாய்ப்புகள், காணிப் பகிர்வு, இழக்கப்பட்ட நிலங்களின் மீட்பு, கல்வித் துறை ஒதுக்கீடுகள் தொடர்பில் மத்திய அரசாங்கத்தின் பிரதிநிதியான சிங்கள ஆளுநர் முதலமைச்சரின் நடவடிக்கைகளில் தலையீடு செய்து வந்தார். இப்போது மாகாண திருத்தச் சட்டத்தின் மூலம் அதிகாரம் முழுவதும் ஆளுநரின் கைக்கு மாறும்போது இந்த ஒரு வருட கால இடைவெளியில் தமிழ், முஸ்லிம் சிறுபான்மைச் சமூகங்களுக்கு மேற்போந்த விவகாரங்களில் அநீதி இழைக்கப்படலாம் என்ற ஓர் அச்சம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த கால அனுபவங்களின்படி இந்த அச்சம் நியாயமானதே. குறிப்பாக, முஸ்லிம் மக்களே இதன் மூலம் பெரிதும் பாதிக்கப்படக் கூடிய வாய்ப்புள்ளது. இவற்றையெல்லாம் முன்யோசித்து தீர்மானம் எடுக்காமல் முஸ்லிம் கட்சிகள் இதற்கு ஆதரவளித்து ஏன் என்ற கேள்வி ஆச்சரியமாகவே உள்ளது.

# மங்களவின் பெரிய சப்பாத்து!

தொலைநோக்கு 2025 குறித்து சென்ற இதழில் எழுதியிருந்தோம். அதன் பிரகாரம் அரச வருமானத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகளில் ஒன்றாக நல்லாட்சி அரசாங்கம் வருமான வரிச் சட்டமொன்றை நிறைவேற்றியுள்ளது. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (Gross Domestic Production) வருமான வரியை 16%மாக உயர்த்த அரசாங்கம் எத்தனிக்கின்றது. இது இலங்கையின் பொருளாதார சீர்திருத்த வரலாற்றில் மேற்கொள்ளப்படும் முதல் முயற்சியாகும். அதேவேளை, மக்களைத் திண்டாட வைக்கப் போகும் முதல் கைங்கரியமும் இதுவாகவே இருக்கப் போகின்றது.

ஏற்கனவே நிலவி வரும் நேரில் வரி, நேர் வரி விகிதாசாரம் 80 : 20 ஆகும். இதனை 60 : 40 ஆக மாற்றுவதற்கு அரசாங்கம் இப்புதிய வரிக் கொள்கையை நடைமுறைப்படுத்தவுள்ளது. இந்தியா, அமெரிக்கா, பாகிஸ்தான் என்று தமது வரிக் கொள்கைக்கான முன்னுதாரணங்களை அரசாங்கம் முன்வைத்து வருகின்றது.

மக்களின் வருமானத்தை 5000 டொலர்களாக உயர்த்தப் போவதாக அறிவித்துள்ள அரசாங்கம், மாதாந்தம் 50,000 இற்கும் அதிகமான வருமானம் பெறும் ஒவ்வொரு பிரஜையும் அரசுக்கு வரி செலுத்த வேண்டும் என்று வாதிக்கின்றது. ஆகஸ்ட் 07 இல் நிறைவேற்றப்பட்ட வரிச் சட்டத்தை புதிய நிதியமைச்சர் மங்கள சமரவீர பாராளுமன்றத்தில் முன்வைத்திருந்தார். இவ்வரிச் சட்ட மூலத்தை மென்மேலும் பலப்படுத்துவதற்குத் தேவையானால் இன்னும் பல சட்ட மூலங்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்றவுள்ளதாகவும் நிதியமைச்சர் மற்றும் பிரதமர் ஆகியோர் தெரிவித்துள்ளனர். தொலைநோக்கு 2025 ஆவணத்திலும் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் வரிச் சட்டத்தை அமுல் நடத்துவதற்கு மேலதிக 12 சட்ட மூலங்களை அரசாங்கம் நிறைவேற்றவுள்ளது. அதன் மூலம் மக்கள் மீது வரிச் சுமை சட்ட ரீதியில் திணிக்கப்படப் போகின்றது. இந்த 12 சட்ட மூலங்களைத் திருத்துவது குறித்து நிதித்துறை பிரதியமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, திறைசேரி அதிகாரிகள், மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகள், பொருளாதார கொள்கை வகுப்பு நிலையத்தின் ஆலோசகர்கள் உள்ளிட்டோர் ஜனாதிபதி மைத்திரியிடம் தமது திட்டத்தை முன்வைத்துள்ளதாக இடதுசாரிப் பத்திரிகையொன்று எழுதியுள்ளது.



வரியை மக்கள் மீது சுமத்தி, அதை எந்த வகையிலேனும் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற சட்டபொறியொன்றையே (Legal Trap) அரசாங்கம் வரைந்து வருகின்றது. அவற்றுள் பின்வரும் சட்டத் திருத்தங்கள் முக்கியமானவை.

1. சொத்துக்கள் மற்றும் வளங்கள் சட்ட மூலம்
2. அரச, வர்த்தக மற்றும் கைத்தொழில் சட்ட மூலம்
3. அந்நியச் செலாவணி சட்ட மூலம்
4. காணிகளை நிரப்பும் மற்றும் அபிவிருத்தி செய்யும் சட்ட மூலம்
5. வங்கிச் சட்ட மூலம்
6. ஊழியர் சேமலாப நிதி சட்ட மூலம்
7. துறைமுக மற்றும் விமான சட்டமூலம்
8. காணி தொடர்பான விஷேட சட்ட மூலம்
9. உரிமை முகாமைத்துவ சட்டமூலம்.
10. தேசிய கடன் கருமபீட மற்றும் வலுவாதார வளர்ச்சிச் சட்டமூலம்
11. திண்மக் கழிவுகளை வீசுதலுக்கு எதிரான சட்டமூலம்
12. அரச காணிகள் சட்டமூலம்

இவற்றை நிறைவேற்றுவதன் மூலம் தொலைநோக்கு 2025 முன்மொழியும் சமூக, சந்தைப் பொருளாதார மாதிரியொன்றை (Social Market Economy Model) உருவாக்கலாம் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறிவருகின்றார்.

வரிச் சட்டத்திலிருந்து யாரும் தப்பிக்க முடியாதவாறு மக்களின் கழுத்தில் தொங்கும் [illegible] வடிவமைக்கப்படுகின்றது என்பது மிக ஆபத்தானது. மக்களுக்காக மக்களை ஆளும் மக்கள் சக்தியே ஜனநாயகம் என்ற தத்துவத்தை வரிச் சட்டமும் குழிதோண்டிப் புதைக்கின்றது. அரசாங்கம் கொண்டுவரவுள்ள வரிச் சட்டத்தின் மூலம் யாரேனும் ஒரு பிறஜை அநீதி இழைக்கப்பட்டால் அவர் நீதிமன்றம் செல்வதற்கான சந்தர்ப்பத்தைக் கூட புதிய வரிச் சட்டம் தடுக்கின்றது. வரிச் சட்டத்தின் 137 ஆவது சரத்து இதற்கேற்ற வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

நாம் ஆட்சிக்கு வந்தால் 5 இலட்சம் தொழில் வாய்ப்பை உருவாக்குவோம், மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவோம், வருமானத்தைப் பெருக்குவோம் என்று முழக்கமிட்டவர்கள் முன்வைக்கும் பொருளாதார சீர்திருத்தம் நமது மண்ணில் முகிழும் உண்மையான கொள்கைதானா அல்லது அது கூட இறக்குமதி செய்யப்படுகின்றதா என்ற ஐயம் எழுவது நியாயமானது.

இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளின் உள்ளூர் பொருளாதாரத்தை 5000 கி.மீ. தொலைவிலுள்ள உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் வழிநடாத்துவதுதான் மிகுந்த எதிரிடையானது. உலக வங்கியின் கட்டமைப்பு மாற்றம் என்ற பொருளாதாரக் கொள்கையின் அத்திவாரமே மக்களிடமிருந்து வரியை உறிஞ்சுவதுதான். தாம் கடன் வழங்கும் அரசாங்கங்களை நலப் பணிகளில் செலவு செய்யும் மக்கள் நல அரசுகளிலிருந்து (Welfare State) வெறும் சட்டத்தையும் ஒழுங்கையும் அமுல்படுத்தும் அரசுகளாக (Law and Order State) மாற்றுவதுதான். இது எவ்வளவு பெரிய உண்மை என்பதை இந்த வரிச்சட்டம் தத்ரூபமாக உணர்த்துகின்றது.

கையேந்துகின்றவர்கள் மேலே இருந்து வழங்குகின்றவர்களின் ஆணைகளுக்கு அடிபணிவது வழக்கமானதுதான். சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள 1500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனின் அடுத்த கட்டத் தொகையை வழங்குவதற்கு முன்னர் இந்த வரிச் சட்ட மூலத்தை எப்படியேனும் அமுலாக்க வேண்டும் என்று மேலே உள்ள எஜமானர்கள் அழுத்துகிறார்கள்.

அதன் விளைவாக, இங்கு ஒரு வரிச் சட்டமூலம் நிறைவேறுகின்றது. இது இலங்கையர்களின் வயிற்றில் எப்படி அடிக்கப் போகின்றது என்பதை எதிர்காலம் உணர்த்தும் என்பதோடு நல்லாட்சி அரசாங்கத்தின் சுயபடுகுழியைத் தோண்டுவதற்கும் அதுவே காரணமாகப் போகின்றது.

இலங்கையின் நிதி விவகாரங்களைக் கையாள்வது ஒரு பெரிய விசயம். ரொனி டி மெல், சொக்ஸி போன்ற ஜாம்பவான்கள் வகித்த ஒரு பதவியை நான் வகிப்பது சின்னப் பையனுக்கு பெரிய சப்பாத்தை அணிவிப்பது போன்றது என பதவியேற்பு வைபவத்தில் கூறிய மங்கள சமரவீரவே வருமான வரிச் சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனையின் பிரகாரமே இச்சட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது. ஏற்கனவே நிதிமைச்சராக இருந்த ரவி அதிரடியாக மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி மைத்ரிக்கு ஏற்பட்ட அதிருப்திகளே அவரை பதவியிலிருந்து அப்புறப்படுத்த காரணமாகியது. இப்போது பெரிய சப்பாத்தை அணிந்திருக்கும் மங்கள முன்வைக்கும் வரிச் சட்டத்தை ஜனாதிபதி எப்படிப் பார்க்கின்றார் என்பது இதுவரை ஊடகங்களுக்கு வெளிவரவில்லை.

சுதந்திரத்திற்குப் பின்னர் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் அவ்வப்போது பொருளாதார சீர்திருத்தம் என்ற பெயரில் காகிதங்களில் மக்களின் (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## புதியதொரு அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்புவோம்

இலங்கையில் சிங்களக் கட்சிகள் சிங்கள மக்களை அடிப்படையாக கொண்டு பேசி வருகிறது. தமிழ் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் இதற்கு விதிவிலக்கல்ல. அக்கட்சிகளும் தம் மக்கள் சார்ந்த அரசியலையே பேசி வருகின்றன. பௌத்த மதத் தலைமைகளும் அமைப்புக்களும் தனியானதொரு பாதையில் பயணித்துக் கொண்டுள்ளன. அதுபோன்று இந்து, கத்தோலிக்க, இஸ்லாமிய மத அமைப்புக்களும் நிறுவனங்களும் தங்களது தனியான நிகழ்ச்சி நிரல்களுக்கு அமைய செயற்பட்டுக்கொண்டுள்ளன.

இலங்கையர் எனும் அடையாளம், பல்வகைமையில் ஐக்கியம் என்கின்ற பின்னணியில் சமூகம் பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுத்து வருகிறது. இவற்றுக்கு மத்தியில் நாட்டை கட்டியெழுப்புவதும் பிரச்சினைக்குரிய விடயமாக உள்ளது. எமது இலங்கையில் நிலவும் அரசியல் கலாசாரத்தை மாற்றுவது மிகப்பெரும் சவாலாக உள்ளது. இன்று எல்லா இடங்களிலும் ஆர்ப்பாட்டங்களும், உண்ணாவிரதங்களும் இடம்பெறுகின்றன. இவையனைத்தும் நாட்டின் எதிர்காலம் தொடர்பில் சிந்திக்கின்ற விடயங்கள் அல்ல. குறுகிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு மேற்கொள்ளும் விடயங்களாகும்.

இவ்வாறான சவால்களை வெற்றிகொள்ளாத போது 1971 ஜே.வி.பி புரட்சி, 30 வருட கால யுத்தம் போன்று மீண்டும் நாட்டில் போராட்டங்கள் வெடிக்குமே ஒழிய எமக்கு நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி நகர முடியாமல் போகும். சுதந்திரத்திற்குப் பின்னர் நாம் 70 வருடங்களாக யுத்தத்திலேயே காலம் கழித்தோம். சுதந்திரத்திற்கு முன்னர் நாம் கடன்பட்டிருக்கவில்லை. ஆசியாவில் சிறந்ததொரு நாடாக எமது நாடு காணப்பட்டது. சகல அம்சங்களிலும் நாம் உயர்நிலையிலேயே இருந்தோம்.

சிவில் சேவை, பொலிஸ், கல்வி, பல்கலைக்கழகம் என்கின்ற சகல விடயங்களிலும் நாம் பிராந்தியத்தில் உயர்ந்ததொரு நிலையில் இருந்தோம். இன்று நாம் இவ்வனைத்து துறைகளிலும் பின்னடைந்து காணப்படுகின்றோம். அன்று எமக்குப் பின்னால் இருந்த நாடுகள் இன்றும் முன்னேற்றத்தின் உச்சத்திலுள்ளது. சுதந்திரக் கல்வி எமக்கு பல்வேறு துறைசார் நிபுணர்களை அன்பளித்தது. ஓலைக் குடிசையிலிருந்து சட்டத்தரணிகளையும் மருத்துவர்களையும் பொறியியலாளர்களையும் எமது நாட்டிற்கு வழங்கியது.

அதற்கு பின்னர் உருவான சந்ததியினர் அதற்கும் மேலானதொரு நிலைக்கு வந்தார்கள். இன்று ஒரு சில பாடசாலைகளில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் இந்நாட்டில் இருப்பதில்லை. அவர்களது தகைமைகளுக்கான தொழில்கள் இங்கு இல்லை. அதனால் அவர்கள் வெளிநாடு செல்கின்றார்கள். அங்கு குடியேறுகிறார்கள். அவ்வாறானதொரு நிலையை நாம் இன்று கண்டு வருகிறோம்.

1932 இலிருந்து சர்வஜன வாக்குரிமையை நாம் பயன்படுத்தி வந்துள்ளோம். ஆனாலும் எமது அரசியல் கலாசாரத்தில் அவ்வளவு காலம் வாக்குரிமை பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. சர்வஜன வாக்குரிமையின் மூலம் நாம் எவ்வாறான முன்னேற்றங்களை அடைந்துகொண்டோம் என்பதை அவதானிக்க நாம் புராதனத்தையும் நவீனத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

1976 இல் களுத்துறை மாவட்டத்தில் ஐ.தே.க. சார்பில் தேர்தலில் குதித்த வேட்பாளர்கள் எவ்வளவு சிறப்புக்குரியவர்கள் என்பது விளங்குகிறது. சட்டத்தரணி கொல்வின் ஆர்.டீ சில்வா, லெஸ்லி குணவர்தன, சட்டத்தரணி அனில் முனசிங்க, சட்டத்தரணி ரத்னசிறி விக்கிரமநாயக்க, டொக்டர் நெவில் பிரனாந்து, சட்டத்ரணி வீ.எல். விஜேமான்ன, சட்டத்தரணி நெவில் காரியவசம், சட்டத்தரணி ஓ.எஸ். பெரேரா போன்றோரை குறிப்பிடலாம். 8 ஆசனங்களில் 7 ஆசனங்களுக்கும் தொழில்சார் நிபுணர்களே வேட்பாளராக நியமிக்கப்பட்டார்கள்.

ஆனால் இன்று அரசியல் பிரதிநிதித்துவத்தில் நாம் எங்கு போய்க்கொண்டுள்ளோம். அரசியல்வாதிகளின் நடத்தைகள், பாரளுமன்றத்தில் நடந்துகொள்ளும் விதம், ஒரு விவகாரத்தைப் பார்க்கும் விதம் என்று எல்லாத் துறைகளிலும் அவர்களது நடவடிக்கைகள் இன்று மிக மோசமான நிலையில் உள்ளது. இதை மாற்றுவதே இன்று எமக்கு பாரிய சவாலாக உள்ளது. Manthree.lk எனும் இணையதளம் அரசியல்வாதிகளின் நடவடிக்கைகள் தொடர்பில் கண்காணித்து அறிக்கை சமர்பிக்கிறது. இதை பார்க்கும்போது எமக்கு கவலையேற்படுகிறது.

நாம் அரசியல்வாதிகளுக்கு அளவுக்கு மீறிய மரியாதைகளை கொடுத்து அவர்களை மோசமாக்கிக் கொண்டுள்ளோம். அவர்களுடன் ஒன்றாக அமர்ந்து மக்களின் பிரச்சினைகள் குறித்து உரையாட வேண்டும். அதுவல்லாமல் அவர்களின் முன்னிலையில் கூனிக்குருகி அளவுக்கு மீறிய கன்னியங்களை கொடுத்துக் கொண்டுள்ளோம். தேர்தலின்போது பல்வேறு வாக்குறுதிகளை வழங்குகிறார்கள். தேர்தல் முடிந்ததும் அவற்றை கவனத்தில் எடுப்பதில்லை. அவ்வாறான நிலைமை மாற வேண்டும். உலகத்தை நாம் கண்திறந்து பார்க்க வேண்டும். அபிவிருத்தியடைந்த நாடுகளிடம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்.

# மத உணர்வு:

## போர்த்துக்கேயர் முதல் தர்மபாலவரை

விஜயனுடன் வந்த பரிவாரங்களூடாக சிங்கள இனம் தோற்றுவிக்கப்பட்டது என்பதுவே இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட கருத்தாகவிருக்கிறது. சில வாகனங்களில் ஒட்டப்பட்டிருக்கின்ற சிங்ஹலே ஸ்டிக்கர்கள் மூலமாகவும் இந்தக் கருத்துதான் வெளிப்படுத்தப்படுகிறது. விஜயன் தொடர்பில் மகாவம்சத்தில் சொல்லப்பட்டுள்ள இந்தக் கதையை ஏற்றுக் கொள்ளாதவர்களும் இருக்கிறார்கள்.

சிங்கள இனத்தின் மூலபிதாவாக விஜயனை ஏற்றுக் கொள்ளாதவர்களில் ஜேம்ஸ் டி அல்விஸ் ஒருவர். விஜயனுக்கு முன்பே இங்கு பண்பாடான சமூகம் ஒன்று இருந்ததாகவும், விஜயன் இந்த நாட்டை ஆக்கிரமிக்க வந்தவனே என்பதுவும் இவாது கருத்தாகவிருக்கிறது. விஜயனிலிருந்துதான் சிங்கள இனம் வேர் விட்டது என்பது சிங்கள இனத்தை இழிவுபடுத்தும் கருத்து என குமாரதுங்க முனிதாச கூறுகிறார்.

யக்ஷ, இராட்சச, அசுர இனங்களே இலங்கையின் பூர்வீகக் குடிகள் எனவும், யக்ஷ இனத்தின் தலைவி குவேனி விஜயனிடம் தமது குடிகளை தாரைவார்த்ததாகவும், இதனை வைத்து விஜயன் இந்தக் குடிமக்களைக் கொன்று குவித்ததாகவும் அவர் கருதுகின்றார்.

முனிதாசவின் கருத்தின்படி, விஜயனுக்குப் பின்னர் யக்ஷ கோத்திரத்தினர் விஜயனின் பரிவாரங்களைப் பழிவாங்கினர். தாய்வழியில் சிங்க வம்சத்துக்கும், தந்தை வழியில் யக்ஷ வம்சத்துக்கும் பிறந்த பண்டுகாபயன், யக்ஷர்களின் துணையுடன் சிங்க வம்சத்தை பலமிழக்கச் செய்தான். இதனால் சிங்களவர்களின் மூலபிதா பண்டுகாபயனே என்பதுவே இவரது கருத்து.

குமாரதுங்க முனிதாச அபிமானிகள் இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டாலும் இது வரலாற்று மூலாதாரங்களூடாகவோ, தொல்பொருள் சான்றுகளூடாகவோ நிரூபிக்கப்பட்ட கருத்தல்ல.

சிங்கத்துக்கும் யக்ஷர்களுக்கும் பிறந்த மனிதனே சிங்களவர் என்ற கருத்தை சிங்கள சமூகத்திலுள்ள படித்தவர்கள் பலரும் ஏற்றுக்கொள்வதில்லை. விஜயனுக்கு முன்பே இங்கிருந்த ஆதிக் குடிகள் பற்றி ஷிராணி தரனியகல, ராஜ் சோமதேவ ஆகியோர் தொல்பொருள் சான்றுகள் ஊடாக நிறுவினாலும், பாடப் புத்தகங்களில் மகாவம்சம் சொல்கின்ற கதைதான் பதியப்பட்டிருக்கிறது. இலங்கையின் வரலாறு பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனங்கள் இல்லாமலிருப்பது, இலங்கை மக்களின் குறுகிய சிந்தனைக்கு பெரும் பங்களிப்புச் செய்திருக்கிறது.

என்னுடைய கருத்தின்படி கோத்திர வம்சங்களே இங்கு வாழ்ந்திருக்கின்றன. இந்தக் கோத்திரங்கள் வந்தேறு குடிகளுடன் கலந்திருக்கின்றன. விஜயனும் பரிவாரங்களும் இந்தக் கலவையுடன் வந்து சேர்ந்த வந்தேறு குடிகளாவர். இவர்கள் பலம் மிக்கவர்களாக இருந்ததால் இங்கிருந்த ஆதிகுடிகள் இவர்களுக்கு அடங்கிப் போயிருக்கலாம். நாட்டுக்கு வெளியில் இருந்து வந்தவர்கள் நாட்டில் பலம் பெறும்போது, சுதேசிகளில் அவர்களது ஆதிக்கம் அதிகரிக்கும். முன்னுரிமை அதிகார பலத்தின் மூலமே தீர்மானிக்கப்படுவதால், இங்கிருந்த சுதேசிகள் தமது முன்னுரிமையை இழந்தனர்.

இக்காலப்பிரிவில் இங்கு வாழ்ந்த அனைத்துக் கோத்திரங்களும் சிங்கள மொழியூடாகவே தொடர்பாடலை மேற்கொண்டனர். உயர்வு தாழ்வுகள் இருந்தாலும், அனைத்துக் கோத்திரங்களதும் பாஷை என்ற வகையில் சிங்கள மொழியூடாக அனைவரும் ஒன்றுபட்டிருந்தனர். பௌத்த சமயம் இலங்கைக்கு அறிமுகமானபோது நாட்டு மக்கள் அனைவருமே பௌத்த சமயத்தை ஏற்றுக் கொண்டதால் பௌத்த மதம் அனைவரையும் மேலும் ஒன்றுபடுத்தியது.

இந்த வகையில் சிங்கள இனத்தை போஷித்து, சிங்கள அரசை உருவாக்கிய மதமாக பௌத்த மதம் இருந்திருக்கிறது. இந்தக் காலப்பிரிவில் இலங்கையில் ஒரே இனமும், ஒரே மதமுமே காணப்பட்டுள்ளது. தென்னிந்தியாவில் இருந்து




வந்த தமிழர்களும் பௌத்த சமயத்தைப் பின்பற்றி சிங்களவர்கள் ஆனார்கள்.

பல்வேறு காரணங்களினாலும் இலங்கையில் குடியேறிய இந்து மதத்தைப் பின்பற்றும் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்ததால் இலங்கை ஒன்றுக்கு மேற்பட்ட மதங்களைப் பின்பற்றும், ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பேசும் நாடாக மாறியது. வந்தேறு குடியான தமிழ் எல்லாளன் இங்கு அரசனாக மாறியதும் இதில் தாக்கம் செலுத்தியிருக்கலாம்.

வியாபாரத்துக்காக இலங்கைக்கு வந்த இஸ்லாம் மதத்தைப் பின்பற்றும் அரபு மொழிபேசும் முஸ்லிம்கள் ஆற்றங்கரைகளில் குடியேறினார்கள். இத்துடன் இலங்கை மூன்று மொழி பேசு



கின்ற, மூன்று மதங்களைப் பின்பற்றுகின்ற மூன்று பிரதான இனங்கள் வாழ்கின்ற நாடாக மாறியது. அப்போதும் கூட இலங்கையில் நல்லிணக்கச் சூழலே நிலவியது. துட்டகைமுனுவுக்குப் பின்னர் ஆட்சி செய்த எல்லா மன்னர்களும் ஒன்றுக்கு மேல் இரண்டு மதங்களை (பௌத்த, இந்து) அனுஷ்டிப்பவர்களாக இருந்திருக்கிறார்கள். இந்த நல்லிணக்க சூழலுக்கு இதுவும் காரணமாக அமைந்திருக்கலாம்.

சிங்களவர்களிடம் வருகின்ற வெளிநாட்டுக் குடிகள் பௌத்த மதத்தை ஏற்று சிங்களவர்களானார்கள். தமிழரிடம் வருகின்ற வெளிநாட்டுக் குடிகள் இந்து மதத்தை ஏற்று தமிழர்களாக மாறினார்கள். இக்காலப்பிரிவில் மதங்களே இனவர்க்கங்களை அடையாளப்படுத்தின. ஜாதி என்பது குலங்களையே அடையாளப்படுத்தியதேயன்றி இனங்களையல்ல.

தென்னியாவிலிருந்து இலங்கைக்கும், இலங்கையிலிருந்து தென்னிந்தியாவுக்கும் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புக்கள் எதுவுமே இனத்தையோ மதத்தையோ அடிப்படையாகக் கொண்டமையவில்லை. அடுத்த நாடுகள் மீதான மன்னர்களின் படையெடுப்புக்கள் எல்லாம் மன்னனின் அதிகாரபலத்தை வெளிக்காட்டுவதற்காகவே அமைந்திருந்தது. இதுதான் உலக மரபாகவும் இருந்தது.

ஆனால் போர்த்துக்கேயர் இலங்கைக்குப் படையெடுத்ததன் பின்னர் இலங்கையில் மதங்கள் பிரச்சினைக்குரியதாக மாறின. அவர்கள் தமது வாள்களினால் கிறிஸ்தவ மதத்தை இங்கு பரப்பினார்கள். தமது மதத்தினை ஏற்றுக் கொள்பவர்களுக்கு சலுகைகள் வழங்கினார்கள். சுதேசிய மதங்களான பௌத்தம், இந்து, இஸ்லாம் சமயங்களை அழித்தார்கள். தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து பௌத்த விகாரைகள், இந்துக் கோயில்கள், முஸ்லிம் பள்ளிவாசல்களை உடைத்தார்கள். விளைவாக சிங்கள பௌத்தர்களில் அண்ணளவாக 10 வீதத்தினரையும், தமிழ் இந்துக்களில் 10 வீதத்துக்கு அதிகமானோரையும் கிறிஸ்தவத்துக்கு மதம் மாற்றினார்கள். இந்த நான்காவது மதத்தினால் மத ரீதியாக இனங்களை அடையாளப்படுத்தும் நிலை மாறியது. இதிலிருந்து மக்களிடையே பிரச்சினையை ஏற்படுத்தும் காரணிகளாக மதமும் இனமும் மாறியது.

போர்த்துக்கேய, ஒல்லாந்தர், ஆங்கிலேய காலனித்துவங்களின் போது சுதேச மதங்கள் எல்லாம் பிற்போக்கானவையாகவே அவர்களால் கருதப்பட்டன. அந்தச் சமயங்களும் அதிகாரத்தில் இருந்தவர்களின் கீழால் தான் இருந்தன. போர்த்துக்கேயர், ஒல்லாந்தருடன் ஒப்பிடும் பொழுது, ஆங்கிலேயர்கள் சுதேச மதங்கள் தொடர்பில் நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடித்தார்கள் என்று சொல்ல முடியும். அவர்கள் சுதேச மதத்தினரை மத மாற்றத்தில் ஈடுபடுத்தவில்லை என்பதோடு சுதேச மதங்களை அழிப்பதில் ஈடுபடவும் இல்லை. இதனால் ஆங்கிலேயருடைய காலத்தில் சுதேச மதங்கள் மீண்டும் வளரத் தொடங்கின. மதங்களின் இந்த வளர்ச்சிக்கு இந்தக் காலப்பிரிவில் வளர்ச்சியடைந்த அறிவுக்கும் பெரும் பங்கிருக்கிறது.

இலங்கையில் உருவான இந்த மத எழுச்சி, இந்தியாவுடைய மத எழுச்சியுடன் ஒப்பிடும் போது, முற்போக்கானதாக இருக்கவில்லை. அது மக்களை ஒன்றுபடுத்துவதற்குப் பதிலாக பிரிவினைக்கே வழிகோலியது. ஆறுமுகநாவலரும் அநகாரிக தர்மபாலவும் இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் பிற்போக்கான சிந்தனைகளையே மதத்தின் மூலமாக ஊட்டினார்கள். பௌத்தரல்லாத மதத்தினரையும் சிங்களவரல்லாத இனத்தினையும் வெறுக்கச் செய்யும் வேலையை அநகாரிக தர்மபால கச்சிதமாகச் செய்தார். 1915 இல் நடந்த சிங்கள-முஸ்லிம் கலவரத்துக்கு அவர் விதைத்த முஸ்லிம் விரோத உணர்வுகளே காரணமாயமைந்தது.

இப்படியான பிற்போக்கான மத எழுச்சிச் சிந்தனைகளே இலங்கை சுதந்திரமடையும் வேளையில் நாட்டின் சிந்தனையில் தாக்கம் செலுத்தியிருந்தன. இதனால் நாடு சுதந்திரம் அடையும் போது தேசியத்தைக் கட்டியெழுப்புவதற்கான சிந்தனைகள் எதுவும் நம்மிடம் இருக்கவில்லை.

சுதந்திரத்தின் பின்னரும் நமது தலைவர்கள் ஐரோப்பிய ஆடையை அணிந்தார்களேயன்றி நவீன சிந்தனைகளை நாட்டுக்குள் கொண்டுவரவில்லை. தமிழ், முஸ்லிம் தலைவர்களுடைய நிலையும் இதுவாகத்தான் இருந்தது.

முதலாவது பிரதமராக டீ.எஸ். சேனாநாயக்க பதவிக்கு வந்தவுடன், தனியரசாங்கம் அமைப்பதற்கு மலையகத் தலைமைகள் தனக்கு ஒத்துழைக்கவில்லை என்ற கோபத்தினால் தோட்டத் தொழிலாளர்களின் பிரஜாவுரிமையைப் பறித்தார். தோட்டத் தொழிலாளர்கள் பெடரல் கட்சி உருவாக்குவதற்கும் இதுதான் காரணமாக அமைந்தது.

இதன் பின்னர் 56 இல் பிரதமர் பண்டாரநாயக்க சிங்களத்தை உத்தியோகபூர்வ மொழியாகக் கொண்டுவந்து, தமிழர்களை இரண்டாம் பட்சப் பிரஜைகளாக மாற்றினார். இது தொடர்பில் தமிர்கள் காட்டிய எதிர்ப்புணர்வை வைத்து பண்டா-செல்வா ஒப்பந்தம் எழுதப்பட்ட போதும், பிக்குமார் தலைமையிலான மொழி வெறியர்களால் இந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. இதனால் 1958 ஆகும் போது பாரிய இனக்கலவரம் நடைபெற்றதோடு, பண்டாரநாயக்கவும் கொலை செய்யப்பட்டார்.

தமது மொழியுரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக பெடரல் கட்சி 1962 இல் வடக்கிலும் கிழக்கிலும் நடத்திய ஹர்த்தால், அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டு, இதற்குத் தலைமை வகித்தவர்களையும் கைதுசெய்து முறியடிக்கப்பட்டது. இதற்கென மீண்டும் டட்லி-செல்வா ஒப்பந்தம் செய்யப்பட்ட போதும், இது தமிழர்களுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுக்கும் செயல் எனக் கூறி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இடது சாரிக் கட்சிகளும் எதிர்த்தன. இந்த எதிர்ப்பின் பின்னாலும் பௌத்த பிக்குமாரே முக்கிய பாத்திரம் வகித்தனர்.

1970 இல் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தமிழர்களின் பிரச்சினைகளை கருத்தில் கொள்ளாமலேயே அரசியல் யாப்பையும் வரைந்தது. சிங்களம் மட்டும் சட்டம் அரசியல் யாப்பிலேயே உள்வாங்கப்பட்டதோடு, பல்கலைக்கழக வெட்டுப் புள்ளியும் அறிமுகப்படுத்தப்பட்டு தமிழர்களின் பல்கலைக்கழக அனுமதியும் மட்டுப்படுத்தப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த தமிழ் இளைஞர்கள் போராடத் தொடங்கினார்கள். இதற்கெதிராக கிளர்ந்தெழுந்த சிங்களவர்களால் நாடு 83 ஜூலைக் கலவரத்தைச் சந்தித்தது. தமிழர்கள் தனிநாடு கோரிப் போராடுவதற்கு தூரதிருஷ்டியற்ற சிங்களத் தலைவர்களே காரணமானார்கள்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி

# முஸ்லிம்களது விவகாரம் இன்று எல்லோருக்கும் வினோதமாய் போயுள்ளது

**வை.எல்.எஸ். ஹமீத்**
செயலாளர் நாயகம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்



**• தற்போதைய சமூக, அரசியல் நடவடிக்கைகள் எவ்வகையில் போய்க்கொண்டுள்ளது?**

கட்சி விவகாரம் நீதிமன்றத்தில் உள்ளது. எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி வழக்கு விசாரணை நடைபெறவுள்ளது. இன்றைய சமுதாயம் இக்கட்டானதொரு சூழலில் உள்ளது. ஒருபுறம் அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்படவுள்ளது. அதில் முஸ்லிம்களின் நிலைமை என்னவென்று அறியாமல், அதைப் பற்றி கவலையில்லாத நிலையில் சமூகம் உள்ளது.

மறுபுறம் புதிய தேர்தல் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. அது முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்யும் சூழலை உருவாக்கியுள்ளது. இந்த நிலையில் இச்சமுதாயத்தை அரசியல் ரீதியில் விழிப்பூட்ட வேண்டியதொரு தேவை ஏற்பட்டுள்ளது. அரசியல் இருட்டில் சமுதாயம் தடவிக் கொண்டுள்ளது. இந்நிலையில் மக்களை எப்படி விழிப்பூட்டலாம் என்கின்ற விடயத்தில் முழுக் கவனத்தையும் செலுத்தி வருகின்றேன்.

**• தேர்தல் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது சிறுபான்மையினருக்குப் பாதகமாக அமையுமா?**

உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தம், மாகாண சபைத் தேர்தல் திருத்தம் ஆகிய இரண்டும் முஸ்லிம்களுடைய வாக்குரிமையில் பாராதூரமான பாதிப்புக்களை கொண்டுவந்துள்ளது. கிட்டத்தட்ட வாக்குரிமையை சட்ட ரீதியாக மறுக்காவிட்டாலும் நடைமுறை ரீதியாக மறுத்தது போல் உள்ளது. கிழக்கிற்கு வெளியில் ஒவ்வொரு தொகுதியிலும் முஸ்லிம்கள் சிதறி வாழ்கிறார்கள்.

ஒவ்வொரு தொகுதியிலும் முஸ்லிம்கள் ஐந்து வீதம், பத்து வீதம் என்பதாகவே உள்ளார்கள். கொழும்பு மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட வேண்டிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை 20 என வைத்துக்கொள்வோம். இவர்களது ஒழுங்கமைப்பின் படி 10 தொகுதிகள் இருக்கும். 10 தொகுதிகள் இருந்தால் கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு மத்தியில் ஓரிரு தொகுதிகள் முஸ்லிம்களுக்கு பெரும்பான்மைத் தொகுதிகளாக இருக்கும். ஏனைய மாவட்டங்களை எடுத்துக் கொண்டால் அந்த வாய்ப்பும் இருக்காது.

உதாரணமாக குருநாகல் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்கு கிட்டத்தட்ட 90,000 - 100,000 முஸ்லிம் வாக்குகள் உள்ளன. ஆனால் ஒரு முஸ்லிம் பெரும்பான்மைத் தொகுதியையும் அங்கு உருவாக்க முடியாது. இந்த நிலையில் அங்கு ஒவ்வொரு தொகுதியிலும் முஸ்லிம்கள் 10வீதம், 15 வீதம், 20 வீதம் இருந்தால் அங்கு ஐ.தே.க.இற்கோ, சு.க.இற்கோ எந்தவொரு தொகுதியிலும் முஸ்லிம் வேட்பாளர் ஒருவரை நிறுத்தப் போவதில்லை.

பெரும்பான்மை சிங்களவர்கள் உள்ள தொகுதியில் ஒரு முஸ்லிம் வேட்பாளரை நிறுத்த முடியாது. அதேநேரம் முஸ்லிம் கட்சிகள் அங்கு வேட்பாளர்களை நிறுத்தினாலும் அங்குள்ள மக்கள் முஸ்லிம் அங்கத்தவர்கள் வெற்றிபெற மாட்டார்கள் என்பதை தெரிந்து அவர்களுக்காக வேண்டி வாக்கை வீண்விரயம் செய்யமாட்டார்கள். குறிப்பாக இன்றைய இனவாதச் சூழலில் அம்மக்கள் அப்பிரதேசத்திலுள்ள பெரும்பான்மை அங்கத்தவருடன் இணைந்துபோகவே விரும்புவார்கள். விரும்பியோ விரும்பாமலோ அங்குள்ள முஸ்லிம் மக்கள் தமது வாக்குகளை பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த வேட்பாளர் ஒருவருக்கு அளிக்கும் நிலையயே ஏற்படும். அதேநேரம் முஸ்லிம் கட்சிகளின் வேட்பாளர்களும் அங்கு வேலை செய்ய மாட்டார்கள். ஏனெனில் நாம் அங்கு தெரிவுசெய்யப்பட மாட்டோம் என்பது அவர்களுக்குத் தெரியும்.

இந்த நிலையில் கிழக்கிற்கு வெளியில் ஒரு சில முஸ்லிம் பெரும்பான்மைத் தொகுதிகளை தவிர மற்ற எல்லா இடங்களிலும் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் இல்லாமல் போகும் நிலை ஏற்படும். முஸ்லிம்களுக்கு எதிரான இந்த அநியாயத்திற்கு முஸ்லிம் தலைவர்களும் முஸ்லிம் பிரதிநிதிகளும் கை உயர்த்திய ஒரு சம்பவம் இந்த நாட்டில் இடம்பெற்றுள்ளது. அதாவது உங்களது விரலை தாருங்கள் கண்ணைக் குத்தப் போகிறோம் என அரசாங்கம் கேட்டதற்கு அப்படியே விரலை தூக்கிக் கொடுத்துள்ளார்கள் கண்ணை குத்துவதற்கு. இதுவே இன்றைய பாராதூரமான நிலைமையாக உள்ளது.

**• சிறுபான்மையினருக்கு பாதகமாக உள்ள இச்சட்டத்தை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதா?**

தாராளமாக முடியும். இரட்டை வாக்கு முறையை அறிமுகப்படுத்தலாம். இரட்டை வாக்கென்றால், உதாரணமாக, குருநாகல் மாவட்டத்தில் 20 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள் என வைத்துக்கொள்வோம். 10 தொகுதிகள் உள்ளன. 10 தொகுதியிலும் ஒவ்வொரு கட்சியும் பெறுகின்ற மொத்த வாக்குகளை எடுத்து தற்போதுள்ள விகிதாசார நடைமுறைக்கமைய மொத்த ஆசனங்களால் பிரிப்பார்கள். குருநாகல் மாவட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குகள் 10 லட்சம் என எடுகோளாக வைத்துக்கொண்டால் 20 ஆசனங்களையும் 10 லட்சம் வாக்குளால் பிரித்தால் 50,000 இற்கு 1 சீட்டென்று வரும். இப்பத்து தொகுதியிலும் முஸ்லிம்கள் சிங்களவர்களுக்கே அதிகம் வாக்களிப்பார்கள். எனவே முஸ்லிம் கட்சி பெற்ற வாக்கு 100, 500 என்று வருமே தவிர அதிக வாக்குகள் விழுந்திருக்காது. முஸ்லிம் கட்சிகளின் வாக்கு சிங்களக் கட்சிகளுக்கு போயிருக்கும்.

குருநாகல் மாவட்டத்தில் ஐ.தே.க. 4 லட்சம் வாக்குகளைப் பெற்றதாக நினைத்துக்கொள்வோம். சு.க. 3 லட்சம். ஏனைய கட்சிகள் 150,000 என வைத்துக்கொள்வோம். 50,000 இற்கு 1 ஆசனம் என்ற அடிப்படையில் ஐ.தே.க.வுக்கு உரித்தான ஆசனங்கள் 8, சு.க.வுக்கு 6 எனும் வகையில் தற்போதைய தேர்தல் முறைப்படி கணக்குப் பார்ப்பார்கள். அதன் பின்னர் ஐ.தே.க. இந்த 10 தொகுதியில் எத்தனை தொகுதிகளை வென்றுள்ளது? உதாரணமாக, 06 தொகுதிகளை வென்றிருந்தால் அதற்குரித்தான ஆசனங்கள் 08 எனில், ஏனைய இரண்டு ஆசனங்களையும் மற்ற 10 இல் இருந்து வழங்குவார்கள். சு.க.வுக்கு உரித்தான ஆசனம் 06. இரண்டு தொகுதியில் வென்றுள்ளார்கள் எனில், ஏனைய 4 ஆசனங்களையும் அடுத்த 10 இலிருந்து வழங்குவார்கள். எனவே அவர்களுக்கு கிடைத்து விடும். ஆனால் முஸ்லிம் கட்சிகளுக்கு எவ்வித வாக்குகளும் அளிக்கப்படாமையினால் எமக்கு ஒரு சீட்டும் கிடைக்காது. மறுபுறம் ஐ.தே.க.வும் சு.க.வும் மனமிறங்கி அவர்களது சீட்டிலிருந்து ஏதாவது ஆசனங்களை கொடுத்தாலேயே ஒழிய முஸ்லிம்களுக்கு பிரதிநித்துவம் இல்லை. எனவே மீண்டும் ஒரு பிரதிநிதித்துவமற்ற அரசியல் வரப்போகின்றது.

அதேநேரம் அதை இரண்டு வாக்காக மாற்றினால் தொகுதியில் கேட்பவருக்கு ஒரு வாக்கும் கட்சிக்கு ஒரு வாக்கும் வழங்கப்படுவதாக இருந்தால் உதாரணமாக, குளியாப்பிட்டிய தொகுதியில் ஐ.தே.க.வையோ சு.க.வையோ பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த ஒருவருக்கே அங்குள்ள முஸ்லிம்கள் வாக்களிப்பார்கள். அதேநேரம் கட்சி வாக்கை தூக்கி ஏதாவதொரு முஸ்லிம் கட்சிக்குப் போடலாம். எனவே அப்பத்து தொகுதியிலும் வாழும் முஸ்லிம்கள் தொகுதி வாக்கை பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்த ஒருவருக்கும். கட்சி வாக்கை ஏதாவதொரு முஸ்லிம் கட்சிக்கும் போடும்போது முழுக் குருநாகல் மாவட்டத்திலும் 50,000 அளவிலான வாக்குகளை ஒரு முஸ்லிம் கட்சிக்கு பெற்றுக்கொள்ளலாம். விகிதாசார அடிப்படையில் இந்தக் கட்சிக்கு ஒரு ஆசனம் அல்லது இரு ஆசனம் கிடைக்கும். தற்பொழுது இந்த சந்தர்ப்பம் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

**• புதிய அரசியலமைப்புக்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் உங்களது அவதானங்கள் என்ன?**

இடைக்கால அறிக்கை [illegible] தொரு அறிக்கை. இதில் அதிகமான விடயங்கள் மறைக்கப்பட்டுள்ளன. பெரியளவில் பிரச்சினைகளை உருவாக்காத விடயங்களை மாத்திரமே அவ்வறிக்கையில் தொட்டுக் காட்டியுள்ளார்கள். வழிநடத்தல் குழு ஆறு உப குழுக்களை நியமித்திருந்தது. அந்த ஆறு உப குழுக்களும் ஆறு தலைப்பின் கீழ் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள். அதுவும் இவ்வறிக்கையின் ஓர் அங்கமாக உள்ளது.

எல்லோரும் வழிநடத்தல் குழுவின் அறிக்கை தொடர்பில் கதைக்கிறார்கள். ஆறு உப குழுக்களின் அறிக்கை தொடர்பில் கதைக்கவில்லை. வழிநடத்தல் குழு அறிக்கையில் அரசின் தன்மை, வடகிழக்கு இணைப்பு, அரசியலமைப்பு சட்டத்தை திருத்தும் விடயம், உள்ளூராட்சி சபைகளை .பலப்படுத்தல் என்கின்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மற்ற விடயங்கள் எதுவும் இதில் குறிப்பிடப்படவில்லை. இதில் பல விடயங்கள் தொட்டுக் காட்டப்படவில்லை. கடந்த ஆகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி கட்சித் தலைவர்களுக்கு ஒரு இடைக்கால அறிக்கையை வழங்கியுள்ளார்கள். அதில் சில விடயங்கள் உள்ளன. ஆனால் அவ்வறிக்கை பகிரங்கப்படுத்தப்படவில்லை.

இந்நிலையில் அரசின் தன்மை என்ற விடயத்தை ஆராயும் போது 'பிரிக்க முடியாத ஒருமித்த நாடு' என்ற கருத்தை கொண்டு வந்துள்ளார்கள். இது ஒற்றையாட்சிக்கும் சமஷ்டிக்கும் பொருந்தக் கூடியதொரு பதமாக உள்ளது. அதேநேரம் இதில் சமஷ்டி தொடர்பில் வெளிப்படையாக குறிப்பிடப்படவில்லை. மத்திய அரசாங்கத்தின் சில அபிவிருத்திப் பணிகளில் தொடர்புறும் திணைக்களங்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்குவதற்கு பிரேரித்துள்ளார்கள். விரிவாக குறிப்பிடப்படவில்லை. கருத்தை மாத்திரமே குறிப்பிட்டுள்ளார்கள்.

எதிர்காலத்தில் உள்ளூராட்சி சபைகள் அபிவிருத்தியில் நியாயமான பங்களிப்பு செய்யக் கூடிய வாய்ப்பு உள்ளது. அதேநேரம் மாகாண சபையும் தனது அதிகாரத்தின் கீழுள்ள முகவர் நிலையங்களை (திணைக்களங்களை) உள்ளூராட்சி சபைக்கு வழங்க வேண்டுமெனவும் பிரேரிக்கப்பட்டுள்ளது. அதாவது முடிவெடுக்கும் அதிகாரம் மாகாண சபையிடம் அல்லது மத்திய அரசிடம் காணப்படும். நடைமுறைப்படுத்தும் விடயங்களை உள்ளூராட்சி சபைக்கு வழங்கப் போகிறார்கள். இந்நிலையிலேயே வடகிழக்கிற்கு வெளியில் முஸ்லிம்கள் உள்ளூராட்சி சபையிலும் மாகாண சபையிலும் பிரநிதித்துவத்தை இழக்கப் போகிறார்கள்.

**• ரோஹிங்யா அகதிகள் விடயத்தில் கடந்த தினம் இடம்பெற்ற சம்பவத்தை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

அவ்விடத்தில் சட்டத்தை நிலைநாட்ட வேண்டிய பொலிஸார் வேடிக்கை பார்த்துள்ளார்கள். இது கண்டிக்கப்பட வேண்டிய விடயம். அவர்களை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு போய் சிலரை பூஸாவிலும் போட்டுள்ளார்கள். பின்னர் அந்த அகதிகள் தங்கியிருந்த வீட்டிற்கு கல்லெறியும் வரை பார்த்துக் கொண்டிருந்துள்ளனர். முஸ்லிம்களுக்கு இன்று சரியானதொரு அரசியல் தலைமைத்துவம் இல்லை. ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு நடந்த அநியாயம் தொடர்பில் எல்லா முஸ்லிம்களதும் இதயம் துடிக்கிறது. ஆனால் அவ்வுணர்வுகளை முறைப்படுத்தப்பட்ட தலைமையொன்றின் கீழ் பலமாக வெளிப்படுத்தக் கூடிய நிலை இடம்பெறவில்லை.

துருக்கியை தவிர ஏனைய முஸ்லிம் நாடுகள் முஸ்லிம்களது பிரச்சினைகளை பற்றிப் பேசுவதில்லை. ஆயுத ரீதியில் மிகவும் பலம் வாய்ந்த முஸ்லிம் நாடான பாகிஸ்தான் முஸ்லிம்களுக்காக பேசிய வரலாறுகள் இல்லை. ரோஹிங்யா முஸ்லிம்கள் விடயத்தில் அங்குள்ள மக்கள் கொதிக்கிறார்கள். ஆனால் அரசாங்கம் மௌனமாக இருக்கிறது.

சவூதியா நல்லது துருக்கியா நல்லது என்பதில் சில உலமாக்கள் பட்டிமன்றங்கள் நடத்துகிறார்கள். ஒரு சில அரசியல்வாதிகளும் சில அமைப்புக்களும் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள். எல்லோருக்கும் முஸ்லிம்களது விவகாரம் வினோதமாய் போயுள்ளது. ஏற்கனவே இங்கு நீருபூத்த நெருப்பாக இனவாதம் புகைந்துகொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் சிறு சிறு குழுக்களாக நாம் நடத்திய ஆர்ப்பாட்டங்கள் இனவாதிகளுக்கும் கொளுத்த தீனியாய் போயுள்ளது.

(பக்.14)




இலங்கையில் ஏனைய சமூகங்களுக்கு மத்தியில் சாதி, குல பேதங்கள் மக்களைப் பிரித்து வைத்திருக்கின்றன. இலங்கை முஸ்லிம்களிடையே கொள்கைப் பிரிவுகள்தான் அதிகம். ஏனைய சமூகங்களின் முன்னேற்றத்துக்கு சாதி, குல பேதங்கள் எப்படித் தடையாக அமைகின்றனவோ அதே போல முஸ்லிம்களின் முன்னேற்றத்துக்கும் இந்தக் கொள்கைச் சண்டைகள் காரணமாக உள்ளன.

சாதி, குல பேதங்கள் போல இந்தக் கொள்கைப் பிரச்சினைகள் அடிமட்டத்தில் இருந்து வந்தவைகள் அல்ல. கண்ணியத்துக்குரிய உலமாக்கள்தான் கொள்கைகளை பிரச்சினைக்குரியதாக மாற்றினார்கள். உலமாக்களிடையே தோன்றிய வேறுபாடுகளுக்கு பாமரன் பகடைக்காயாக்கப்படுவது தான் முஸ்லிம் சமூகத்திலே நடக்கிறது.

இதில் ஒவ்வொரு ஆலிமுடைய அறிவு மட்டமும் தாக்கம் செலுத்துகிறது. இஸ்லாம் பற்றிய மொத்தமான பார்வை இல்லாமல் தமக்குக் கிடைத்ததை மட்டும் முன்மொழிகின்ற உலமாக்களால்தான் இந்தப் பாதிப்பு நிகழ்கிறது. சமய அறிவை மையப்படுத்தி கற்கின்ற இப்படியான ஆலிம்களது சமய அறிவை மையப்படுத்தி சமயத்தை வழிகாட்டுவதிலேயே இவ்வளவு சிக்கல் என்றால், இஸ்லாம் கையில் தந்த அமானிதமான உலகை வழிகாட்டும் பணியை இப்படியான ஆலிம்களின் கையில் கொடுத்தால் உலகின் நிலை என்னவாகியிருக்கும்?

பெரும்பாலான நமது உலமாக்கள் துன்யா கல்வியை வெறுத்து ஒதுக்குவதனால் உலகம் பற்றி அவர்கள் பேசுவது சமூகத்துக்கு நகைச்சுவையாக மாறிவிடுகிறது. கொக்கா கோலாவில் ph என்றொரு பதார்த்தம் இருக்கிறது. இதே பதார்த்தம் மலசல கூடம் துப்புரவு செய்யும் ஹார்பிக் இலும் இருக்கிறது. ஆகவே கொக்கா கோலா குடிக்க வேண்டாம் என ஓர் ஆலிம் சொன்ன கருத்தை வைத்து முகநூல் சமூகம் எள்ளிநகையாடிக் கொண்டிருக்கிறது.

ஆலிம்களை இந்த நிலைக்கு மாற்றியது உலகம் பற்றிய அவர்களது குறை அறிவுதான். இதை அவர்களுக்கு வழங்காமல் தடுக்கின்ற கல்விக் கூடங்களைக் குறை சொல்ல வேண்டுமே தவிர ஆலிம்களை எள்ளிநகையாடிப் பிரயோசனமில்லை.

முஸ்லிம் அல்லாத ஆலிம்கள், அவர்கள் தமது சமயத்துக்கு மேலதிகமாக எவ்வளவு தூரம் அறிவை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்? மக்களின் பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கும் அவர்கள் எவ்வளவு திறமையாக தீர்வை முன்வைக்கிறார்கள். சமீபத்தில் க்ளைபோசைட் பாவனையினால் இலங்கை அடைகின்ற பாதிப்புக்கள் பற்றிய கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொள்ளக் கிடைத்தது. அதில் உரையாற்றிய ஒரு பௌத்த மதகுரு, கட்மியமும் ஆர்சனிக்கும் மண்ணில் கலப்பதால் வரும் விளைவுகளையும் இதன் பாதிப்பிலிருந்து மனித குலத்தைப் பாதுகாப்பதற்காக தான் உலகின் பல நாடுகளுக்கும் சென்று தேடிய தீர்வுகளையும் எடுத்துரைத்தார்.

இப்படியான ஆலிம்கள் உள்ள நாட்டில்தான் தண்ணீரில் உள்ள ph பெறுமானம் பற்றியே தெரியாத உலமாக்களும் வாழ்கிறார்கள். பத்திரிகையே வாசிக்காத எமது ஆலிம்களை, உலக விவகாரங்களை வெறுத்தொதுக்கும் நமது ஆலிம்களை அறிவாலிம்களாக மாற்றா விட்டால் இந்த நாட்டுக்கான தீர்வாக, வழிகாட்டியாக இஸ்லாத்தை ஒருபோதும் முன்வைக்க முடியாது.

இதற்கு ஏற்றாற் போல எமது உலமாக்களை உருவாக்குகின்ற கல்விக் கூடங்கள் இல்லை என்பதனால்தான் உலகுக்கு வழிகாட்ட வேண்டிய விடயங்களில் நமது உலமாக்கள் தமது முகங்களை நிகாப் போட்டு மூடிக் கொள்கின்றார்கள். பாடசாலைக் கல்வியும் நமது மத்ரஸாவில் ஓதிக் கொடுக்கப்படுகிறது என்று விளம்பரப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், தீனுடைய ஒளியில் உலக விவகாரங்களுக்குத் தீர்வு சொல்லக் கூடிய இடங்களாக உலமாக்களை உருவாக்குகின்ற கல்விக் கூடங்கள் மாற வேண்டும்.

பல்வேறு துறைகளிலும் பட்டம் பெற்ற அறிஞர்கள் முஸ்லிம் சமூகத்திலே இருக்கின்றார்கள். இவர்கள் அறபு மொழியிலே படிக்காததனால் ஆலிம்கள் என்று அழைக்கப்படுவதில்லை என்பதேயல்லாமல் ஆலிமுக்குரிய அறிவு இவர்களிடமும் இருக்கிறது. மத்ரஸாக்கள் இவர்கள் மூலம் பயன்பெற்று ஆலிம்களை அறிவாலிம்களாக மாற்றுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குர்திஷ்தான் மீது இராணுவ நடவடிக்கை பிரயோகிக்க வேண்டி வரலாம் - அர்தூகான்




ஈராக் குர்திஷ்தானில் இடம்பெற்ற பிரிவினைக்கான மக்கள் வாக்கெடுப்பை கடுமையாகக் கண்டித்துள்ள துருக்கிய ஜனாதிபதி அர்தூகான், துருக்கிய எல்லைப் பிராந்தியங்களை குர்திஷ்தான் பெஷ்மெக் இராணுவம் கைப்பற்ற விளைந்தால் அதற்கெதிராக இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று எச்சரித்துள்ளார். வடக்கு ஈராக்கில் சுதந்திர குர்திஷ் அரசு உருவாவது துருக்கி எதிர்கொள்ளும் அச்சுறுத்தல் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாக்கெடுப்பு தேசியளவிலும் சர்வதேசளவிலும் பாரிய எதிர்ப்பையும் கண்டனங்களையும் எழுப்பியுள்ளது. இந்நிலையிலேயே அர்தூகானின் எச்சரிக்கை வெளிவந்துள்ளது. எமது ஆயுதப் படையினர் ஈராக் எல்லைப் புறத்தில் தயார் நிலையில் உள்ளனர் எனக் குறிப்பிட்ட அர்தூகான், துருக்கி விரும்பினால் குர்திஷ் பிராந்திய அரசாங்கத்தின் எண்ணெய் ஏற்றுமதியை தடுத்து நிறுத்தலாம் என்று கூறினார்.

துருக்கியிலிருந்து ஈராக்கிற்கு எதுவும் செல்வதை நாம் அனுமதிக்க மாட்டோம். மேலும் கிட்டிய எதிர்காலத்தில் எல்லைப் புறத்தை நாம் மூடுவோம் எனவும் அர்தூகான் தெரிவித்துள்ளார். சர்வஜன வாக்கெடுப்பின் முடிவு பிரிவினைக்குச் சார்பாக இருந்தாலும் அவ்வாக்கெடுப்பு சட்டவிரோதமானது என அர்தூகான் வலியுறுத்தியுள்ளார்.

# சர்வதேசப் பார்வை

# ரோஹிங்ய கர்ப்பிணித் தாய்மார்களின் பிரசவ மருத்துவத்திற்காக ஒன்று திரளும் தாதிகள்

றெக்கைனிலிருந்து பங்களாதேஷுக்கு இடம்பெயர்ந்த 4 ½ இலட்சம் ரோஹிங்ய அகதிகளில் 24,000 கர்ப்பிணித் தாய்மார்கள் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு நூற்றுக்கணக்கான தாதிகள் கொக்ஸ் பஸார் அகதி முகாம்களை நோக்கி விரைகின்றனர். சிலர் கடந்த வாரம் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளதாகவும் சிட்டகொங் அல் ஜஸீரா செய்தியாளர் திவ்யா கோபாலன் தெரிவிக்கின்றார்.



24 வயதான பெண்ணொருவர் தனக்கு வழங்கப்பட்ட மருத்துவ சிகிச்சை குறித்து கருத்து வெளியிடுகையில், எந்தக் கஷ்டமும் இல்லாமல் குழந்தையைப் பெற்றெடுத்தமை எனக்கு மிக ஆறுதலாக உள்ளது. இங்கு வழங்கப்படும் சேவை குறித்து நான் ஆச்சரியப்படுகின்றேன் என்கிறார்.

ஆகஸ்ட் 25 இலிருந்து செப்டம்பர் 25 வரையான 30 நாட்களில் மியன்மாரின் றெக்கைனிலிருந்து அகதிகளாக வெளியேறிய மக்களின் தொகை 436,000 ஆகும். சிறுபான்மை முஸ்லிம்களுக்கு எதிராக மியன்மார் இராணுவம் தொடங்கிய கொடூரமான இனச் சுத்திகரிப்பு தாக்குதலிருந்து மக்கள் தப்பி வந்தபோது பல கர்ப்பிணித் தாய்மார்கள் இடைநடுவில் இறந்துபோனதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இதற்கிடையில், குழந்தைகள் பலர் சம்மட்டியினால் அடிக்கப்பட்டும் நிலத்தில் மற்றும் சுவர்களில் ஓங்கி அறையப்பட்டும் கொல்லப்பட்டுள்ளனர். மக்கள் வெளியேறிய சுமார் 400 கிராமங்கள் இதுவரை இராணுவத்தினரால் எரித்துச் சாம்பலாக்கப்பட்டுள்ளன.

பங்களாதேஷில் தங்கியுள்ள அகதிகளைப் பராமரிப்பது அரசுக்கு பெரும் சுமையாக மாறியுள்ளது என்று டாக்கா அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பெரும்பான்மை பிரிட்டிஷார் பலஸ்தீன் தனிநாட்டுக் கோரிக்கையை அங்கீகரிக்கின்றனர்




பிரிட்டன் சிவில் சமூகத்தின் பெரும்பான்மை மக்கள் பலஸ்தீனை ஒரு தனி நாடாக பிரிட்டிஷ் அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். சமீபத்தில் இது குறித்து அந்நாட்டில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பீடொன்று இதனை உறுதிசெய்துள்ளது.

கருத்துக் கணிப்பீட்டில் கலந்து கொண்ட 53% மானோர் பலஸ்தீனம் ஒரு சுதந்திர நாடாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். 14% மானோர் அதற்கு மாற்றமான கருத்தைக் கொண்டுள்ளதோடு, 33% மானோர் தாம் இவ்விடயம் குறித்து நடுநிலை வகிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டனுக்கான பலஸ்தீனத் தூதுவர் ஹஸ்ஸான் இது குறித்துக் கருத்து வெளியிடுகையில், பிரிட்டனில் பலஸ்தீன் குறித்த பொதுமக்கள் அபிப்பிராயம் மாற்றமடைந்து வருகின்றது. 11 ஆண்டுகளாக இங்கு நான் வசித்து வருகின்றேன். கருத்துக் கணிப்பில் கலந்துகொண்ட வெறும் 14% மானோரே பலஸ்தீன் தனி நாட்டுக் கோரிக்கையை எதிர்க்கின்றனர். 53% மானோர் அதை ஆதரிக்கின்றனர் என ஹஸ்ஸான் வலியுறுத்தினார்.

பெல்போர் பிரகடனம் வெளியிடப்பட்டு 100 ஆண்டுகள் கடந்த நிலையில், இக்கருத்துக் கணிப்பீடு நடத்தப்பட்டுள்ளது.



# ட்ரம்பின் போர்ப் பிரகடனத்திற்கு தகுந்த பதிலடி வழங்குவோம்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எங்கள் நாட்டின் மீது போர்ப் பிரகடனம் செய்துள்ளார். அதற்குரிய தகுந்த பதிலடிகளை வழங்கத் தயாராக உள்ளோம் என் வடகொரிய வெளிவிவகார அமைச்சர் எச்சரித்துள்ளார். அமெரிக்க குண்டுதாரிகள் எமது வான் எல்லைக்குள் இல்லாத பட்சத்திலும் அவர்களை சுட்டு வீழ்த்துவதும் எமது பதிலடியில் உள்ளடங்கும் என அவர் தெரிவித்தார்.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜொன் மற்றும் ட்ரம்பிற்கு இடையில் இடம்பெற்று வரும் சொற் போர் பிராந்தியத்தில் நிஜமான போரை உருவாக்குமோ என்ற அச்சத்தை உருவாக்கியுள்ளது. அமெரிக்காதான் எம்மைப் போருக்கு அழைக்கின்றது என நியூயோர்க் நகரில் வைத்து வடகொரிய வெளிவிவகார அமைச்சர் ரி யொங் கருத்து வெளியிட்டுள்ளார். இதை உலகம் மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

அமெரிக்க குண்டுதாரிகளை நாம் சுட்டு வீழ்த்துவதாயின், அவர்கள் எமது வான் எல்லைப் பரப்பில்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. எந்தத் தாக்குதலுக்கும் தகுந்த பதிலடி எம்மிடம் உண்டு என அவர் அங்கு தெரிவித்தார்.

# யெமனில் மக்கள் பட்டினியை எதிர்கொண்டுள்ளனர்



யெமனில் தாக்குதலுக்கு இலக்காகியுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் பெரும் உணவுப் பற்றாக் குறையை எதிர்கொண்டுள்ளனர். அவர்களில் கணிசமானோர் கூடாரங்களிலும் குகைகளிலும் வசிக்கின்றனர் என மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐ.நா.வின் இணைப்பு அலுவலகம் கடந்த வாரம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இடம்பெயரும் மக்களுக்கு வீட்டு வசதிகள் இல்லை என்பதினால் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற தற்காலிகக் குடிசைகளில் 10% மான உள்ளூர் அகதிகள் வாழ நேரிட்டுள்ளது என்று அவ்வமைப்பு கூறுகின்றது.

78% மான யெமனிய குடும்பங்கள் இரண்டு வருடங்களுக்கு முன்பு இருந்ததை விட மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கும் அரச ஆதரவுப் படைக்கும் இடையில் 2016 இலிருந்து ஆயுத மோதல் நடைபெற்று வருகின்றது. கிளர்ச்சியாளர்கள் முன்னாள் ஜனாதிபதி அலி அப்துல்லாஹ் ஸாலிஹின் விசுவாசிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

சவூதி அரேபியாவின் தலைமையிலான அறபுநாடுகளின் கூட்டமைப்பு [illegible] 2015 இலிருந்து [illegible] தாக்குதல் [illegible]

# கடாபியின் மகனுக்கு தேர்தலில் வேட்பாளராக நிற்க முடியும்



முன்னாள் லிபிய ஆட்சியாளர் கேர்ணல் கடாபியின் மகன் ஸைபுல் இஸ்லாம் கடாபிக்கு அடுத்த பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க முடியும் என லிபியாவுக்கான ஐ.நா. தூதுவர் கஸ்ஸாம் ஸலீம் தெரிவித்துள்ளார்.

ஸைபுல் இஸ்லாம், கடாபியின் வீழ்ச்சியைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட இடைக்கால அரசாங்கத்தினால் போர்க் குற்றம் சுமத்தப்பட்டவர். அதன்படி சிறைவாசம் அனுபவித்தவர். தற்போதைய அரசியல் மாற்றம் முன்னாள் ஆட்சியாளரின் விசுவாசிகளுக்கு தேர்தலில் குதிக்கும் வாய்ப்பினை உருவாக்கியுள்ளது. தற்போது லிபியாவில் அரசியல் களம் அனைவருக்கும் திறந்து விடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• றவூப் ஸெய்ன்

# ரோஹிங்யா:



# துயரத்தின் சில துளிகள்

ரோஹிங்யர்கள் பற்றி
அரக்கான் தேசம் பற்றி
தேடிப் பார்
பிற்பாடு
உன் மனச்சாட்சியைக் கேள்
இந்த உலகில்
திமிங்கிலங்கைப் போல்
ஏரிகளைப் போல்
அவர்களுக்கும் வாழ
உரிமையில்லாயா என்று

மியன்மாரின் மேற்கு மாநிலமான ரெக்கைனிலிருந்து கடந்த ஒரு மாதத்திற்குள் மாத்திரம் 430,000 ரோஹிங்யர்கள் பங்களாதேஷின் கொக்ஸ் பஸார் மாவட்டத்திற்குப் புலம்பெயர்ந்துள்ளனர். மியன்மாரின் இராணுவக் கெடுபிடிகளே அவர்களை வெளியேற்றியது. புலம்பெயர்ந்தவர்களில் குழந்தைகள், விதவைகள், வயது முதிர்ந்தோர், உடல் ஊனமுற்றோர் என பல்வகைப்பட்ட மக்கள் உள்ளடங்குகின்றனர். அனைவரும் போல் உணவு, உறையுள் மற்றும் சுகாதாரத் தேவைகளுக்கான மருந்துகளின்பால் உடனடித் தேவையுள்ளவர்களாக இருக்கின்றனர்.

பட்டினி மற்றும் தொற்று நோய்கள் என்பன அம்மக்கள் எதிர்கொண்டுள்ள மிகத் துயரமான பிரச்சினைகளாகும். கொக்ஸ் பஸாரின் தற்காலிக கூடாரங்களில் சேற்று நிலங்களில் தங்கியிருக்கும் அகதிகளின் அநாதரவான நிலையை அல் ஜஸீரா ஊடகவியலாளர்கள் உலகப் பார்வைக்குக் கொண்டு வருகின்றனர். அவர்களில் சிலர் முன்வைக்கின்ற துயரக் கதைகள் இவை.

★ நான் முவங் தோ பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவன். எனது மகன் அப்துல் லாஹ் மியன்மார் இராணுவத்தினரால் கொல்லப்படும்போது வயது 28. அவனே என்னைக் கவனித்து வந்தான். உயிரைக் காத்துக் கொள்வதற்கு ஏனைய கிராமவாசிகளோடு சேர்ந்து பங்களாதேஷுக்கு தப்பி வந்தேன். பாதணிகள் இல்லாத கால்களோடு நான் நீண்ட தூரம் நடந்து வந்து, பின்னர் நாப் ஆற்றைக் கடந்து கொக்ஸ் பஸாரை அடைந்தேன்.



ரெக்கைனில் அனாதரவாக விடப்பட்ட என்னை ஹாமித் ஹுஸைன் எனும் இளைஞன் காப்பாற்றினான். அவனது துணையோடு செப்டம்பர் 03 இல் மியன்மார் எல்லையைக் கடந்து இங்கு வந்தேன். இங்கு முதலில் நான் குட்டுபலோங் முகாமில் தங்கியிருந்தேன். தற்போது பலுகாலி முகாமில் இருக்கின்றேன்.

ஹாமித் என்னோடு இருக்கின்றான். ஆனால், அவனது குடும்பமும் முகாமில் தங்கியிருக்கிறது. எங்களுக்கு உண்பதற்கு ஏதேனும் உணவு தேவை. இங்குள்ள குழந்தைகளுக்கு உணவோடு தம்மை மறைத்துக் கொள்வதற்கான உடு துணிகளும் தேவைப்படுகின்றன.

★ எனது கணவன் அபூபக்ர் ஸித்தீக் 8 ஆண்டு களுக்கு முன்னர் மரணித்து விட்டார். அப்துல்லாஹ் எனது எட்டுக் குழந்தைகளில் ஒருவர். எனது ஏனைய குழந்தைகள் எங்கிருக்கி றார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. நான் எல்லாவற்றையும் அல்லாஹ்வின் மீது பாரம்சாட்டி விட்டேன். எந்தத் தாக்குதலுக்கும் பயப்படாமல் எனது இறுதி மூச்சை எடுப்பதற்கு விரும்புகின்றேன். (ஆயிஷா பேகம் 85)

★ நான் பதானத் பகுதியிலிருந்து தப்பி வந்தேன். எனது 10 பிள்ளைகளில் ஒரு மகனும் மகளுமே உயிருடன் எஞ்சியிருக்கின்றனர். ஏனைய 8 பேரும் இராணுவத்தினராலும் அங்குள்ள மதக் குழுவினாலும் கொல்லப்பட்டு விட்டனர். எனக்கு உணவு தேவை. காலையிலிருந்து நான் எதனையும் உண்ணவில்லை. உடல் வருத்தத்தின் காரணமாக என்னால் உறங்க முடியவில்ல. உங்களால் எனக்கு ஏதேனும் உதவிகள் செய்ய முடியுமா?

★ எனது மகள் நஸீமா பேகம். வயது 42. அவளது கணவன் அலிகான். பிரதான வீதியிலிருந்து மிகத் தொலைவில் வாழ்ந்தவர்கள். இவ்வாறு கூறியபோது அவரது மகள் நஸீமா பின்வருமாறு கண்ணீருடன் கருத்துத் தெரிவித்தார். நானும் கணவனும் பிள்ளைகளும் பசியோடு நாளைக் கடத்துகின்றோம். ஆனால், வயது முதிர்ந்த நிலையிலுள்ள எனது தாய்க்கு பட்டினியில் இருப்பது மிகக் கடினம்.



★ நான் கண் பார்வையை இழந்தவன். 7 நாட்களாக இந்த முகாமில் இருக்கின்றேன். எந்த மருத்துவ உதவியையும் காணவில்லை. ஒரு கண் வைத்தியரை சந்திக்க விரும்புகின்றேன். எனது பார்வைப் பிரச்சினைக்குத் தீர்வு காண எங்கேனும் மருத்துவ முகாமொன்றை அடைய முடியுமா என்று தெரியவில்லை. நான் இங்கு வந்ததில் மகிழ்ச்சி.

குறைந்தபட்சம் யாரும் என்னைக் கொல்லாமல் உயிரோடு வந்து சேர்ந்து விட்டேன். இங்குள்ள மக்கள் தாராளத் தன்மை உள்ளவர்கள். அவர்கள் உணவுகளை வழங்குகின்றனர்.

எனது கால்கள் சிறுவயதாக இருந்தபோதே செயலிழந்து விட்டன. அதனால் இதுவரை நான் திருமணம் செய்யவில்லை. எனது தாயும் தந்தையும் சில ஆண்டுகளுக்கு முன்னர் மரணித்து விட்டனர். எங்கள் ஊர் இராணுவத் தாக்குதலுக்கு இரையான போது நாம் பங்களாதேஷுக்கு வந்து சேர்வதற்கு 3 இலட்சம் மியன்மார் நாணயங்களை செலவு செய்தேன். எங்களோடு உள்ள நாணயம் தீர்ந்து வருகின்றது. அதற்குப் பின் வருமான மூலங்கள் எதுவுமில்லை. மருத்துவ செலவீனம் அதிகரிக்கின்றது. எங்களுக்கு உணவும் உறையுளும் எதிர்காலத்தில் யார் தருவார்கள்?

நாகரிகத்தின் உச்சத்தில் உட்கார்ந்திருப்பதாகக் கூச்சல் போடும் மனித குலம் இத்தகைய மனிதர்கள் குறித்து என்ன நினைக்கின்றது. ஒரு சமூகம் வேரோடு பிடுங்கி வீசப்பட்டு அகதி முகாம்களில் அபலைகளாகவும் அநாதாரவாகவும் அலைக்கழிகின்றனர். குழந்தைகள் பாலுக்காக அழுகின்றன. காயப்பட்டவர்கள், நோயாளிகள் மருந்துக்காக ஏங்குகின்றனர். வயதானோர் உயரிய சுகாதாரமின்றி அல்லாடுகின்றனர். இம்மக்களின் உயிரைக் காப்பதற்கான அடிப்படை உணவு வசதிகள் கூட இதுவரை போதியளவு வழங்கப்படவில்லை.

ஐ.நா. அகதிகள் அமைப்பு உலக நாடுகளின் உதவியை வேண்டி நிற்கின்றது. இந்நிலைமைக்குக் காரணமான மியன்மார் அரசாங்கத்தின் மீது எந்த அழுத்தங்களும் பிரயோகிக்கப்படவில்லை என்பதுதான் இன்றுள்ள துயரம் நிறைந்த செய்தியாகும்.

---

# குர்திஷ்தான் தனிநாடாகப் பிரியும் அபாயம்




ஈராக்கின் குர்திஷ்தானை தனிநாடாகப் பிரிப்பது குறித்த அபிப்பிராய வாக்கெடுப்பு செப்டம்பர் 25 இல் நடத்தப்பட்டது. இது சர்வதேச அளவில் பாரிய எதிர்ப்பையும் பதட்டத்தையும் உருவாக்கியுள்ளது. வாக்கெடுப்பின் முடிவுகள் எப்படியிருப்பினும், அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று துருக்கிய ஜனாதிபதி ரஜப் தையிப் அர்துகான் வாக்கெடுப்பை நிராகரித்துள்ளார். இவ்வாக்கெடுப்பு சர்வதேச சட்டங்களை மீறும் செயல் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சத்தாம் ஹுஸைனின் ஆட்சியின் போது ஒன்றுபட்டிருந்த ஈராக்கை 2003 இல் அமெரிக்கா ஆக்கிரமித்ததன் பின்னர் மூன்று சுயாதிக்கப் பிராந்தியங்களாகப் பிரித்தது. தெற்கு பெரும்பான்மை ஷீஆக்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்ததோடு, வடக்குப் பிராந்தியம் குர்திஷ்களின் தன்னாட்சிப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டது. மத்திய ஈராக் சுன்னிகள் செறிவாக வாழும் பிராந்தியம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈராக்கின் மத்திய அரசாங்கம் இந்த வாக்கெடுப்பை வன்மையாகக் கண்டித்துள்ளதோடு, தனது கடும் எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளது. பிராந்தியத்தின் சர்வதேச எல்லைகள் மற்றும் விமான நிலையங்களில் மத்திய அரசாங்கம் தனது பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளது.

ஈராக்கின் வடக்குப் பிரதேசம் குர்திஷ்கள் ஓரளவு செறிவாக வாழும் பிராந்தியமாகும். கிர்குக் மாகாணம் இதில் அமைந்துள்ளது. ஈராக்கின் மொத்த எண்ணெய் வளத்தில் 80%மானவை இப்பிராந்தியத்திலே காணப்படுகின்றது. சடுதியாக அறிவிக்கப்பட்ட தனிநாட்டுக்கான வாக்கெடுப்பு ஈராக்கின் எதிர்காலம் குறித்த நிச்சயமின்மைகளை உருவாக்கியுள்ளது.

ஈராக்கில் நீண்டகாலமாக நிலவி வரும் பிரிவினைவாதம் சத்தாமுக்குப் பின்னர் கூர்மையடைந்தது. ஈராக்கில் இராணுவத் தலையீடு செய்த அமெரிக்கா மற்றும் அதன் நேச நாடான இஸ்ரேல் இப்பிரிவினைக்குத் தூபமிட்டது. பத்தாண்டு கால இராணுவப் பிரசன்னத்தைத் தொடர்ந்து அமெரிக்கா கொண்டு வந்த அரசியலமைப்புத் திருத்தம் ஈராக்கை நீண்டகாலத்தில் மூன்று நாடுகளாகக் கூறுபோடும் உள்நோக்கம் கொண்டது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னரேயே யாப்புத் திருத்தம் முன்வைக்கப்பட்டபோது இந்த விமர்சனங்கள் மேலெழுந்தன. இப்போது அந்த அபாய எச்சரிக்கைகள் நடைமுறைக்கு வந்துள்ளதை ஈராக்கிய மத்திய அரசாங்கம் உள்ளிட்டு அறபு முஸ்லிம் நாடுகள் அச்சத்தோடு பார்க்கின்றன.

கிர்குக் ஈராக்கின் எண்ணெய் குதம் நிரம்பிய பிராந்தியம். தற்போதைய வாக்கெடுப்பு அதனைத் தாண்டி பல இனங்கள் கலந்து வாழும் இர்பில் நகரிலும் பக்தாதின் ஒரு பகுதியிலும் நடத்தப்படுகின்றது.

ஈராக்கின் மீதான அமெரிக்காவின் படையெடுப்பைத் தொடர்ந்து வடக்கு ஈராக் மீது அமெரிக்கப் பெற்றோலியக் கம்பனிகளுக்கு ஒரு கண் இருந்து வந்தது. ஏற்கனவே குர்திஷ்கள் செறிவாக உள்ள இப்பிராந்தியத்திற்கு தன்னாதிக்க அதிகாரப் பிராந்தியம் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளதோடு, மதச்சார்பற்ற குர்திஷ் கட்சிகள் அப்பிராந்தியத்தை ஆண்டு வருகின்றன. மஸ்ஊத் பர்ஸானி, ஜலால் தலபானி ஆகியோர் தலைமையிலான இரண்டு குர்திஷ் கட்சிகளின் கூட்டாட்சி அங்கு நடைபெறுகின்றது.

உண்மையில் ஈராக்கில் இன்று நடப்பதென்ன? சுதந்திர தனிநாடு கோரும் குர்திஷ்கள் யார்? பிரிவினைக்குப் பின்னாலுள்ள சக்திகள் யார்? அர்துகான் போன்றவர்கள் இவ்வாக்கெடுப்பை கடுமையாக எதிர்த்து நிற்பதற்கான காரணம் என்ன? இக்கேள்விகள் ஈராக்கின் புவி அரசியலைப் பொறுத்தமட்டில் முக்கியத்துவம் வாய்ந்தவை.

குர்திஷ்கள் என்போர் அறபு இஸ்லாமிய உலகில் வாழ்ந்து வரும் சிறுபான்மை இனத்தவர்கள். சமயத்தில் முஸ்லிம்களாக இருக்கின்றபோதும், தமது குர்திஷ் இன அடையாளத்தை முன்னிலைப்படுத்துகின்றவர்கள். ஈராக், ஈரான், சிரியா, துருக்கி ஆகிய நான்கு நாடுகளிலும் இவர்கள் சிறுபான்மையாக வாழ்கின்றனர். இந்நான்கு நாடுகளினதும் எல்லைப் புறங்களில் வாழ்ந்து வரும் இவர்ள் சார்பாக கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக தனிநாட்டுக் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டு வந்தது. இந்நான்கு நாடுகளிலும் ஒப்பீட்டு ரீதியில் இன்று குர்திஷ்கள் அரசியல் பலம் பெற்றுள்ள நாடு ஈராக் ஆகும். துருக்கியிலும் கணிசமான குர்திஷ் மக்கள் வாழ்கின்றனர்.

சத்தாமின் ஆட்சிக் காலத்தில் ஈராக்கில் இவர்களது அரசியல் கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டன. அவர்களின் மொழி அடையாளத்தை அழித்து, அறபு மயமாக்குவதன் மூலம் தன்னாட்சிக் கோரிக்கைக்கான அரசியல் நியாயத்தை அழிக்கலாம் என சத்தாம் கருதியதால் அவர்கள் மீது அறபுமொழி மூலக் கல்வி திணிக்கப்பட்டது.

குர்திஷ்களின் ஆயுதப் புரட்சியை அடக்குவதற்கு சத்தாம் ஹுஸைன் இரசாயன ஆயுதங்களை அவர்கள் மீது பயன்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டது. எப்படியோ சத்தாமின் காலம் முழுவதும் ஈராக்கிய குர்திஷ்களிடையே பிரிவினை வாதம் தலைதூக்காமல் கவனமாக அடக்கப்பட்டது.

ஷா ஈரானை ஆண்டபோது அவரது ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்து தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்த குர்திஷ்கள் தெஹ்ரானின் கடும் ஒடுக்குமுறையை எதிர்கொண்டனர். இந்நான்கு நாடுகளிலும் ஒப்பீட்டு ரீதியில் மிகக் கடுமையாக ஒடுக்கப்பட்டவர்கள் ஈரானிய குர்திஷ் மக்களே. அவர்கள் இன்று தனிநாட்டுக் கோரிக்கையிலிருந்து விலகி அமைதி அடைந்து விட்டது போலவே தெரிகின்றது.

சிரியாவில் வாழும் குர்திஷ் சிறுபான்மை மக்கள் ஏனைய மூன்று நாடுகளுடன் ஒப்பிடும்போது சனத்தொகையில் குறைந்தவர்கள். அவர்கள் தனிநாட்டுக் கோரிக்கை ஒன்றை முன்வைக்கும் அளவுக்கு ஒழுங்குபடுத்தப்பட்டவர் அல்லர். இவர்கள் ஏற்கனவே, ஹாபிஸ் அல் அஸதின் அரசியல் ஒடுக்குமுறையை எதிர்கொண்டவர்கள்.

இன்று ஈராக்கை அடுத்து ஓரளவு அரசியல் பலம் பெற்றுள்ள குர்திஷ்கள் சிறுபான்மையாக வாழும் அடுத்த நாடு துருக்கியாகும். அங்கு அப்துல்லாஹ் ஒகலானின் தலைமையில் உருவாகிய குர்திஷ் தொழிலாளர் கட்சி ஒரு கட்டத்தில் ஆயுதம் ஏந்தத் தொடங்கியது. துருக்கிய அரச படையினருக்கும் குர்திஷ் தொழிலாளர் கட்சியின் அயுதப் பிரிவுக்கும் இடையில் கடந்த சில பத்தாண்டுகளாக மோதல் நிகழ்ந்து வருகின்றது.

முன்னாள் ஆட்சியாளர் அர்பகானின் காலத்தில் குர்திஷ் மக்களோடும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளோடும் பேச்சுவார்த்தைகளை நடத்தி, அவர்களது அரசியல் அபிலாசைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று கருதிய அர்பகான், குர்திஷ் அரசியல் கட்சிகளோடு பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார். ஆனால், அவரது முயற்சி அவருக்கு எதிராக துருக்கிய இராணுவம் மேற்கொண்ட இரத்தம் சிந்தாப் புரட்சியின் மூலம் முடிவுக்கு வந்தது.

2003 இலிருந்து கடந்த 14 ஆண்டுகளாக அதிகாரத்தில் நீடிக்கும் அர்துகானின் AKP அர்பகானின் நோக்கில் இப்பிரச்சினையை அணுகவில்லை. அதற்கான காரணம், முன்பை விட குர்திஷ் தொழிலாளர் கட்சியின் இராணுவத் தாக்குதல்கள் தீவிரமடைந்தமைதான் எனக் கூறப்படுகின்றது. அதை ஒரு அரசியல் நியாயமாகக் கருதலாமா என்பது ஆய்வாளர்களைப் பொறுத்தவரையில் சிக்கலான கேள்விதான்.

கடந்த 20 ஆண்டு காலமாக குர்திஷ் மக்களுக்கு மத்தியில் இஸ்லாமிய தஃவா மற்றும் அடையாளப் போராட்டங்கள் கவனமாக முன்னெடுக்கப்பட்டதன் விளைவாக, அச்சமூகத்தின் பெரும் பகுதியினர் தாம் வாழும் நாடுகளின் பிரஜைகளாக வாழ்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். ஆனால், குர்திஷ் மக்களை முன்னிறுத்தி அவ்வினத்தின் பெயரால் அரசியல் இலாபம் தேடும் கட்சிகள் நான்கு நாடுகளிலும் உள்ள குர்திஷ்கள் வாழும் பிராந்தியங்களை ஒன்றிணைத்து ஒரு தனிநாடு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இதுவரை கைவிடவில்லை.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியத் தீர்வுகளை இந்த நாட்டில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இஜ்திஹாத் செய்வதே இன்றைய தேவையாகும்

**கலாநிதி கநோக் வொங்ட்ரன்கோன்**
ஆலோசகர் - இஸ்லாமிய கற்கைகள் பீடம்
பட்டானி வளாகம், பிரின்ஸ் ஸொங்க்லா பல்கலைக்கழகம், தாய்லாந்து

(ஜாமிஆ நளீமிய்யா ஏற்பாடு செய்த ''இலங்கை-தாய்லாந்து சூழலில் இஸ்லாம், பௌத்தத்துக்கிடையிலான சகவாழ்வு'' எனும் தலைப்பில் பௌத்தராகிய கலாநிதி கநோக் ஆற்றிய உரையிலிருந்து...)

இலங்கையும் தாய்லாந்தும் பௌத்த நாடுகள் எனபதற்கப்பால் இரு நாடுகளுக்கும் இடையில் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. தாய்லாந்தின் 65 மில்லியன் மக்களில் 90 வீதமானவர்கள் பௌத்தர்கள், 10 வீதமானவர்கள் முஸ்லிம்கள். அதுபோல இலங்கையில் 80 வீதமான பௌத்தர்களுடன் 10 வீதமான முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். இரு நாடுகளிலுமே முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்வதோடு இருநாடுகளிலும் முஸ்லிம்களின் சனத்தொகை வீதம் 10 ஆக இருப்பது சிறப்பானதொரு ஒற்றுமை.

இருநாடுகளிலும் மதஉரிமை யாப்பில் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் இரு நாடுகளிலும் பௌத்த முஸ்லிம் பதற்றம் நிலவுகிறது. இவற்றுக்கிடையில் எப்படிச் சமாதான மாக வாழ்வது என்பதையே இங்கு நாங்கள் சிந்திக்க வேண்டும்.

தாய்லாந்திலுள்ள 10 வீதம் முஸ்லிம்களும் தென்பகுதியில் உள்ள மூன்று மாகாணங்களில் வாழ்கிறார்கள். இந்த மூன்று மாகாணங்களிலும் முஸ்லிம்கள் 80 வீதம் இருக்கிறார்கள். இதனால் அவர்களை தெளிவாக வேறுபடுத்திப் பார்க்க முடிகிறது. இலங்கையில் இவ்வாறான அடர்த்தி இல்லை. தாய்லாந்தில் நாங்கள் முஸ்லிம் மாகாணங்களுக்குச் சென்றால் அது முஸ்லிம் நாடுபோல இருக்கிறது. நான் இந்த மாகாணத்துக்குச் செல்ல வேண்டி வந்தபோது எனது மனைவி பௌத்த கடவுள்களிடம் பாதுகாப்புத் தேடினாள்.

இரு நாடுகளிலும் ஒரே மதங்களே பின்பற்றப்படுகின்றன. இரு மதங்களும் மனிதனுக்கு அப்பாற்பட்ட ஒன்றை நம்புகிறது. தேரவாத பௌத்தம் இயற்கையின் சக்தியே மனிதனை ஆள்கிறது என்கிறது. இஸ்லாம் அதனை தௌஹீத், சுன்னதுல்லாஹ் என்று வரையறுக்கிறது. அல்லாஹ்வின் நாட்டப்படியே அனைத்தும் நடக்கும் என்ற கருத்தினை அவர்கள் இன்ஷா அல்லாஹ்வை ஊடாக வெளிப்படுத்துகிறார்கள். எனது பகுதியை நான் செய்து விட்டேன். மீதியை அல்லாஹ்விடம் விட்டு விடுகிறேன் என்பது தான் இதனுடைய அர்த்தம்.

இதுபோல பௌத்தம் கர்மாவை நம்புகிறது. எல்லாமே ஏற்கனவே திட்டமிடப்பட்டவை என்று அது நம்புகிறது. அனைத்தும் ஏற்கனவே திட்டமிட்டபடி தான் நடக்கும் என்று இரண்டு சமூகங்களும் நம்பினாலும் இரண்டு சமூகத்திலுமே பதற்றம் நிலவுகிறது. இந்தப் பதற்றமே வன்முறையாக மாறுகிறது. இந்த வகையான பதற்றத்தின் இயல்பை நாங்கள் எவ்வளவு விளங்கியிருக்கிறோம், அதற்குரிய தீர்வுகளை நோக்கி எவ்வளவு தூரம் நகர்ந்திருக்கிறோம் என்பதே எம்முன்னாலுள்ள கேள்வி. இன்ஷா அல்லாஹ் என்று வாயால் மொழிவதை விட அல்லாஹ்வின் நாட்டத்தைப் சிந்திப்பது சிறந்ததாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

### இலங்கை தாய்லாந்து சவால்கள்

வறுமை என்பது இரண்டு நாடுகளுக்கும் பொதுவானதொரு சவால். அறிவு இங்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்டவர்களே பெரும்பான்மையாக இருக்கிறார்கள். இவ்வாறான பலவீனங்களால் எமது கல்வியும் ஒதுக்கமும் அரசியல் ரீதியாகவே கையாளப்படுகிறது. இந்த உண்மையை நாங்கள் வெளிக்கொணர வேண்டும். அல்குர்ஆன் இதனை யப்கஹூன் என்கிறது. அந்த யப்கஹூனைத் தான் நான் செய்கிறேன்.

ஒதுக்கப்பட்ட, கல்வியறிவு குன்றிய மக்க ளின் பொருளாதார சமூகப் பிரச்சினைகள் பதற்றங்களாக மாறி வன்முறையைத் தோற்று விக்கிறது. நாங்கள் இருக்கின்ற நிலையில், சில முக்கியமான சவால்கள் எமது சகவாழ்வை பாதிக்கின்றன. இவை இரண்டு நாடுகளுக்கும் பொதுவான சவால்களாகவே காணப்படுகின் றன. அதில் முதலாவது சமத்துவமின்மை. ஏழை-பணக்காரன், கற்றவன்-கல்லாதவன், உயர்ந்தவன்-தாழ்ந்தவன் என்ற வேறுபாடுகள் சமத்துவமின்மையைத் தோற்றுவிக்கின்றன. இரண்டு மதங்களுமே சமத்துவத்தை வலியுறுத்துகிறது என்ற வகையில் இதை நாங்கள் இணைந்து வெல்ல முடியும்.

இரண்டாவது அநீதி இழைக்கப்படல். சட்டத்தின் முன் சகலரையும் சமமாகக் கருதுகின்ற நிலை வேண்டும். பெரிய சிறிய வியாபாரங்கள் ஒரே மாதிரியாகப் பார்க்கப்பட வேண்டும். முஸ்லிம் வியாபாரிகள் இந்த விடயத்தில் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும். தனது வியாபாரத்தினூடாக அடுத்தவனுக்கு அநீதி இழைக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மூன்றாவது முரண்பாடுகள். முரண்பாடுகளைக் களைந்து ஒற்றுமையை வளர்க்க வேண்டும். ஒற்றுமை என்பது பௌத்த முஸ்லிம் ஒற்றுமை மட்டுமல்ல. முஸ்லிம்-முஸ்லிமுக்கிடையேயும் ஒற் றுமையை வளர்க்க வேண்டும். இவ்வாறான சமகால சவால்கள் இருநாடுகளிலும் சமாதானத்துக்கும் அபிவிருத்திக்கும் சவால் விடுகின்றன. எமது நல்லிணக்கத்தை அது பாதிக்கிறது.

இவை இருநாடுகளுக்கும் பொதுவானவையே. இதனை முகாமை செய்ய முயற்சித்தாலும் அது எம்மால் சாத்தியமாகவில்லை. இது முக்கியமான ஒரு கேள்வியை எழுப்புகிறது. இந்தச் சூழலில் நாங்கள் எப்படி அமைதியான வாழ்வைக் கட்டியழுப்புவது? இதை நாங்கள் பௌத்தர்களும் முஸ்லிம்களும் ஒன்றாக அமர்ந்து சிந்திக்க வேண்டும்.

எங்களுக்குப் பொதுவான இலக்குகளும் நோக்குகளும் உள்ளன. நாங்கள் எதிர்நோக்கும் யதார்த்தத்தை விளங்கினால் அது விளங்கும். தொடர்புகளை அதிகரிப்பதன் ஊடாகவே இந்த யதார்த்தத்தை நாங்கள் விளங்கலாம். பௌதீக ரீதியாக நாங்கள் பல்வேறு விடயங்களிலும் பிரிந்திருக்கிறோம். எங்களுக்கு வேறு வேறு பாடசாலைகள் உள்ளன. சாப்பிடுவதற்கு தனியான ஹலால் ஹோட்டல்கள் இருக்கின்றன. ஹலால் சிறந்தது. அதனை நாங்கள் அடுத்தவர்களுக்கும் சொல்ல வேண்டும். இவ்வாறான இடங்களில் எல்லாம் பௌதீகத் தொடர்பாடலை வளர்க்க வேண்டும். பொதுவேலைகளில் சேர்ந்து செய்ய வேண்டும். பௌத்த மாணவனின் கல்விக்கு முஸ்லிம் உதவ வேணடும். அதே போல முஸ்லிம் மாணவனின் முன்னேற்றத்துக்கு பௌத்தர்கள் உதவ வேண்டும். இது புரிந்துணர்வை வளர்க்கும். இதிலிருந்து நாங்கள் தொடங்க முடியும்.

ஒரு உதாரணத்தைச் சொல்லுகின்றேன். நாங்கள் முஸ்லிம் கிராமமொன்றுக்குச் சென்றோம். அங்கு பௌத்தர்களும் இருந்தார்கள். இரண்டு சமூகத்துக்கும் பொதுவான பிரச்சினையை நாங்கள் இனங்கண்டோம். வறுமை தான் இரு சமூகங்களினதும் பிரச்சினையாக இருந்தது. மதச்சார்பில்லாதவர்கள் வறுமைக்கு வழங்கும் தீர்வையும், இஸ்லாம் வழங்கும் தீர்வையும் வைத்து அவர்களது பிரச்சினைகளை ஆராய்ந்தோம். எடுக்கும் கைகளாகவன்றி கொடுக்கும் கைகளாக அவர்கள் மாற வேண்டும் என்ற தீர்வுக்கு வந்தோம். இரண்டு சமூகங்களுக்கும் பொதுவாக நாங்ள் அல்லாஹ் சொன்ன ஸகாத்தை நடைமுறைப் படுத்தினோம். மேற்கு நாடுகள் சமூக அபிவிருத்தித் திட்டம் (Community Development Project) என்ற பெயரில் ஸகாத்தையே நடைமுறைப்படுத்துகின்றன. நாங்கள் அதை நேரடியாகவோ நடைமுறைப்படுத்தினோம். மக்களின் நிதியுடன் அங்கு பாரிய தொழிற்சாலைகள் உருவாகின. தற்போது இவர்களுடைய முயற்சியினால் இவர்கள் மாதம் 40,000 ரூபா சம்பாதிக்கிறார்கள். மக்களுக்கு பயான் பண்ணுவதை விட களத்துக்குச் சென்று அவர்களுக்குத் தீர்வு வழங்கும் போது அதனால் அனைவரும் நன்மை அடைவார்கள். இதனை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பது இஜ்திஹாதை வேண்டி நிற்கிறது. இஸ்லாமியத் தீர்வுகளை பொதுவான தளத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இஜ்திஹாத் செய்வதே இன்றைய தேவையாகும்.

இரண்டாவது செயற்றிட்டம். புறக்கணிப்புக்கு ஆளாகிய முஸ்லிம் சமூகமொன்றை நாங்கள் சந்தித்தோம். இந்தப் பிரதேசத்தில் பௌத்த சீனர்கள் புதிய முதலீடுகளை ஆரம்பித்திருந்தார்கள். ஆனாலும் இங்குள்ள முஸ்லிம்களை சிறிய தரத்திலான வேலைகளுக்கே ஈடுபடுத்தினார்கள். முஸ்லிம் ஆண்களை செகியூரிட்டியாகவும், பெண்களை பணிப்பெண்களாகவும் வேலைக்கு எடுக்கவே இவர்கள் தயாராக இருந்தார்கள். ஏன் இவர்களை மனேஜர்களாக, கணக்காளர்களாக உள்ளீர்க்க முடியாது என்று நான் வினவினேன். அவர்களது பிரச்சினை கல்வி. இந்தப் பதவிகளுக்குத் தகுதியான கல்வி அவர்களிடம் இருக்கவில்லை. நாங்கள் முஸ்லிம்களது மத்ரஸாக்களின் பாடத் திட்டத்தை அவதானித்தோம். அது மதம் சார்ந்ததாக மட்டுமே இருந்தது. அந்தப் பாடத் திட்டத்துடன் நாங்கள் உடன்படவில்லை. அவர்களுடைய பாடத் திட்டத்தில் துறைசார்ந்த விடயங்களைச் சேர்த்தோம்.

ஸினா பற்றிய பாடம் நடத்துவதை நாங்கள் அவதானித்தோம். ஆணும் பெண்ணும் நெறிமுறைக்கு மாற்றமாக இணைவதை இஸ்லாம் ஸினா என்று தடுக்கிறது. ஆனால் இப்படிச் சேர்ந்தாலும் பிறப்பு என்ற ஒன்று நடக்கிறதே என்று மதச்சார்பின்மை கல்வி கற்றவர்கள் கேட்கிறார்கள். இவர்களுக்கு ஸினா பாவம் என்று [illegible]



பிறப்புக்கும் ஒரு ஒழுங்கு, நெறிமுறை இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். இந்த விளக்கத்துடன் அதனை விஞ்ஞானத்தில் நுழைக்க வேண்டும். தனியாக உலகாயுத பாடங்களை மட்டுமே படிப்பது எங்களை அழிவுக்கே இட்டுச் செல்கின்றன. அறிவை இஸ்லாத்தின் ஊடாக வழிநடத்தும் பணியை நாங்கள் செய்ய வேண்டும். இன்று மதக் கல்வியும் உலகக் கல்வியும் வேறுபடுத்தப்பட்டிருக்கின்றன. இதனை நாங்கள் மாற்றினோம். இஸ்லாம் சொல்லுகின்ற அறிவை நாங்கள் உலகக் கல்வியில் புகுத்தினோம். இதனை இந்த மாணவர்களுக்கு நாங்கள் புகட்டினோம். முதல் குழுவில் 60 பேர் சேர்ந்தனர். ஒரே வருடத்தில் இவர்களுடைய சிந்தனையில் நாங்கள் மாற்றத்தைக் கொண்டு வந்தோம். ஒரே வருடத்தில் நாங்கள் தென் தாய்லாந்தில் சிறந்த பாடசாலையாக மாறினோம்.

இந்தப் புதிய அணுகுமுறையால் நான் இஸ்லாம் புனிதமானது என்பதை அறிந்தேன். இங்குள்ள பாடசாலைகளில் முஅல்லிம்களே இருக்கிறார்கள். அவர்கள் வெறுமனே கற்பிக்கின்ற வேலையைத் தான் செய்கிறார்கள். எங்களுக்கு முரப்பிகள் தேவை. இவர்கள் வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்களை வழிநடத்துபவர்களாக இருக்க வேண்டும். விளையாட்டின் போது மாணவர்களுடன் ஆசிரியர்களையும் அனுப்பி களத்தில் அவர்களுக்குப் போதனை நடத்தினோம். களைப்படைந்த மாணவர்களையும் உற்சாகப் படுத்தி வெல்ல வைப்பதற்கு அந்த ஆசிரியர்களால் முடிந்தது. களைப்படைந்து வீழ்ந்த பின் உன்னை மீள எழுப்பிவிட்டது எது என்பதை அடுத்தவர்களுக்குச் சொல்ல வைத்தோம். இது எங்களை முதல் தரத்தில் கொண்டு போய் நிறுத்தியது.

இந்த அனுபவத்தை வைத்து நாங்கள் 20-25 பாடசாலைகளை உருவாக்கினோம். இப்படி நாங்கள் முரப்பிக்களை கற்பித்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி நாங்கள் வெற்றி கண்டோம். இஸ்லாம் சொல்கின்ற அறிவை நடைமுறைப்பாடத்திட்டத்தில் இணைப்பதற்கு நாங்கள் முயற்சிக்க வேண்டும். இஸ்லாமியக் கோட்பாடுகளை வைத்து கணிதத்தை எவ்வாறு கற்பிப்பது என்பது தொடர்பில் எனது அடுத்த விரிவுரை தாய்லாந்திலுள்ள அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நடத்தப்படவிருக்கிறது.

இது நடைமுறைச் சாத்தியமானது என்பதையே நான் சொல்கிறேன். இரண்டு வகைக் கல்வி முறையிலும் படிப்பவர்கள் இருப்பதால் அமைதிக்குப் பதிலாக பிரச்சினைகளே தோன்றுகின்றன. எனது மாணவர்கள் பிரச்சினைக்குரியவர்களாக இருக்கக் கூடாது என்று விரும்பினேன். அதற்காக நான் இஸ்லாத்தைப் படிக்க வேண்டும் என்று நினைத்தேன். குர்ஆனைப் படித்தேன். சில குர்ஆன் வசனங்களை எனது கல்லூரியின் தத்துவமாக்கினேன். கல்லூரி வாசலில் இஹ்தினஸ் ஸிராதல் முஸ்தகீமை எழுதிவைத்தேன். ஸிராதல் முஸ்தகீமை நீங்கள் தெரிவுசெய்யாவிட்டால் நீங்கள் வேறு கல்லூரிக்குப் போகலாம் என்று சொன்னேன். உம்மதன் வஸதன் கோட்பாட்டை மாணவர்களுக்கு எடுத்துக் காட்டினேன். இலங்கையிலும் வஸதிய்யா சிந்தனை அமுல்படுத்தப்பட வேண்டும். ஹிதாயத்தை சமநிலைப்படுத்துவது வஸதிய்யா சிந்தனைதான். வெளியேறும் வாயிலில் ரஹ்மதன் லில் ஆலமீனை எழுதி வைத்தேன். ஆலமீன் கோட்பாட்டை அவர்களுக்கு விளங்க வைத்தேன்.

இஸ்லாமும் பௌத்தமும் நடைமுறைக்கேற்ற மார்க்கங்கள். ஆகவே இதை நடைமுறைப்படுத்த வேண்டும். நிறைய பௌத்தர்கள் இஸ்லாத்தையும் நிறைய முஸ்லிம்கள் பௌத்தத்தையும் விளங்க வேண்டும். இதனூடாக அடுத்தவர்களை விளங்கலாம்.

இஸ்லாத்தைப் படித்ததன் ஊடாக விழுமியங்களையும் பயன்பாட்டையும் என்னால் அறிந்து கொள்ள முடிந்தது. பாரபட்சம் என்னிடம் குறைந்தது. ஹலால் கோட்பாடு சுகாதாரமானது என்பதையும் முஸ்லிம்கள் சுகாதாரமானவர்கள் என்பதையும் உணர்ந்தேன். முஸ்லிம்களையும் இஸ்லாத்தையும் அங்கீகரித்தேன். ஆனாலும் நீங்கள் ஏன் இஸ்லாத்தைத் தழுவவில்லை என்று பலரும் கேட்டதற்கு நான் அது அல்லாஹ்வுடைய முடிவில் இருக்கிறது என்று சொன்னேன். அதுவரை நீங்கள் என்னை அபுதாலிப் அன்று வைத்துக் கொள்ளலாம்.

இஸ்லாம் நம்பிக்கை, செயற்பாடு என்ற இரண்டு விடயங்களைக் கொண்டுள்ளது. இஸ்லாமிய சட்டங்கள் குர்ஆனிலிருந்தும் ஹதீஸிலிருந்தும் பெறப்பட்டவை. இதை நடைமுறைப்படுத்துவது தான் முஸ்லிம் உம்மா. இதைவிட்டு வேறு விடயங்களைப் பின்பற்றுவதால் தான் முஸ்லிம் உம்மா பலவீனப்பட்டிருக்கிறது. சமகால உலகில் அதனை நடைமுறைப்படுத்துவதில் அவர்கள் கஷ்டங்களை எதிர்நோக்குகிறார்கள். இதனை முஸ்லிம் உலமாக்கள் நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டும். இஸ்லாம் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற சர்வதேச கொள்கையை பிரகடனப்படுத்துகிறது. அல்லாஹ்வுடைய ஸுன்னாதான் உலகை ஆள்வதாக இது சொல்கிறது. ஒரே ஒழுங்கில் இது உலகை இயங்கச் செய்கிறது. இந்தக் கோட்பாடு அனைத்தையும் உள்ளடக்கியிருக்கிறது. இஸ்லாத்தின் உண்மையைத் தேடிப் பார்த்தால் இது விளங்கும். இதற்கு எமது ஞானத்தை பயன்படுத்த வேண்டும். உணர்வையல்ல.

பௌத்த, இந்து கிறிஸ்தவ நண்பர்களை அழைத்து இந்தக் கோட்பாட்டை கலந்துரையாட வேண்டும். இதனைச் செய்வதனூடாக நாங்கள் அல்லாஹ்வை நெருங்க முடியும். முஸ்லிம்கள் தமது பிரச்சினைகளின் போது அல்லாஹ்வை மறந்து விடுகிறார்கள். பிரச்சினைகளுக்கான தீர்வை இஸ்லாத்துக்கு வெளியில் தேடுகிறார்கள்.

இஸ்லாம் எனக்கு யதார்த்தத்தை விளங்கிக் கொள்ள உதவியது. நான்கு மூலாதாரங்களூடாக நான் விளங்கினேன். முஸ்லிம்கள் இஜ்மாவையும் கியாஸையும் படிப்பிப்பதில்லை. இஸ்லாமியக் கல்வி இதனை மீள்பரிசீலிக்க வேண்டும்.

முஸ்லிம்களும் பௌத்தர்களும் எப்படி புரிந்துணர்வை வளர்ப்பது என்று நான் சிந்தித்தேன். அதில் முதலாவது செய்ய வேண்டியது இதயத்தைத் திறந்து விடுவது. மூடிய இதயங்கள் இருக்கக் கூடாதவை என்று குர்ஆன் சொல்கிறது. அடுத்ததாக, தகவல்களையும் விபரங்களையும் செவிமடுக்கத் தொடங்கினேன். இதுவும் குர்ஆனும் சுன்னாவும் சொல்லித் தந்ததே. மூன்றாவதாக இரண்டு மதங்களுக்கும் இடையிலான வித்தியாசத்தை விளங்கினேன். இரண்டுக்குமான பிரிகோடுகளை மதித்தேன். கடைசியாக எனது அறிவைப் பயன்படுத்தினேன். இப்படித்தான் நான் இந்தப் புரிதலை வளர்த்துக் கொண்டேன்.

இலங்கையில் முஸ்லிம்களும் பௌத்தர்களும் இணைந்து வேலை செய்ய வேண்டும். சொற்பொழிவுகள் அதன் ஆரம்பமாக இருக்கலாம். ஆனால் களத்தில் இறங்கி தூய்மையாக வேலை செய்வதே இன்று வேண்டப்படுகிறது. உண்மையான பிரச்சினைக்கு சாத்தியமாக தீர்வுகளை முன் வைத்து அதனை படிப்படியாக நடைமுறைப்படுத்த வேண்டும். நபிகளார் மக்காவில் இருந்து மதீனாவுக்குப் பின்வாங்கிய வரலாறை நாம் படித்திருக்கிறோம் என்ற வகையில் பின்வாங்குவதை நாங்கள் ஏன் யோசிக்கக் கூடாது?

நபிக்குப் பின்னரான முதல் முன்னூறு வருடங்களும் இஸ்லாம் செழிப்பாக இருந்ததன் காரணம் என்ன? இதனை எமது சமகால நிகழ்வுக்கு எப்படிப் பொருத்தலாம் என்று யோசிக்க வேண்டும். உஸ்மானிய சாம்ராஜ்யம் ஏன் வீழ்ந்தது? காலனித்துவத்தையும் முதலாளித்துவத்தையும் எதிர்கொள்ள முடியாமலேயே இது வீழ்ந்தது. இதற்கு தோல்வி அடைந்து பின்னடைவது தான் வழியா? அந்த இரண்டு சிந்தனைகளையும் வெல்வதற்கு ஏன் இஸ்லாத்தைப் பயன்படுத்த முடியாமல் போனது ? எண்ணெய் வள நாடுகளின் பணம் ஏன் உலகில் சமாதானத்தைக் கட்டியெழுப்பப் பயன்படவில்லை. இதைச் சுற்றி எனது கேள்விகள் அமைந்தன. அதற்கான விடையையும் நானே தேடிக் கொண்டேன்.

சிந்தனைச் சுதந்திரம் இஸ்லாத்தில் வழங்கப்பட்டுள்ளது. இதனால் யாரும் தாராளமாகச் சிந்திக்கலாம். அறிவை வரையறுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது. நாங்கள் இஜ்திஹாதைப் பயன்படுத்த வேண்டும். தக்லீத் இதற்குத் தீர்வைத் தராது. மத்ஹபுகளிலேயே தங்கியிருக்காமல் வெளியில் இருந்து சிந்திக்க வேண்டும்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• எம்.எச்.எம். நாளிர்

# நினைவுபடுத்த வேண்டிய நல்லாசிரியர்கள்



பொதுவாக கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுபவரை 'ஆசிரியர்' என்ற சொல் சுட்டிக் காட்டுகின்றது. ஆங்கிலத்தில் Teacher என்ற சொல் கற்பித்தல் என்ற கருத்தை மட்டும் தருகின்றது. ஆனால், ஆசிரியர் என்ற சொல் அந்தக் கருத்தை விட ஆழமானது. ஆசு, இரியர் என்ற இரு சொற்களின் இணைப்பாகவே ஆசிரியர் என்ற சொல் பிறந்துள்ளது. இதன் கருத்து குறை களைப்பவர் என்பதாகும். எமது மரபில் நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் பணியைச் செய்பவர் என்று குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

ஆசிரியர் ஆற்றும் பணிகள் பல் வகைப்பட்டவை. பாடத் திட்டத்தில் அல்லது பாடப் புத்தகத்தில் தரப்பட்டுள்ள பாடங்களை மாத்திரம் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதே அவரது பணி எனக் கொள்வது பொருத்தமற்றதாகும். அவரது பொறுப்பும் பணியும் விசாலமானவை. அதற்கான தகுதியும் முயற்சியும் பயிற்சியும் அவரில் காணப்பட வேண்டும்.

''எவர் கற்பதற்குத் தயாராக இல்லையோ, அவர் கற்பிப்பதற்கும் தகுதியற்றவர்'' என்ற கருத்து கல்வி உலகில் வலியுறுத்தப்படுகின்றது. அவர், தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பை, தான் வாழும் தேசத்தை, காலத்தை, தன்னிடம் வந்து சேரும் மாணவரை நன்கு அறிந்திருப்பார். அனைத்துக்கும் மேலாக தான் யார் என்பதை நன்கு விளங்கியிருப்பார்.

ஆதலால் அல்லாஹ் தன்னிடம் ஒப்படைத்துள்ள பணியை, இறையச்சத்தோடு நிறைவேற்றி வருவார். தன்னிடம் கற்க வரும் மாணவர்களுக்கு மட்டுமல்ல, தன்னோடு பணியாற்றும் ஏனைய ஆசிரியர்களுக்கும் முன்மாதிரியாக இருப்பார். ஆசிரியரிடம் காணப்பட வேண்டிய சுய கட்டுப்பாட்டை -தன்னடக்கத்தை உறுதியாக பற்றி நிற்பார். குரு எவ்வழி சீடன் அவ்வழி என்பதால் அவர் சீடர்களுக்கு . வழிகாட்டியாக நடந்து கொள்வார்.

ஏனைய தொழில் அல்லது பணிகளை ஆற்ற வருவோர் சடப்பொருள்களோடு தான் பெரும்பாலும் உறவாடுவார்கள். ஆனால், ஆசிரியரோ மனித உயிர்களோடும் உணர்வுகளோடும் உறவு கொள்கிறார். இவ்வுறவு இன்பமானதாயினதும் இலகுவானதல்ல. ஆதலால் அந்த இன்பத்தைத் தேடிக் கொள்வதற்காக தன்னில் உயர்ந்த பண்புகளை வரித்துக் கொள்வார்.

முன்னாயத்தம், பொறுமை, மன்னிப்பு, மனந் தளராமை, பணியை களங்கமின்றிக் கையாளுதல், நடுநிலை தவறாமை, பாரபட்சம் காட்டாமை, கிடைப்பதை வைத்து திறம்படச் செய்தல் போன்ற குணங்களும் செயல்களும் அவரில் குடியிருப்பதைக் காணலாம். உள்ளம் நல்லதானால் உணர்வுகளும் செயல்பாடுகளும் நல்லதாக அமையுமல்லவா?

ஆசிரியர் தனி நபராக இருந்தாலும், அவரது பணி மிக விரிவானது. அவர் அவற்றை தனித்தும் கூட்டாக இணைந்தும் நிறைவேற்றி வருவார். அவர் மூலம் சமூகப் பணியும் சமயப் பணியும் இடம்பெறுகின்றன. தேசியப் பணியும் அறிவுப் பணியும் செயல்படுகின்றன. ஆய்வுப் பணியும் வழிகாட்டல் பணியும் தொடர்கின்றன. அவர் மனித ஆளுமையை நெறிப்படுத்துகின்றார். நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துகிறார். ஆக்க முயற்சிகளில் ஈடுபடுகிறார். கலை விருத்தியில் பங்களிப்புச் செய்கிறார். தலைமைத்துவ பயிற்சியையும், உடல், உள, ஆன்மீக விருத்திக்கான பயிற்சியையும் வழங்குகிறார். சுருக்கமாகச் சொல்வதாயின் அடுத்த சந்ததியை உருவாக்குவதில் மிகுந்த செல்வாக்கைச் செலுத்தி வருகிறார்.

நான் ஓர் ஆசிரியராகவே அனுப்பப்பட்டுள்ளதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். தனது நபித்துவ பணியை ஓர் ஆசிரியருடைய நிலையில் நின்றே நிறைவேற்றினார்கள். அவர்களுக்கு பௌதிக அறிவும் ஆன்மீக அறிவும் கிடைக்கப் பெற்றன. அவற்றை அவர்கள் பொறுப்புணர்வுடனும், கரிசனையுடனும் நிதானமாகவும் பொருத்தமான அணுகுமுறையைக் கையாண்டும் சமூகத்துக்கு முன்வைத்தார்கள். முன்மாதிரி சமூகத்தை உலகுக்கு வழங்கினார்கள்.

இதேபோன்று முன்மாதிரியான சமூகத்தை அமைப்பதற்கு முன்மாதிரியான ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள் என்பதை ஆசிரியர் உணர்ந்திருப்பார். தமது உயர்ந்த பணிக்கான பிரதிபலனை மக்களிடம் எதிர்பார்க்காமல் அல்லாஹ்விடம் எதிர்பார்க்கும் பக்குவத்தைப் பெற்றிருப்பார். தனது பணியை அமானிதமாகக் கருதி செயலாற்றி வருவார்.

எதிர்கால சந்ததியை தோற்றுவிக்க வேண்டுமென்ற நன்நோக்கோடு மாணவர்களை உருவாக்குவார். அவர்களது அறிவை மட்டுமல்ல, திறன்களை வெளிக்கொணர்வார். மனப்பாங்குகளை நெறிப்படுத்துவார். செயல்களை திட்டமிட்டு பயிற்றுவிப்பார். ஒவ்வொரு மாணவனையும் சமூகத்தின் வச்சிரத் தூண்களாகக் கட்டியெழுப்ப முயற்சிப்பார். ஏனைய சமூகங்களுடன் இணங்கி வாழ்வதற்காக பயிற்றுவிப்பார். நாட்டுப்பற்றை உயிர்ப்பிப்பார். சமூகத்தில் உயர்ந்த பண்புகள் நிலைப்பதற்காக தன்னை ஒரு முன்மாதிரியாக அமைத்துக் கொள்வார்.

உலகில் அறிவை நிலைநாட்டும் பணி அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அறிவு, சிந்தனை, ஆய்வு, தேடல், புத்தாக்க முயற்சி போன்றவற்றின் பால் மாணவரை வழிப்படுத்துவார். தனது அறிவை விருத்தி செய்து கொள்ளும் அதேவேளை, மாணவரின் அறிவு விருத்தியிலும் பங்கேற்பார். கேட்டல், பார்த்தல், உற்றுநோக்கல், வரைதல், வாசித்தல், எழுதுதல், கணித்தல், எடுத்துக் காட்டல், நடைமுறைப்படுத்தல் போன்ற பணிகளில் சந்ததியை வளர்த்து விடுவார்.

சிறந்த மனித ஆளுமைகளை உருவாக்கும் பணியையும் அவர் சுமந்திருப்பார். மாணவர்களுடன் ஊடாடி அவர்களில் மறைந்து நிற்கும் ஆற்றல்களைக் கண்டறிந்து அவற்றை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பார். அவர்களை சமூகத்துக்கும் பயன்பட வைக்கும் பணியையும் செய்து வருவார். இந்தப் பணி பெற்றோர்களுக்கும் உண்டாயினும் எல்லாப் பெற்றோர்களுக்கும் அதற்கான ஆர்வம், ஆற்றல் இல்லாமையால் அவரே அவர்களையும் இணைத்துக் கொண்டு பணியாற்றுவார்.

நாட்டுக்கும், மனித சமூகத்துக்கும் நல்ல மனிதர்களை உருவாக்கிக் கொடுப்பார். தான் ஒரு முன்மாதிரியான பிரஜையாக எழுந்து நிற்பார். மாணவர்களுக்கு முன்னோடியாக நடந்து காட்டுவார். எப்படியும் வாழ முடியும் என்பதைத் தகர்த்து, இப்படித்தான் வாழ வேண்டுமென்பதை பருவத்துக்கேற்ப வழிகாட்டுவார்.

மனித வளமாக இருப்பினும், பௌதிக வளமாக இருப்பினும் அவற்றை இனங்கண்டு, உரிய முறையில் அவற்றைப் பயன்படுத்த வழிப்படுத்துவார். பாடசாலையிலும், அதற்கு வெளியிலும் மாணவருலகுடனும்' வெளியுலகுடனும் தொடர்புகளை வைத்துக் கொள்வார்.

இத்தகைய ஆசிரிய, ஆசிரியைகளையே கல்வி உலகம் பாராட்டுகிறது. சமூகமும் நாடும் எதிர்பார்க்கிறது. ஆசிரிய தினம் கொண்டாடப்படும் இச் சந்தர்ப்பத்தில் ஆசிரியர்கள் தமது பணியை மீள்பரிசீலனை செய்துகொள்ள வேண்டும். மாணவர்களும் பெற்றோர்களும், அரசும் நன்றி உணர்வோடு ஆசிரியர்களை அணுக வேண்டும். மாணவர்களின்றேன் ஆசிரியர்கள் இல்லை! நல்லாசிரியர்கள் இன்றேல் நல்ல மாணவர்களோ -சந்ததிகளோ இல்லை. உயர்ந்த சமூகமோ தேசியமோ உருவாக வழியுமில்லை.

# 200 இற்கும் மேற்பட்ட சைக்கிலோட்ட போட்டிகளில் 'பஸ்மில் முஸம்மில்'

• அனஸ் அப்பாஸ்





கஹட்டோவிட்டையைச் சேர்ந்த முஹம்மத் பஸ்மில் 2011 ஆம் ஆண்டு க.பொ.த சா/தர பரீட்சையுடன் தனது கல்வி வாழ்க்கையை முடித்துக் கொண்ட 22 வயதையுடைய ஒரு சாதாரண இளைஞர்.

சிறு வயது முதலே நண்பர்களுடன் தேசிய அளவில் நடைபெறும் சைக்கிள் ஓட்டப் பந்தயங்களை ஆர்வத்துடன் பார்க்கச் செல்வது அவரது வழமை. பாடசாலைக் கல்வியை அடுத்து, வீடுகளுக்கான தரை ஓடு (Floor Tiles) பதிக்கும் தொழிலை அவர் மேற்கொள்ள ஆரம்பித்தார். அதே நேரத்தில் தன்னிடமிருந்த ஸ்டேண்டர் சைக்கிளை வீதிகளில் ஓடும் பயிற்சியையும் ஓய்வு நேரத்தில் மேற்கொண்டார்.

இந்தப் பயிற்சி, அவரை யக்கலையில் இடம்பெற்ற 150 KM நெடுந்தூர சைக்கிள் ஓட்டப் பந்தயத்தில் பங்கேற்கும் ஆர்வத்தை ஏற்படுத்தியது. பங்கெடுத்த முதல் போட்டியிலேயே 18 ஆவது இடத்தை தட்டிக் கொண்டார் பஸ்மில்.

முஹம்மது முஸம்மில்- பாத்திமா பரீதா தம்பதிகளின் புதல்வரான பஸ்மிலுக்கு, ஆரம்பத்தில் வீட்டிலிருந்து இத்துறையில் அவர் பயிற்சி பெறுவதற்கு அதிருப்தியான சமிக்ஞையே இருந்தாலும், தனது அயராத முயற்சிகளின் விளைவுகள் அந்தக் குடும்பப் பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தியது.

இனி அவரது பயணமோ தடைகளை உடைத்து வெற்றிப் பாதையில் தொடர் ஊர்வலம் வர ஆரம்பித்தது. இதுவரை 200 இற்கும் மேற்பட்ட போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் என ஒவ்வொரு படித்தரத்திலும் 10 ஆம் இடம் வரையும் அடைவுகளைப் பெற்று சாதனைகளை குவித்திருக்கின்றார்.

சைக்கிள் ஓட்டப் போட்டிகளில் தனியாக அல்லது குழுக்களாகவும் பங்குபெறலாம் என்ற ஒரு விதி உண்டு. அந்த வகையிலே இலங்கை பொலிஸ் சைக்கிள் ஓட்ட அணி, இலங்கை இராணுவ சைக்கிள் ஓட்ட அணிகளில் இணையும்படி அவரிடம் வேண்டப்பட்டது. இருந்தாலும், அவற்றை விட இலங்கையில் பிரசித்தமான முன்னணி சைக்கிள் ஓட்ட அணி தன்னை வரவேற்கும் காலம் வரும்வரை காத்திருந்தார் பஸ்மில். அவரது எதிர்பார்ப்பு நிதர்சனமானது.

ஆம், இலங்கையின் முன்னணி சைக்கிள் ஓட்ட அணியான SLEME அணி பஸ்மிலை தம்முடன் இணையும்படி அழைப்பு விடுத்தது. தற்போது SLEME அணியில் இணைந்து பயிற்சி பெறுகின்றார். ஆரம்பத்தில் ஸ்டேண்டர் சைக்கிள் ஓட்டத்தில் தான் பலரும் பங்கெடுப்பர். தேசிய அணிகளில் இணைந்த பின்னர் ரேஸிங் சைக்கிள்களில் போட்டிகளில் பங்கெடுப்பர். தற்போது ரேஸிங் சைக்கிளில் போட்டிகளில் பஸ்மில் பங்கெடுக்கின்றார்.

உடல் வலுவைப் பயன்படுத்தி பல்வேறு வகையான ஓடுதடங்களில் விரைவாக ஓட்டிச் செல்லும் போட்டிகள் நான்கு வகைப்படும்.

1. சாலை சைக்கிள் போட்டி (Road Cycling)
2. மலைவழி சைக்கிள் போட்டி (Moutain Cycling)
3. தடகள சைக்கிளோட்டம் (Track Cycling)
4. பி.எம்.எக்ஸ் போட்டி (கடுவெளி சைக்கிள் பந்தய போட்டி (BMX cycling))

இதில் பெரும்பாலான போட்டிகளில் பஸ்மிலுக்கு இப்பொழுது அனுபவம் உண்டு.

அது மட்டுமன்றி, தேசிய அளவில் பிரமாண்டமாக 5 நாட்கள் தொடராக நடை பெறும் இலங்கை ஆகாயப் படை நடாத்தும் 'குவன் சவாரி' மற்றும் ஸ்ரீ லங்கா டெலிகொம் (SLT) நடாத்தும் 5 நாட்கள் நெடுந்தூர சைக்கிள் ஓட்டப் பந்தயத்திலும் இவர் பங்கேற்றுள்ளார்.

இலங்கையின் முதல் தர சைக்கிள் ஓட்ட வீரராக தன்னை உருவாக்குவதே பஸ்மிலின் இலக்கு என்றாலும், உலகத் தரப்படுத்தலில் முதலிடத்திலுள்ள பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த எடி மேர்க்ஸ் (Eddy Merckx) இன் சாதனையை முறியடிக்கும் இலக்கை பஸ்மில் நிகழ்த்த முடியுமாக இருந்தால் இனிவரும் பசுமைப் போட்டியாளர்களுக்கும் (Freshers) உலக அரங்கில் சைக்கிலோட்டத்தில் போட்டி போடும் துணிச்சலை உருவாக்கிய இலங்கையின் முதல் வெற்றியாளர் பஸ்மில் என்ற நாமம் வரலாறு நெடுகிலும் தொடரும்.

## வாழ்த்துக்கள் !





இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு நடாத்தும் Sahasak Nimavum & 2017 தேசிய மட்ட போட்டி தற்போது கொழும்பில் நடைபெறுகின்றது. இதில் மாவனல்லை ஸாஹிரா கல்லூரியில் தரம் 06 இல் கல்வி பயிலும் மாணவன் செல்வன் M.S.M. அம்ஹர் 142 ஆவது இலக்க அறையில் தனது கண்டுபிடிப்பை காட்சிப்படுத்தியுள்ளார்.

கழிவுப் பொருட்களை நறுக்கும் இயந்திரமொன்றைக் கண்டுபிடித்து பலரதும் கவனத்தை ஈர்த்த அம்ஹர், தேசிய ரீதியான போட்டிக்கு தற்போது முன்னேறியுள்ளார். விபரங்கள் கடந்த மீள்பார்வை இதழொன்றில் நாம் வெளியிட்டிருந்தோம்!

இந்தோனேசியா ஜகார்த்தா நகரில் இடம்பெற்ற சர்வதேச இளம் கண்டு பிடிப்பாளர்களுக்கான போட்டியில் கல்முனை சாஹிரா கல்லூரி மாணவன் முஹம்மது சௌபாத் வரலாற்றில் முதல் தடவையாக சர்வதேச ரீதியில் தங்கப் பதக்கம் பெற்று தனது நாட்டுக்கும் பிறந்த மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

கல்முனை சாஹிராக் கல்லூரியைச் சேர்ந்த சௌபாத் ''சூரிய சக்தியில் இயங்கும் கிருமிநாசினி தெளிக்கும் இயந்திரம்'' ஒன்றை கண்டுபிடித்து தேசிய ரீதியில் இடம்பிடித்திருந்தார். அவரது கண்டுபிடிப்பு, அடைவுகள் தொடர்பாக மீள்பார்வை பத்திரிகையில் கடந்த இதழொன்றில் கட்டுரை வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



• முஹம்மத் பகீஹுத்தீன்

# ஆஷூரா தரும் சுப செய்தி "சத்தியம் வெல்லும்"

ஆஷூரா தினம் என்பது முஹர்ரம் மாதம் 10 ஆம் நாளாகும். அன்றைய தினம் நோன்பு நோற்பது முக்கியமான ஒரு சுன்னாவாகும்.


இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்தபோது யூதர்கள் ஆஷூரா தினத்தில் நோன்பு நோற்றிருந்ததைக் கண்டார்கள். நீங்கள் ஏன் நோன்பு நோற்கிறீர்கள்? என அவர்களிடம் கேட்கப்பட்டபோது, இது ஒரு மகத்தான நாளாகும். நபி மூஸாவையும் அவர்களுடைய சமூகத்தையும் அல்லாஹ் பாதுகாத்து பிர்அவ்னையும் அவனது பட்டாளத்தையும் அழித்த நாளாகும். அதற்காக நபி மூஸா (அலை) நோன்பு நோற்றார்கள். எனவே நாங்களும் நோற்கிறோம் எனக் கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள்: அப்படியெனில், மூஸா (அலை) அவர்களுக்கு உங்களை விட நாம் அதிகம் அருகதையுடையவர்கள் எனக் கூறி விட்டு தானும் நோன்பிருந்ததுடன், தனது தோழர்களையும் நோன்பிருக்குமாறு ஏவினார்கள்." (புஹாரி, முஸ்லிம்)

மேலும் அபூ ஹுரைரா (ரழி) அறிவிக்கின்றார்கள்: "நபி (ஸல்) அவர்களிடம் ஆஷூரா நோன்பு பற்றிக் கேட்கப்பட்டது, அது கடந்த வருடத்தில் இடம்பெற்ற (சிறு) பாவங்களுக்கு குற்றப் பரிகாரமாக அமையும் எனக் குறிப்பிட்டார்கள்." (முஸ்லிம்)

**ஆஷூரா நோன்பின் வரலாறு:**

ஆரம்பத்தில் நபி (ஸல்) அவர்கள் மீது மாத்திரம் கடமையானது. ஆஷூரா நோன்பு மக்கா காலப் பிரிவில் நபிகளாருக்கு மாத்திரம் கடமையாக இருந்தது. அத்தினத்தில் நபி (ஸல்) அவர்கள் தனியாக தான் மாத்திரம் நோன்பு வைப்பார்கள். வேறு யாருக்கும் அந்த நோன்பை நோற்குமாறு கட்டளையிடவில்லை. இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நபி (ஸல்) அவர்கள் ஆஷூரா தினத்தை மிகுந்த ஆசையுடன் எதிர்பார்த்து அத்தினத்தில் நோன்பு வைப்பார்கள். நபிகளார் வேறு எந்த நாட்களுக்கும் அவ்வாறான முக்கியத்துவத்தை கொடுத்ததில்லை." (புஹாரி)

ஆனால் குறைஷிகளிடம் இந்த நாளில் நோன்பு பிடிக்கும் பழக்கம் இருந்து வந்ததாக ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் புஹாரி மற்றும் முஸ்லிம் ஆகிய இரண்டு கிரந்தங்களிலும் பதிவாகியுள்ளது.



**இரண்டாம் கட்டமாக மக்கள் மீதும் விதியாகியது.**

இறை தூதர் (ஸல்) அவர்கள் மதீனா நகருக்கு புலம் பெயர்ந்து வந்தபோது. யூதர்கள் ஆஷூரா தினத்தில் நோன்பு நோற்பதை அவதானித்தார்கள். அந்த நாள் நோன்பு வைப்பதற்கு அவர்களை விட நாம் அருகதையுள்ளவர்கள் என்ற வகையில் நோன்பு இருக்குமாறு மக்களுக்குக் கட்டளையிட்டார்கள். அவ்வேளை யார் உணவை உட்கொண்டிருந்தார்களோ அவர்களுக்கு அந்த நாளின் எஞ்சியிருந்த பகுதியில் நோன்பு நோற்குமாறு கட்டளையிட்டார்கள்.

ரபீஃ பின்த் முஅவ்வித் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஆஷூரா நாள் காலைப் பொழுதில் நபி (ஸல்) அவர்கள் மதீனா நகரை சூழவுள்ள குடியிருப்புப் பகுதிகளுக்கு என்னை அனுப்பி, யார் நோன்பு நோற்றார்களோ அவர்கள் தங்களது நோன்பை பூரணமாக நிறைவேற்றும் படியும், யார் நோன்பு வைக்கவில்லையோ அவர்கள் இந்த நாளின் எஞ்சிய பகுதிகளில் நோன்பு பிடிக்கட்டும்" என அறிவிக்குமாறு பணித்தார்கள். அதன் பிறகு நாம் ஆஷூரா தினத்தில் கட்டாயமாக நோன்பு வைப்பவர்களாக இருந்தோம். எமது சிறார்களுக்கும் ஆஷூரா நோன்பை நோற்க வைத்தோம். அவர்கள் பசிக்குது என்று சாப்பாடு கேட்டால் பருத்திப் பஞ்சால் செய்யப்பட்ட விளையாட்டுப் பொருட்களை கொண்டு பராக்குக் காட்டி நோன்பை முழுமையாக நோற்பதற்கு பயிற்சியளித்தோம் என அறிவித்துள்ளார்கள். (ஆதராம் புஹாரி)

**மூன்றாவது கட்டமாக ஆஷூரா நோன்பு சுன்னத்தாக்கப்பட்டது.**

ரமழான் மாத நோன்பு கடமையான போது ஆஷூரா நோன்பு "கடமை" என்ற அந்தஸ்திலிருந்து சுன்னத் என்ற இடத்திற்கு வந்தது. ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ரமழான் மாத நோன்பு கடமையாகுவதற்கு முன்பு நாம் ஆஷூரா நோன்பையே நோற்று வந்தோம். ரமழான் நோன்பு விதியாக்கப்பட்டதும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "யார் ஆஷூரா நோன்பை தன்னார்வத்தோடு நோற்பதற்கு விரும்புகிறாரோ அவர் அதனை நோற்கட்டும். யார் விட்டுவிட விரும்புகிறாறோ அவர் அதனை விட்டுவிடட்டும்." (ஆதராம்: புஹாரி)

ஆஷூரா நோன்பு ஒரே ஒரு வருடம் மாத்திரமே மக்கள் மீது கடமையாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**'தாஸூஆ' நோன்பு**

புனித முஹர்ரம் மாதத்தின் 9 ஆம் நாள் 'தாஸூஆ' என அழைக்கப்படுகிறது. 9 ஆம் நாள் நோன்பு நோற்பதும் சுன்னத்தாக்கப்பட்டிருக்கிறது. நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ அய்யூப் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "அடுத்த வருடம் நான் உயிருடன் இருந்தால் 9 ஆம் நாளும் நோன்பு நோற்பேன்" (முஸ்லிம்). ஆனால் அடுத்த ஆண்டு நபி (ஸல்) அவர்கள் வபாதாகி விட்டார்கள்.

'தாஸூஆ' எனப்படும் 9 ஆம் நாள் நோன்பு நோற்பதற்கு நபி (ஸல்) ஏன் ஆசைவைத்தார்கள் என்பதற்கு பல நியாயங்களை அறிஞர்கள் முன்வைத்துள்ளனர். அதில் மிகவும் ஏற்புடையாக இருப்பது யூதர்களுக்கு மாற்றம் செய்வதற்கு என்பதே.

இப்னு அப்பாஸ் (ரழி) அறிவிக்கின்றார்கள் "ஆஷூரா தினத்தில் நோன்பு வையுங்கள். அதில் யூதர்களுக்கு மாறு செய்யுங்கள். எனவே அதற்கு முன்பு ஒரு நாள் அல்லது அதற்கு பின்பு ஒரு நாள் நோன்பு நோற்குமாறு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதாரம் முஸ்னத் அஹ்மத். இந்த அறிவிப்பு "ஹஸன்" என்ற தரத்தில் உள்ள ஸஹீஹான ஹதீஸ் என ஹதீஸ் துறை வல்லுனரான அஹ்மத் ஷாகிர் (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அல்லாமா அல்பானி (ரஹ்) அவர்கள் இது ஒரு பலவீனமான ஹதீஸ் என்றே தீர்ப்பு வழங்கியுள்ளார்கள்.

**ஆஷூரா நோன்பை நோற்பதற்கான ஒழுங்குகள்**

மேற்கூறிய ஹதீஸ்களிலிருந்து முக்கிய சுன்னத்தாக உள்ள ஆஷூரா நோன்பை நோற்பதற்கான ஷரீஆ சட்டப் பார்வையை இஸ்லாமிய அறிஞர்கள் பின்வருமாறு கூறியுள்ளனர்.

1) தாஸூஆ எனப்படும் 9 ஆம் நாளும் ஆஷூரா என்படும் 10 ஆம் நாளும் நோன்பு பிடிப்பது மிகவும் ஏற்றமானது. பெரும்பாலான இஸ்லாமிய சட்டத் துறை அறிஞர்கள் இந்தக் கருத்தையே வலியுறுத்தியுள்ளார்கள்.

2) ஆஷூரா எனப்படும் 10 ஆம் நாளும் அடுத்து வரக்கூடிய 11 ஆம் நாளும் நோன்பு நோற்பது வரவேற்கத் தக்கது. காரணம் யூதர்களுக்கு மாறு செய்தல் என்ற இலக்கை இது நிறைவேற்றி வைக்கிறது.

3) 10 ஆம் நாளான ஆஷூரா நோன்பை மாத்திரம் நோற்பது. அந்த நாள் மிகவும் மகிமைக்குரியது என்பதை பல ஹதீஸ்கள் மூலம் மேலே அறிந்து கொண்டோம்.

4) 9 ஆம் நாள், 10 ஆம் நாள், 11 ஆம் நாள் ஆகிய மூன்று தினங்களிலும் நோன்பு வைப்பதும் ஒரு வகையில் அங்கரிக்கப்பட்ட வழிமுறையே என இப்னு உஸைமின் (ரஹ்) அவர்கள் தனது பத்வாவில் விரிவாகக் விளக்கிக் கூறியுள்ளார்கள்.

**சத்தியம் வெல்லும்**

ஆஷூரா நோன்பு குறித்து வந்துள்ள ஹதீஸ்கள் முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு சுப செய்தியைச் சொல்லுகிறது. இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்தபோது யூதர்கள் ஆஷூரா தினத்தில் நோன்பு நோற்றிருந்ததைக் கண்டார்கள். நீங்கள் ஏன் நோன்பு நோற்கிறீர்கள்? என அவர்களிடம் கேட்கப்பட்ட போது, இது ஒரு மகத்தான நாளாகும். நபி மூஸாவையும் அவர்களுடைய சமூகத்தையும் அல்லாஹ் பாதுகாத்து பிர்அவ்னையும் அவனது பட்டாளத்தையும் அழித்த நாளாகும். அதற்காக நபி மூஸா (அலை) நோன்பு நோற்றார்கள். எனவே நாங்களும் நோற்கிறோம் எனக் கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், அப்படியெனில் மூஸா (அலை) அவார்களுக்கு உங்களை விட நாம் அதிகம் அருகதையுடையவர்கள் எனக்கூறி விட்டு தானும் நோன்பிருந்ததுடன் தனது தோழர்களையும் நோன்பிருக்குமாறு ஏவினார்கள்." (புஹாரி, முஸ்லிம்)

மேலும் ஒரு ஹதீஸில்: "இது ஒரு மகத்தான நாள், அல்லாஹ் மூஸாவையும் அவரது சமூகத்தையும் இந்நாளில் காப்பாற்றினான். பிர்அவ்னையும் அவனது சமூகத்தையும் மூழ்கடித்தான். அதற்கு நன்றி செலுத்தும் விதமாக மூஸா (அலை) அவர்கள் இன்றைய் தினம் நோன்பு நோற்றார்கள். நாமும் நோன்பு நோற்கிறோம் என்றார்கள்.

இந்த மாதத்தின் சிறப்பு அமலாக இருக்கும் ஆஷூரா நோன்பு பற்றிக் குறிப்பிடும் மேற்கூறிய இரண்டு ஹதீஸ்களும் கூட அமைதி, சாந்தி நிலவும் வாழ்வு நிலைத்து நிற்கும் என்ற சுப செய்தியைத்தான் குறிப்பிடுகிறது.

பிர்அவ்ன் உலகில் தோன்றிய மன்னர்களில் மிகக் கொடிய ஒரு சர்வாதிகாரி. மாபெரும் அநியாயக்காரன். அமைதிக்கு பங்கம் செய்த கல்நெஞ்சம் கொண்ட மன்னன். இரத்த வெறி பிடித்த சண்டாளன். கர்வத்தின் சிகரத்தில் இருந்த பிர்அவ்னின் அழிவை மேற்கூறிய ஹதீஸ் ஞாபகப்படுத்துகிறது. சத்தியம் வெல்லும், அசத்தியம் அழியும். நீதி வெற்றி பெறும், அநீதி மரணித்து விடும். இறுதியில் சாந்தி சமாதானம் எங்கும் என்றும் நிலவும் மார்க்கமாக இஸ்லாம் திகழும் என்ற சுப செய்தியை அது தருகிறது.

இங்கு ஒரு உண்மை புலனாகிறது. இஸ்லாம் ஒரு கொள்கை. அதை பின்பற்றுவதால் கிடைப்பது சாந்தி, அமைதி, நிம்மதியான வாழ்வு. வரலாறு அதற்குச் சான்று. மனித நாகரிகங்கள் இந்த உண்மையை கண்கூடாகக் கண்டன. அன்று போன்று இன்றும் சாந்தி வழிக்கு வேராக இருக்கும் இஸ்லாம் மார்க்கத்திற்கு எதிரிகள் இருக்கவே செய்கின்றனர். அவர்கள் இஸ்லாம் என்றால் அதன் மறுபெயர் பயங்கரவாதம் என்று ஊடகங்கள் மூலம் அச்சத்தையும் பயத்தையும் மக்கள் மத்தியில் திணித்துள்ளனர். அது சுத்தப் பொய் என்று பறை சாற்றிக் கெண்டு முஹர்ரம் மாதம் பிறக்கிறது.

---



• ஷெய்க் அக்ரம் அப்துல் ஸமத்




ஷரீஆக் கலைகளுக்குள் மிகவும் பிற்பட்ட காலத்தில் தோன்றிய கலையாகவே நாம் மகாஸிதை இனம் காண முடிகிறது. ஒரு தனிக்கலையாக மகாஸித் எப்போது உருப்பெற்றது? என்ற கேள்விக்கு விடை தேட முற்பட்ட ஆய்வாளர்களில் பலர் அது, இமாம் ஷாதிபியின் 'முவாபகாத்' எனும் நூலுடனேயே ஆரம்பிக்கிறது என்கின்றனர். இது ஹிஜ்ரி 8 ஆம் நூற்றாண்டில் நிகழ்கிறது.

அடிப்படையில் முவாபகாத் உஸூலுல் பிக்ஹ் சம்பந்தமாக எழுதப்பட்ட நூலாகும். அதில் ஒரு பகுதியாகவே மகாஸித் என்ற தலைப்பு ஆராயப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் தலைப்பு ஆராயப்பட்டிருக்கின்ற வடிவம் அதற்குத் தனியான கலை வடிவம் ஒன்றைத் தருவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[5]

தலைப்பின் உட்கட்டமைப்பு மாத்திரமன்றி அதற்கான தனியான முன்னுரையும் முடிவுரையும் அமைக்கப்பட்டிருப்பதும் அக்கருத்தை மேலும் வலுப்படுத்துவதாகக் காணப்படுகிறது.

ஆனால் கலாநிதி அஹ்மத் ரைஸூனி அவர்கள் இது தொடர்பில் முன்வைக்கும் கருத்து இங்கு நோக்கத்தக்கது. அதாவது, இமாம் ஷாதிபி அவர்களது முவாபகாத்தைப் பொறுத்தவரையில் அதனை மகாஸித் கலையின் முதல் பிரசவம் என்று சொல்ல முடியுமாக இருந்தாலும் அந்தப் பிரசவம் ஒரு தெளிவற்ற பிரசவமாகும். மிகவும் வெளிப்படையானது அல்ல. ஏனெனில், அது உஸூலுல் பிக்ஹின் ஒரு பகுதியாகவே அங்கு தொகுக்கப்பட்டது.

மாற்றமாக அதன் முழுமையான தெளிவான பிரசவம் நவீனகாலத்திலேயே நிகழ்ந்திருக்கிறது. சாதாரணமானதொரு மேலோட்டமான பார்வை மாத்திரமே அந்த உண்மையை உணர்த்தப் போதுமானது. இன்று மகாஸித் பற்றி பல ஆயிரக்கணக்கான ஆய்வுகள் பல்வேறு மொழிகளில் வெளிவருகின்றன. பல்கலைக்கழகங்களில் தனியான பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. அதற்கான தனியான ஆய்வு மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொடராக ஆய்வு மாநாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மகாஸிதின் பல்வேறு புதிய ஆய்வுப் பரிமாணங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவையனைத்தையும் பார்க்கின்ற பொழுது, மகாஸித் ஒரு கலையாகக் கருதப்படுவதற்கான அனைத்துப் பண்புகளுடனும் அது வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

எனவே மகாஸிதுஷ் ஷரீஆ என்றொரு கலை பிறந்து விட்டது என்கிறார்.[6]

(1). கலாநிதி வஸ்பி ஆஷுர் அபூ ஸைத், நேர்காணல் - மகாஸித் பரவலான அறிவாக மாறவே ஆசைப்படுகிறோம், நேர்கண்டவர் - முஸ்தபா ஆஷுர், இஸ்லாம் ஒன்லைன் வலைத்தளம், 20-07-2017.

(2). பௌஸலா நிகழ்ச்சித் தொடர், ஹுதைபா அக்காஷ், அல்மகாஸித், பத்தாவது அமர்வு, கனாதுர் ருஃயா லிஸ்ஸகாபா வல் இஃலாம், 2016.

(3). கலாநிதி வஸ்பி ஆஷுர் அபூ ஸைத், மகாஸிதுல் அஹ்காம் அல்பிக்ஹிய்யா, வெளியீடு - அவ்காப் அமைச்சு, குவைத், பக்கம் 29.

(4). கலாநிதி ஜாஸிர் அவ்தா, முகநூல் பதிவு, 24 ஆகஸ்ட் 2017, 20:10 மணி.

(5). கலாநிதி அஹ்மத் ரைஸூனி, இல்மு மகாஸிதிஷ் ஷரீஆ மினல் விலாதா காமினா இலல் விலாதா காமிலா, இஃமாலுல் மகாஸித் பைன அத்தஹய்யுப் வத்தஸய்யுப், ஆய்வுகளின் தொகுப்பு, வெளியீடு - இஸ்லாமிய முதுசங்களுக்கான அல்புர்கான் நிறுவனம், மகாஸிதுஷ் ஷரீஆ கற்கைகளுக்கான மையம், பக்கம் 907.

(6). மேற்சொல்லப்பட்ட அதே மூலம், பக்கம் 907,908,909.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களப் பாடசாலைகளில் கற்கும் முஸ்லிம் மாணவர்கள்

ஊடக மொழி குறித்த விவாதம் இன்றைய உடனடித் தேவைகள், சட்ட நுணுக்கங்கள் இவற்றுக்கு அப்பால் சமுதாயக் கட்டமைத்தலின் (Social Engineering) உளவியல் நோக்கங்களையும் ஆராய்தல் வேண்டும். சமுதாய மறு உற்பத்தியில் (Social Reproduction) கல்வி அமைப்பின் பங்கு முக்கியமானது. இந்த வகையில் உலகின் அனைத்து விருத்தியடைந்த நாடுகளிலும் வளரும் நாடுகள் பெரும்பாலானவற்றிலும் ஆரம்பக் கல்வி தாய்மொழியில் தான் கற்பிக்கப் படுகின்றன. கல்வி ஊடக மொழி பற்றிய விவாதத்திற்கு அங்கு இடமில்லை. (வாசந்தி தேவி 2004)

தாய்மொழி வழிக் கல்வியே இயற்கையானது என்று நவீன கல்வியியலாளர்களின் ஆய்வு முடிவு. கற்கும் மனத்தின் ஆளுமையை விபரிக்கத் துணை நிற்பது தாய்மொழி வழிக் கல்வியே. கல்வித்துறையினரிடையே உலகளவில் இன்று பெருமளவுக்கு கருத்தொற்றுமை கொண்ட முடிவு இது. ஆராய்ச்சியின் வலுவையும் அறிவியலின் வலுவையும் பெற்ற முடிவு (எஸ்.வி. இராஜதுரை 2003)

தாய்மொழியே சிந்தனையை வளப்படுத்துகின்றது. அதன் வழியே ஒரு பிள்ளை தன்னையும் தனக்கு முன்னால் விரிந்து கிடக்கும் உலகையும் உணர்ந்து கொள்கின்றது. எனவே தாய்மொழியை செவ்வனே பேசவும் எழுதவும் கற்பதோடு அதனூடாக ஏனைய பாடங்களையும் கற்று அறிவின் எல்லையை விசாலிக்கலாம். ஒரு பிள்ளையின் சிந்தனை வளர்ச்சியில் தாய்மொழி ஒரு படைப்புப் பங்காளியாக (Creator) செயற்படுகின்றது. (Jeen Briggs)

கமின்ஸ் என்பவர் உருவாக்கிய புனை கொள்கையின் படி (Threshold Hypothesis) இரு மொழித்திறன் நற்பயனை விளைவிக்க வேண்டுமாயின் மாணவர்களின் தாய்மொழித் தளம் வலுவாக இருத்தல் வேண்டும். தாய்மொழியில் உறுதியான அடித்தளம் உருவாகி மாணவர்கள் அதன் வழி பகுத்துச் சிந்திக்கும் ஆற்றல் பெற்ற பின் இரண்டாவது மொழியைக் கற்றால் முதல் மொழியில் வளர்ந்த ஆற்றல்கள் இரண்டாம் மொழிக் கல்விக்கும் உறுதுணையாக இருக்கும். (கமின்ஸ் - 1956)

முஸ்லிம் சமூகத்தில் இன்று ஊடக மொழி தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளாகவும் விளங்குகின்றன. தமிழர்களும் சிங்களவர்களும் தமது தாய்மொழியையே ஊடக மொழியாகத் தேர்கின்றனர். அதேவேளை முஸ்லிம்கள் தமது தாய்மொழியை மாத்திரம் ஊடக மொழியாக ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்கான சமூக மொழியியல் காரணிகளை ஆராய்வது முக்கியமானது. பொதுவாக இரு மொழிகள் பேசப்படும் (Bilingual) சமூக அமைப்பொன்றில் பெரும்பான்மை மக்கள் பேசும் மொழியை எண்ணிக்கையில் குறைந்தோர் தொடர்பாடலுக்கான மொழியாகத் தேர்ந்தெடுப்பது இயல்பானது. இவ்வகையில் சிங்களப் பிரதேசங்களில் மிகச் சிதறலான குடியிருப்புகளுடன் வாழும் முஸ்லிம்கள் சிங்களத்தையும் ஒரு தொடர்பாடல் மொழியாகக் கொண்டிருப்பது இயல்பானது. (நுஃமான் எம்.ஏ. 1999)



இந்த வகையில் சமூக மொழியியல் காரணிகள் சிங்களத்தை ஊடகமொழியாகத் தெரிவதற்கான பிரதான காரணமாகும். இலங்கை முஸ்லிம்கள் கல்வி மொழி மாற்றம் சில பரிசீலனைகள் (நுஃமான் 1999) என்ற கட்டுரையில் பேராசிரியர் நுஃமான் இக்காரணத்தை முதன்மைப்படுத்துகின்றார். எடுத்துக் காட்டாக கொழும்பு மாவட்ட முஸ்லிம்கள் சிங்கள மக்களுடன் இரண்டறக் கலந்து வாழ்வதைக் குறிப்பிடலாம்.

## ஆய்வு முடிவுகள்

சிங்களப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் மற்றும் கற்று வெளியேறிய மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரிடம் வினாக்கொத்து, உரையாடல், நேர்காணல் மூலம் பெற்ற தரவுகளையும் ஆவணங்களைப் பரீட்சித்தல் மற்றும் அவதானங்கள் மூலம் பெறப்பட்ட தரவுகளையும் பகுப்பாய்வு செய்ததன் அடிப்படையில் கீழ்வரும் முடிவுகள் பெறப்பட்டன.

- கொழும்பு மாவட்டத்தில் குறிப்பாக மத்திய கொழும்பில் பெரும்பான்மையாக வாழ்பவர்கள் முஸ்லிம்கள். அவர்கள் பெரும்பான்மைச் சிங்கள மக்களோடு இரண்டறக் கலந்து வாழ்கின்றனர். அவர்கள் சிங்கள மக்களோடு இடைவினையாற்றுவதற்கு சிங்களத்தையே தேர்கின்றனர். சிறு வயதிலிருந்தே தாம் வாழ்கின்ற பிரதேசங்களில் (மாளிகாவத்தை, தெமடகொட, பொரல்ல, மட்டக்குளிய, மாதம்பிட்டிய, கொலன்னாவ, பஞ்சிகாவத்த, வாழைத் தோட்டம்) சிங்கள மொழிச் சூழல் நிலவுவதனால் கொழும்பு முஸ்லிம்களுக்கு சிங்களமொழி தமிழைப் போன்றே பரீட்சயமானதொன்று. இதனால் பெரும்பான்மையான முஸ்லிம் பெற்றோர்கள் பிள்ளைகளை சிங்களப் பாடசாலைகளில் சேர்க்கின்றனர். இங்கு மொழியியல் காரணிகளை விட சமூகவியல் காரணியே ஊடகமொழியைத் தீர்மானிக்கின்றது.
- தமிழ் மாத்திரம் பேசப்படும் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழைத் தவிர ஊடக மொழிக்கு (ஆநனரைஅ டுயபெரயபந) வேறு தெரிவுகள் கிடையாது. ஆனால் தெற்கில், குறிப்பாக கொழும்பில் முஸ்லிம்களுக்கு தமிழ், சிங்களம் என இரண்டு தெரிவுகள் உள்ளன.
- சமீப காலமாக ஏற்பட்டுவரும் பொதுவான கல்வி வளரச்சிக்கு ஈடு கொடுக்கக் கூடிய தரமான தமிழ்மொழி மூல முஸ்லிம் பாசாலைகல் கொழும்பில் இல்லை எனப் பெற்றோர்கள் கருதுகின்றனர்.
- மேலதிக கல்வியைப் பெறுவதற்கான டியூஷன் வகுப்புக்கள், முன்னோடிப் பரீட்சைத் தாள்கள், சஞ்சிகைகள் தமிழை விட சிங்களத்தில் அதிகம் உள்ளமையும் பெற்றோர் சிங்களத்தைத் தெரிவதற்கான மற்றொரு காரணமாகும்.
- சிங்கள மொழியில் கற்பவர்களுக்கு தொழிற்சந்தையில் அதிக வாய்ப்புக் கிடைக்குமென்று பெற்றோர்கள் நம்புகின்றனர்.
- ஏற்கனவே சிங்களத்தை ஊடக மொழியாகக் கொண்ட பெற்றோர் தமது பிள்ளைகளையும் சிங்களப் பாடசாலைகளிலேயே சேர்க்க விரும்புகின்றனர்.

மேற்போந்தவை சிங்களப் பாடசாலைகளில் முஸ்லிம் மாணவர்கள் இணைவதற்கான பிரதான காரணங்களாகும் என இவ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளது. அதே போன்று கொழும்பு மாவட்டத்தில் முஸ்லிம் மாணவர்கள் சிங்களத்தை ஊடக மொழியாகக் கொள்வதனால் ஏற்படும் சில விளைவுகளையும் இவ்வாய்வு இனங்கண்டது. அவற்றைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

1. ஹிஜாப் (முஸ்லிம் பெண்கள் தலையை மறைக்கும் ஆடை) அணிவதற்கும் வெள்ளிக்கிழமைகளில் ஜும்ஆ செல்வதற்கும் சில பாடசாலைகளில் தடை விதிக்கப்படுகின்றது. பௌத்த பண்டிகைகள், பிரித் ஓதும் நிகழ்வுகளில் முஸ்லிம் மாணவர்கள் அவர்களது பெற்றோர்கள் சகிதம் கலந்துகொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இஸ்லாமிய கலாசாரத்திற்கும் விசுவாசக் கோட்பாட்டிற்கும் முரணான பௌத்த கலாசார நடவடிக்கைகளில் நிர்ப்பந்தமாக ஈடுபடுத்தப்படுகின்றனர். இது இஸ்லாமியக் கலாசாரத் தனித்தன்மைக்கு விடுக்கப்படும் ஓர் அச்சுறுத்தலாகவே பார்க்கப்படுகின்றது.

2. பொதுவாக சிங்களப் பாடசாலைகளில் கற்கும் முஸ்லிம் மாணவர்களின் கல்வி அடைவுகள் போதுமானதாய் இல்லை. சில மாணவர்கள் சிங்களம் என்ற மொழிப் பாடத்திலேயே சித்தியடையவில்லை. ஏனைய பாடங்களில் இதன் தாக்கம் தெளிவாகத் தெரிகின்றது. உதாரணமாக, கொழும்பில் கொம்பனி வீதியிலுள்ள சாரிபுத்த சிங்களப் பாடசாலையில் 'கற்கும் முஸ்லிம் மாணவர்கள் 20 வீதமானோர் சிங்களப் பாடத்திலேயே தேறவில்லை.

| ஆண்டு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | வீதம் |
|---|---|---|---|
| 2010 | 45 | 15 | 6.75 |
| 2011 | 30 | 10 | 3.0 |
| 2012 | 35 | 10 | 3.5 |
| 2013 | 42 | 16 | 6.7 |
| 2014 | 37 | 13 | 4.8 |

சிங்கள மொழிமூல முஸ்லிம் மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தை உயர்த்தவும் கலாசார சீர்குலைவைத் தடுப்பதற்குமான சில பரிந்துரைகள்.

1. கொழும்பு மாவட்டத்திலுள்ள தமிழ்மொழி மூல முஸ்லிம் பாடசாலைகளை வளமூட்டல், விரிவுபடுத்தல், முன்னேற்றல் அதாவது தமிழ் மொழி மூல முஸ்லிம் பாடசாலைகளில் (பௌதிக, கல்வி, நிருவாக முறைமைகளை) முன்னேற்றுவதன் மூலம் சிங்களப் பாடசாலைகளில் முஸ்லிம் மாணவர்கள் இணைவதைக் கட்டுப்படுத்தலாம்.

2. பெற்றோருக்கு சமூக ரீதியான விழிப்புணர்வை ஏற்படுத்தி சிங்கள மொழிமூலக் கல்வியின் விளைவுகள் குறித்து அறிவூட்டல்.

3. சிங்களப் பாடசாலைகளில் நிலவும் இஸ்லாம் பாட ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதன் மூலம் முஸ்லிம் மாணவர்களின் இஸ்லாமிய அறிவையும் பண்பாட்டையும் மேம்படுத்தலாம்.

4. சிங்கள மொழியில் கற்பிக்கும் முஸ்லிம் ஆசிரியர்களை நியமிப்பதன் மூலம் முஸ்லிம் மாணவர்களை நெறியாள்கை செய்ய வகை செய்யலாம்.

5. சிங்கள சமூகத்திற்கு இஸ்லாத்தின் சமய, கலாசார பெறுமானங்களின் தனித் தன்மைகள் குறித்து அறிவூட்டுவதன் மூலம் அநாவசியமான சந்தேகங்களைக் களைந்து பரஸ்பர நல்லிணக்கத்தை உருவாக்கலாம்.

6. சிங்கள மொழி மூலம் இஸ்லாமிய சமய உபன்னியாசங்களை அதிகரித்தல்.

7. சிங்கள மொழிமூலக் கல்வியே இன நல்லுறவுக்குத் தேவை எனும் கருத்துப் போக்குள்ள முஸ்லிம்கள் மத்தியில் மொழிமூலக் கல்வி வேறு மொழிக்கல்வி வேறு என்ற அடிப்படை வேறுபாடு குறித்து வழிப்பூட்டல்.

ஒரு சமூகம் அரசியல் சுதந்திரத்தை இழப்பதை விட கலாசார சுதந்திரத்தை இழப்பதே மிக ஆபத்தானது. மொழி வெறுமனே ஒரு தொடர்பாடல் சாதனம் மட்டுமல்ல. அதற்கப்பால் அது கலாசாரப் பரிவர்த்தனைக்கான கருவியாகவும் செயற்படுகின்றது. எனவே, ஊடக மொழிமூலம் ஏற்படக்கூடிய கலாசாரத் தாக்கங்களை கட்டுப்படுத்தும் பொறிமுறைகள் குறித்து சிந்திக்க வேண்டும். அதற்கான சில பரிந்துரைகளை இந்த ஆய்வு முன்வைத்துள்ளது. இந்த ஆய்வு மென்மேலும் வளர்த்துச் செல்லப்பட வேண்டும்.

# கௌரி லங்கேஷ் பத்திரிகையாளர்களை திடுக்கிட வைக்கும் ஒரு ஜனநாயகப் போராளியின் படுகொலை

கன்னட பத்திரிகை ஆசிரியரும் முற்போக்கு இடதுசாரி எழுத்தாளருமான கௌரி லங்கேஷ் படுகொலை செய்யப்பட்டமை உலகப் பத்திரிகையாளர்களையே திடுக்கிட வைத்துள்ளது. இவரது மரணம் பத்திரிகை உலகிற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். என இந்திய பத்திரிகையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

செப்டம்பர் 05 இல் கௌரி லங்கேஷ் இனந் தெரியாத குழுவொன்றினால் அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். இப்படுகொலைக்குப் பின்னணியில் இருப்பவர்கள் பாரதீய ஜனதா கட்சியின் காவிப் படையான RSS குண்டர்கள் என்று வலுவாக நம்பப்படுகின்றது. BJPயின் ஊழல் மோசடிகள் குறித்தும் இந்தியாவில் RSS காரர்கள் மேற்கொண்டு வரும் நாசகார நடவடிக்கைகள் குறித்தும் தற்துணிவோடும் அபார துணிச்சலோடும் செய்திகளை வெளிக்கொணர்ந்தவர் கௌரி. RSS தேசத் துரோகிகளால் இதற்காகவே அவர் கொலைப்பட்டுள்ளார்.

கர்னாடக மாநிலத்தில் மட்டுமன்றி, தென்னிந்தியாவின் ஏனைய மாநிலங்களிலும் நன்கு அறியப்பட்ட கௌரி லங்கேஷ் Lankesh Patrike எனும் பத்திரிகையை நடத்தி வந்தார்.



கன்னட மொழியில் வெளிவரும் இவ்வாராந்தப் பத்திரிகையைத் தொடங்கியவர் அவரது தந்தையாவார். கர்நாடகத்தில் ராஜேஷ்வரி நகரிலுள்ள அவரது வீட்டுக்கு அருகாமையில் ஒழிந்திருந்த RSS குண்டன் ஒருவன் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிய லங்கேஷ் மீது துப்பாக்கி வேட்டுக் களைத் தீர்த்தான். ஏற்கனவே, அலுவலகத்திலிருந்து வந்து கொண்டிருந்த லங்கேஷை இரண்டு பேர் பின்தொடர்ந்து வந்தனர். அவர்களும் துப்பாக்கிச் சூட்டில் இணைந்து கொண்டனர்.

BJP காரர்கள் வெளியில் தேசபக்த முகத்தை காட்டிய வண்ணம், உள்ளே இந்தியாவையும் அதன் வளங்களையும் சூறையாடுவதற்கும் மோசடி செய்வதற்கும் இந்துத்துவாவை கையாண்டு வருகின்றனர். மதச்சார்பற்ற இந்தியாவில் இந்துத்துவத்தை பிரச்சாரம் செய்வதன் மூலம் தமது ஊழல் மோசடிகளை மறைத்து வருகிறார்கள் என்று கௌரி தனது எழுத்துக்களில் காட்டமாக வலியுறுத்தி வந்தார்.

2008 ஜனவரி 23 இல் மூன்று BJP அரசியல்வாதிகளின் ஊழல்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த கௌரி மீது அவமதிப்புக் குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு பதிவுசெய்யப்பட்டது. சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட அவர், தண்டப் பணம் செலுத்தி அதிலிருந்து விடுதலையானார். இந்தியாவின் இடதுசாரிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள், இக்கொலையை வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இதிலுள்ள வேடிக்கை என்னவெனில், கௌரியின் படுகொலைக்குக் காரணமாகியுள்ள RSS தலைவர்களும் இப்படுகொலையைக் கண்டித்திருப்பதுதான். BJP யின் வேஷம் இதன் மூலம் வெளுக் [illegible] யாளர்கள் விமர்சித்து வருகின்றனர்.




மனிதனின் ஆரோக்கியம் உடல் சார்ந்தது மட்டுமல்ல. உடல், உளம், சமூகம் சார்ந்து அடையக் கூடிய நன்னிலையையே ஆரோக்கியம் என உலக சுகாதார அமையம் வரைவிலக்கணப்படுத்துகின்றது. உடலுக்கும் உள்ளத்திற்கும் இடையிலுள்ள தொடர்புகள் குறித்து இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே பல்வேறு ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. அதன் விளைவாக, உள நரம்பு சார் நோய் எதிர்ப்பியல் (Psycho Neuro Immunology) எனும் தனித்த ஆய்வுப் புலம் தோன்றியுள்ளது.

உடல் ஆரோக்கியம் போன்று உள ஆரோக்கியமும் முக்கியமானது. உள ஆரோக்கியம் கெடும்போது உடல் ஆரோக்கியம் கெடுகின்றது. உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும் தருணங்களில் அது உள ஆரோக்கியத்தையும் பாதிக்கின்றது. மகிழ்ச்சியாக இருப்பதும் உள நோய்களிலிருந்து விலகியிருப்பதுமே மனநலம் என மிக எளிமையாக வரைவிலக்கணப்படுத்தலாம்.

இந்த மனநலத்தோடு ஒருவரது உயிரியல் காரணிகள், சமூகவியல் காரணிகள், உளக் காரணிகள் மற்றும் ஆன்மீகக் காரணிகள் தொடர்புருகின்றன. இன்றைய 748 கோடி உலக சனத்தொகையில் சுமார் 50 கோடிப் பேர் ஏதோ ஒரு உளப் பாதிப்பினால் அல்லது உளக் கோளாறினால் அவதியுறுகின்றனர் என உலக சுகாதார ஸ்தாபனம் அறிக்கையிட்டுள்ளது.

ஒருவர் உளநலத்தோடு வாழ்கின்றார் என்பதற்கான சில குறிகாட்டிகளை உளவியலாளர்கள் முன்வைத்துள்ளனர். அவற்றுள் பின்வருவன முக்கியமானவை.

1. மகிழ்ச்சியாக இருத்தல். (Happiness)
2. சுய அறிவு (Self Awareness)
3. ஒத்துப் பொதல் (Conformity)
4. நியம சிந்தனை (Normal Thinking)
5. பிரச்சினை தீர்க்கும் திறன் (Problem Solving Skill)
6. போதியளவு நினைவாற்றல் (Memory)
7. நேர்ப்பாடான சிந்தனை (Possitive Thinking)
8. கிரகிக்கும் ஆற்றல் (Comprehention)
9. சுயாதீனமாகச் செயற்படல் (Sponteniety)
10. சுய கட்டுப்பாடு (Self Control)
11. மன அழுத்தத்தை சமாளிக்கும் திறன் (Coping with Stress)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## GSP கோரிக்கைகளுக்கு... (01 ஆம் பக்கத் தொடர்)

GSP க்கான கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் உள்ள முன்னேற்றங்கள் இந்தச் சந்திப்பின்போது கருத்தில் கொள்ளப்பட்டன. சட்டத் திருத்தம் கொண்டு வருவதன் ஊடாக மனித உரிமைச் செயற்பாடுகளில் சர்வதேசத் தரம் பேணப்படவுள்ளதாகவும், ஐநாவின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஒழுங்குகளை நடைமுறைப்படுத்துவதாகவும், சீர்திருத்தங்களுக்கென அனைத்துக் கட்சிகளினதும் ஒத்துழைப்பைப் பெறும் வகையில் பாராளுமன்றத்தில் புதிய பொறிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அரசியலமைப்புத் திருத்த வேலைகள் நடைபெற்றுவருவதாகவும், சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் அரசாங்கம் தன்னை அர்ப்பணித்துள்ளதாகவும் அமைச்சர் திலக் மாரப்பன இந்தச் சந்திப்பின் போது ஒப்புதல் அளித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, வர்த்தக வசதிகளை வழங்குவதற்காகவும், இலங்கையில் மீள் இணக்கச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தவும் என ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு மேலதிகமாக 4 கோடி யூரோக்களை வழங்கவுள்ளதாக இந்தச் சந்திப்பின் போது தெரிவிக்கப்பட்டது.

## ஹம்பாந்தோட்டை... (01 ஆம் பக்கத் தொடர்)

தொடர்ந்து நவம்பர் 01 ஆம் திகதி முதல் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. சுயஸ் கால்வாய்க்கும் மலாக்கா நீரிணைக்குமிடையிலான பரபரப்பான கப்பற்பாதையின் மூலோபாய இடத்தில் அமைந்திருக்கும் இந்தத் துறைமுகம், இந்தத் திட்டத்தின் மூலம் களஞ்சியப்படுத்தல், இடைமாறல், கப்பல் திருத்த சேவைகள் போன்றவற்றின் அச்சாணியாக மாறும் என China First Capital நிறுவனத்தின் நிறைவேற்றதிகாரி பீட்டர் பேர்மன் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் மூலமாக நாட்டில் வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கும் எனச் சொல்லப்பட்டாலும், CMPH நிறுவனம் பொறுப்பெடுப்பதானால் தமது வேலைவாய்ப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனக் கோரி 400 தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## அகதிகளாயுள்ள... (01 ஆம் பக்கத் தொடர்)

வீட்டின் மீது குழுவொன்று தாக்குதல் நடத்தியது. தற்போது அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இதற்கு ஒத்துழைத்த அதிகாரிகளுக்கு ஆணையம் நன்றி தெரிவிக்கிறது.

அகதிகள் வன்முறைகளுக்கும் துன்புறுத்தல்களுக்கும் ஆளானவர்கள். இவர்களுக்கு சர்வதேச உதவி தேவைப்படுகிறது என்பதை ஆணையம் வலியுறுத்துகிறது. வன்முறைக்கும் துன்புறுத்தல்களுக்கும் ஆளாகியுள்ள இந்த அகதிகள் மீது அனுதாபம் காட்டுமாறும், அவர்களுக்குத் தொடர்ந்தும் பாதுகாப்பு வழங்குமாறும் ஆணையம் பொதுமக்களைக் கேட் டுக் கொள்கிறது.

அகதிகளும் புகலிடம் தேடுவோரும் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்டவர்களே. உரிய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்த பின்னர், அகதிகளுக்கான நீண்ட கால்த் தீர்வு கிடைக்கும் வரை ஆணையம் அவர்களுக்கு உதவி வழங்கும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரோஹிங்யா... (03 ஆம் பக்கத் தொடர்)

இப்படி அகதிகள் தொடர்பான உடன்பாட்டில் இந்தியா கையொப்பம் இடாமல் இருப்பது மிகவும் கண்டனத்துக்குரியது என்பதை நான் என்னுடைய எழுத்துக்களில் தொடர்ந்து சுட்டிக் காட்டி வருகிறேன்.

எனினும் சில நேரங்களில் இப்படியான உடன்பாடுகளில் கையொப்பம் இடாவிட்டாலும் சர்வதேச வழமைகளைக் கடைபிடிப்பது என்பது எழுதப்படாத ஒரு ஒப்பந்தமாக இன்று நடைமுறையில் உள்ளது. அப்படியான ஒன்றுதான் அகதிகள் குறித்த 'திருப்பி அனுப்பாக் கொள்கை' (Principle of non&refoulement). அதாவது அகதிகளாக வந்தவர்களைத் திருப்பி அனுப்பக் கூடாது.

இந்தியா இதை ஏற்க மறுப்பது குறித்து ஐ.நா. அதிகாரியைக் கேட்ட போது அவர், principle of non–refoulement is considered as part of customary international law and binding on all states when whether they have signed the refugee convention or not எனக் கூறியது குறிப்பிடத்தக்கது.

அதாவது ஐ.நா. அவையின் அகதிகள் உடன்பாட்டில் ஒரு நாடு கையெழுத்து இட்டாலும் இடாவிட்டாலும் திருப்பி அனுப்பாக் கொள்கை என்பது ஒரு சர்வதேசச் சட்ட வழமை என்பது இதன் பொருள். ஆனால் மோடி அரசு இதைக் குறித்தெல்லாம் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. திருப்பி அனுப்புவதில் மாற்றமில்லை எனவும், வங்கதேசத்துடனும் மியன்மாருடனும் இது குறித்துப் பேச இருப்பதாகவும் ரிஜிஜூ கூறுகிறார்.

மியன்மாரைப் பொறுத்தமட்டில் நீண்ட கால இராணுவ ஆட்சிக்குப் பின் ஜனநாயகத்தை நோக்கித் திரும்பிக் கொண்டுள்ள இந்நிலையில் உருவாகும் புதிய அரசு முஸ்லிம்கள் இல்லாத அரசாக இருக்க வேண்டும் என நினைக்கிறது. தனது பதினொரு இலட்சம் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கும் குடியுரிமை அளிக்கப் போவதில்லை என் பதில் அது உறுதியாக உள்ளது. அவர்களை சட்டவிரோதக் குடிகள் என்றே அது சொல்லி வருகிறது. வெளியேறியவர்கள் திரும்பி வந்தால் அவர்கள் குடியுரிமை உள்ளவர்களா எனக் கடும் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுவர் எனவும் அது சொல்லி வருகிறது.

முஸ்லிம் வெறுப்பையே மூலதனமாகக் கொண்டு அரசியல் நடத்தும் பா.ஜ.க. ரோஹிங்யா முஸ்லிம்களை தன் வெறுப்பு அரசியலுக்குப் பலியாக்குவதில் இங்கு உறுதியாக உள்ளது. இது குறித்த செய்திக் கட்டுரை ஒன்றை எழுதியுள்ள ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம், (Reuters, Aug 14, 2017) இன்றைய மோடி அரசை ஒரு ''இந்து தேசியவாத அரசு'' என அடையாளப்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம்களது... (07 ஆம் பக்கத் தொடர்)



அரசியல் தலைமைத்துவமின்மையே இப்பிரச்சினைகள் மேலோங்குவதற்கு காரணமாய் அமைந்துள்ளது. அடுத்த தேர்தலில் வாக்குகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் செயற்படும் அரசியல்வாதிகளைத் தவிர முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்து சப்பந்தப்பட்ட தரப்பின் கவனத்திற்கு கொண்டு செல்லக்கூடிய ஒழுங்கான தலைமைத்துவம் இங்கு இல்லை என்ற கூற வேண்டும்.

இன்றைய சமுதாயம் இக்கட்டானதொரு சூழலில் உள்ளது. ஒருபுறம் அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்படவுள்ளது. அதில் முஸ்லிம்களின் நிலைமை என்னவென்று அறியாமல், அதைப் பற்றி கவலையில்லாத நிலையில் சமூகம் உள்ளது. மறுபுறம் புதிய தேர்தல் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. அது முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்யும் சூழலை உருவாக்கியுள்ளது. இந்த நிலையில் இச்சமுதாயத்தை அரசியல் ரீதியில் விழிப்பூட்ட வேண்டியதொரு தேவை ஏற்பட்டுள்ளது.

## இஸ்லாமிய... (10 ஆம் பக்கத் தொடர்)

உஸ்மானிய சாம்ராஜ்யம் இவற்றைப் பயன்படுத்தி முதலாளித்துவத்தையும் காலனித்துவத்தையும் வெல்லாததே தோல்விக்குக்காரணம். இலங்கையில் இதுபோன்ற பிரச்சினைகளை வெல்வதற்கான தீர்வுகளைச் சொல்லக் கூடிய ஒரு முஜ்தஹிதாவது இருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. தீர்வுகள் சிக்கலாக உள்ள இந்தக் காலப்பிரிவில் இஜ்திஹாதுடைய அறிவை இலங்கை கல்விக் கூடங்கள் கற்பிக்க வேண்டும்.

முஹம்மத் அல்கஸ்ஸாலி இஸ்லாமிய அறிவு தீர்வுகளைத் தரக்கூடியதாக அமைய வேண்டும் என்றார். முஹம்மத் அப்துஹு",



நான் மேற்கே சென்றேன். அங்கு இஸ்லாம் இருந்தது. முஸ்லிம்களைக் காணவில்லை. கிழக்கே சென்றேன். அங்கு முஸ்லிம்களைக் கண்டேன். இஸ்லாத்தைக் காணவில்லை என்றார்கள். மனிதனுக்குத் தெரிவுச் சுதந்திரத்தை அல்லாஹ் வழங்கியுள்ளான். இஸ்மாயில் பாரூகி - அஜ்னபியும் அரபியும் ஒன்றாக இணைக்கப்பட வேண்டும் என்றார். இதனூடாக அறிவை இஸ்லாமியமயப்படுத்த முடியும் என்றார்.

உலகுக்கு வழிகாட்டும் வகையில் இஸ்லாமியக் கல்வி மறுசீரமைக்கப்பட வேண்டும் என்றே இவர்கள் கருதினார்கள். சமகால உலகின் பிரச்சினைகளுக்கு தீர்வு தரும் வகையில் குறிப்பாக தீவிரவாதத்துக்கும் வன்முறைக்கும் தீர்வு தரும் வகையில் இஸ்லாமியக் கல்வியை எப்படிப் பிரயோகிப்பது என்பதனைத் தேட வேண்டிய பணியை அவர்கள் எம்மிடம் விட்டுச் சென்றார்கள். இந்தப் புலமைப் பாரம்பரியத்தின் வெளிச்சத்தினூடே நாங்கள் உலகுக்கு வழிகாட்ட வேண்டும். இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு இஸ்லாம் வழிகாட்டியிருக்கிறது. இதனை இஜ்திஹாதினைப் பயன்படுத்தி இங்கு நடைமுறைப்படுத்திக் காட்ட வேண்டும்.

## அரச கொள்கைக்கு... (01 ஆம் பக்கத் தொடர்)

சர்வதேச சட்டங்களையும் காலில் போட்டு மிதிக்கும் வகையில் அப்பட்டமான அத்துமீறலை நடத்தியவர்கள் தொடர்பில் கண்முன்னே ஆதாரங்கள் கிடைத்த போதும் பொலிஸார் இது வரை இவர்கள் மீது எந்நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இலங்கை அரசாங்கத்தின் சுகாதார அமைச்சர், நிதி அமைச்சர் எனப் பலரும் இது தொடர்பில் தமது கண்டனங்களை வெளிப்படுத்திய போதும் சட்டம், ஒழுங்கு அமைச்சர் இதுவரையில் எந்தக் கருத்துக்களையும் வெளியிடாமல் இருப்பது சந்தேகத்தை வளர்ப்பதாக அமைந்துள்ளது.

அதேபோல ஜனாதிபதியும், பிரதமரும் கூட உள்நாட்டில் சர்வதேச சட்டங்களை மதிக்காமல் செயற்பட்டமைக்காக நாட்டு மக்களிடமோ, சர்வதேசத்திடமோ தமது வருத்தங்களையாவது தெரிவிக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மகளிர் விவகார அமைச்சின் மேலதிகச் செயலாளர், பெண்கள் மீது மியன்மாரில் புரிகின்ற கொடுமைகளை ஆதரித்து தனது பேஸ்புக்கில் கருத்து வெளியிட்டிருப்பதாக கொழும்பு டெலிகிராப் செய்தி வெளியிட்டுள்ளது.

## அரச காணிகள்... (01 ஆம் பக்கத் தொடர்)

அரசுக்குச் சொந்தமான காணிகள், அரசுடைமையாக்கப்பட்ட காடுகள், பாதைக்கென ஒதுக்கப்பட்ட காணிகள் போன்ற தகவல்களை இந்த இணையத் தளத்துக்கு விஜயம் செய்வதனூடாக பெற்றுக் கொள்ள முடியும். முதலீட்டாளர்களுக்கு முதலீடு செய்ய முடியுமான நிலத்தை அடையாளம் கண்டு கொள்ளக் கூடிய வசதியும் இந்த இணையத்தளத்தில் செய்யப்பட்டுள்ளது.

முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்களுக்குத் தேவையான இடத்தை இலகுவில் அடையாளம் கண்டு கொள்ளவும் இந்த வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

www.survey.gov.lk என்ற முகவரியினூடாக இந்த இணையத்தில் பிரவேசிக்க முடியும்.

## பட்ஜட்டுக்கான... (01 ஆம் பக்கத் தொடர்)

ஜனநாயகம், சகவாழ்வு, அபிவிருத்தி என்பவற்றில் அக்கறையுடன் செயற்படுவதற்கென உருவாக்கப்பட்ட கூட்டரசாங்கத்தில், இவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான திட்டங்களையும் அதற்குரிய வரவு செலவுத் திட்டங்களையும் அரசாங்கம் துறைசார்ந் தோர், அக்கறையுள்ளோர், மற்றும் பொது மக்களிடம் இருந்து எதிர்பார்க்கிறது.

தமது பிரேரணைகளை ஒக்டோபர் 15 ஆம் திகதிக்கு முன்னர், நிதியமைச்சின் செயலாளருக்கோ அல்லது info@itmd.treasury.gov.lk என்ற முகவரிக்கோ அனுப்பி வைக்க முடியும்.

## மத உணர்வு... (06 ஆம் பக்கத் தொடர்)

இன மத பேதங்கள் சுதந்திரப் போராட்டத்தின் போதே களைந்திருக்கப்பட வேண்டியவை. நாட்டைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான தேசிய உணர்வு அப்பொழுதே கட்டியெழுப்பப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அதனை தூர திருஷ்டியுடன் சிந்திக்கின்ற அறிவு படைத்த தலைவர்கள் நம்மிடம் இருக்கவில்லை. சுதந்திரத்துக்குப் பின்னரும் இதே நிலைதான் தொடர்கிறது.

இதனால்தான் சுதந்திரமடைந்து 30 வருங்களின் பின் நாடு 30 வருட யுத்தத்தை எதிர்கொண்டு குட்டிச் சுவரானது. இதனால் மக்கள் நலிவடைந்து போனது போல அரசுகளும் சந்தர்ப்பவாதிகளாகவும், ஊழல் பெருச்சாளிகளாகவும் மாறின.

இந்த நிலைமையை புனர்நிர்மாணம் செய்வது தான் மறுமலர்ச்சி இயக்கத்தின் நோக்கம். இந்தப் பணியைச் செய்யாமல் நாட்டை ஓர் அடியேனும் முன்னோக்கி நகர்த்த முடியாது. இன, மத, குல வேறுபாடுகளைக் களைந்து அனைவரையும் சம அந்தஸ்துள்ள மனிதர்களாகப் பார்க்கின்ற நிலையொன்றை உருவாக்க முடிந்தால் மட்டுமே நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய உணர்வைக் கட்டியெழுப்ப முடியும். இந்தப் பணியைச் செய்வதற்கான எந்த இயக்கமும் நாட்டில் இல்லை என்பதனால் தான் மறுமலர்ச்சி இயக்கம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

## மங்களவின்... (05 ஆம் பக்கத் தொடர்)

மனங்களைக் கவ்ர்ந்திழுக்கும் வார்த்தை ஜாலங்கைக் காண்பிப்பதும் சுரத்துக் கெட்டுப் போன சுலோகங்களை அள்ளி வீசுவதும் நமது வரலாகிறிட்டது.

தொலைநோக்கு 2025 உம் சுமாராக பழைய மொந்தையில் புதிய கள்ளைத் தான் நமக்கு நினைவுபடுத்துகின்றது. காகித வளர்ச்சியை வைத்துக் கொண்டு நாம் எத்தனை காலத்திற்கு பெருமைப் படப் போகின்றோம். மக்களின் அன்றாட வாழ்வில் தென்படாத எந்த வளர்ச்சியும் வெறும் காகித வளர்ச்சிதான். இதை அரசியல்வாதிகள் அல்ல மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

## குர்திஷ்தான்... (09 ஆம் பக்கத் தொடர்)

ஈராக்கில் தனிச் சாம்ராஜ்யம் நடத்தும் பர்ஸானியும் தலபானியும் இப்போது சுதந்திர தனிநாட்டுக்கான வாக்கெடுப்பை நடத்துகின்றனர். ஏற்கனவே இப்பிராந்தியத்திற்கு சுயாட்சி அதிகாரத்தை வழங்கிய அமெரிக்காவே கிர்குக்கின் எண்ணெய் வளத்தின் மீது ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. இதன் தலைநகரம் இர்பில். 5.2 மில்லியன் மக்களைக் கொண்டுள்ள பிராந்தியத்தின் பெரும்பான்மையினர் குர்திஷ்கள். குர்திஷ்தானில் விமான நிலையம் மற்றும் துறைமுகங்களை நிர்மாணிப்பதற்கு இஸ்ரேல் பெருமளவு முதலீடு செய்துள்ளது.

இப்பின்னணியிலேயே சமீபத்திய தனிநாட்டுக்கான வாக்கெடுப்பை நோக்க வேண்டும். இது துருக்கி, ஈரான், தற்போதைய ஈராக் அகிய அரசுகளுக்கு விடுக்கப்படும் நேரடியான அச்சுறுத்தல் என்று இந்நாடுகள் கருதுகின்றன.

ஈராக்கின் பிரதமர் ஹைதர் அல் ஆபாதி, குர்திஷ் வாக்கெடுப்பு நாட்டின் அரசியலமைப்பு சட்டத்திற்கு முரணானது என்றும், அதைத் தாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்றும் அறிவித்துள்ளார். பல்வேறு சமூகங்கள் கலந்து வாழும் ஈராக்கில் தொடர்ந்தும் அதன் பன்மைத்துவம் பாதுகாக்கப்பட வேண்டும். இயற்கை மூல வளங்கள் இங்குள்ள அனைத்து சமூகங்களுக்கும் உரியது. எனவே, எண்ணெய் வளம் கொண்ட கிர்குக்கை தனிநாடாக கோரும் இவ் வாக்கெடுப்பை சர்வதேச நாடுகள் நிராகரிக்க வேண்டும் எனவும் ஆபாதி தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் தேச ஒருமைப்பாட்டுக்கு வேட்டு வைக்கும் இந்தப் பிரிவினைவாதத்திற்குப் பின்னால் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இருப்பது தெளிவான உண்மையாகும். ஹலப்ஜா, சுலைமானியா, இர்பில், துஹூக் ஆகிய மாகாணங்களை உள்ளடக்கிய குர்திஷ்தான் பிராந்திய அரசாங்கம் 1992 இல் உருவாக்கப்பட்டாலும், 2003 இற்குப் பின்னரேயே அது தன்னாட்சி அதிகார அலகாக செயல்படத் தொடங்கியது. 40,000 சதுர கி.மீ. பரப்பைக் கொண்ட குர்திஷ் பிராந்தியத்தின் அரச படை பெஷ்மேகா எனப்படுகின்றது. அவர்களின் எண்ணிக்கை சுமார் 2 இலட்சம் ஆகும்.

குர்திஷ் பிராந்திய அரசாங்கத்தின் தலைவர் மஸ்ஊத் பர்ஸானி பொதுசன வாக்கெடுப்பை நியாயம் கண்டுள்ளார். குர்திஷ் மக்கள் ஜனநாயக வழியில் தமது தலைவிதியைத் தீர்மானிப்பது குற்றமா என அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - | ரூபா 40.00 | இந்தியா | | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - | 5500.00 |
| 12 இதழ்கள் | - | ரூபா 600.00 | தனிப் பிரதி | - | ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - | 6500.00 |
| 24 இதழ்கள் | - | ரூபா 1200.00 | ஒரு வருடம் | - | ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - | 4700.00 |
| | | | | | | | | சீனா | - | 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. H[illegible] People's Bank A/C: [illegible]164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோபம் தன்னையே அழித்து விடும்

உண்மையான பலசாலி யாரெனில் தன் வலிமையால் மக்களை அடக்குபவன் அல்ல. மாறாக கோபம் வரும் போது தன்னை அடக்கிக் கொள்பவனே ஆகும். (அறிவிப்பவர் அபூ ஹுரைரா (ரலி) - புகாரி)

''ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு, ஆத்திரம் அழிவைத் தரும்'' என்பதெல்லாம் கோபத்தினால் ஏற்படும் விளைவுகள் குறித்து சொல்லப்படும் வழக்குகள்.

**கோபம் ஏன் ஏற்படுகின்றது?**

கோபம் என்பது உடல் ரீதியாக, மன ரீதியாக, சமூக ரீதியாக, உளவியல் ரீதியாக, உணர்ச்சிபூர்வமான, சுற்றுச் சூழல் சார்ந்த பல விடயங்களுடன் நமக்கு உண்டாகும் எதிர்மறையான சூழ்நிலை காரணமாக உண்டாகிறது.

- நாம் சொல்வதை (நம்மை விட எளியவர்கள் என்று நாம் நினைக்கும்) மற்றவர்கள் மதிக்காத போது
- நம்முடைய பிரச்சனைகளை உரியவர்கள் உடனே நிவர்த்தி செய்யாதபோது
- நாம் சொல்வது (தவறாகவே இருந்தாலும்) தவறு என்று பலர் முன்னிலையில் விமர்சிக்கப்படும் போது
- எதிர்பார்த்த மரியாதை கிடைக்காத போது

இப்படியே பல காரணங்கள் உள்ளன.

ஒருவன் நம்மைப் பார்த்து ''கழுதை'' என்று திட்டும்போது நாம் ''குரங்கு'' என்று பதிலுக்குத் திட்டினால் அந்தச் செயல்தான் reaction ஆகும்.

ஆக உடனே சிந்திக்காமல் ஏற்படும் ஒரு வித அதிருப்தியான வெளிப்பாடு தான் கோபம். அல்லது நம்மை நாமே தாழ்த்திக் கொண்டு சிந்திக்கும் போது ஏற்படும் எதிர் விளைவு கோபமாகும்.

**கோபம் தன்னையே அழித்து விடும்**

மனிதத்துவம் என்பது சமூகத்துடன் ஒன்றி வாழ்வதாகும். ஒருவருக்கொருவர் அனுசரித்து - பாராட்டி - உதவி செய்து வாழ்வதாகும். இதற்கு பொறுமை இன்றியமையாததாகும்.

ஒரு மனிதனின் வெற்றிக்குத் தடையாக இருப்பதில் மிக முக்கியமானது கோபமாகும்.

கோபம் கொள்வதால் நமது சிந்தனை, கவனம் போன்றன சிதறடிக்கப் படுகின்றன. சரியான சமயத்தில் செய்ய வேண்டிய செயல்கள் இதனால் பாதிக்கப்படுகின்றன. நம்மைச் சுற்றி இருப்பவர்களைப் பற்றியும் சூழ்நிலையையும் உணராது நமது செயல்கள் பெரிய பின் விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றன. அவற்றுள்...

- வாழ்வின் சந்தோசத்தை பறித்து விடும். (கோபமும் சந்தோசமும் ஒன்றுக்கொன்று எதிரானவைகள்)
- திருமணம் மற்றுமுள்ள தொடர்புகளை அழித்து விடும்.
- தொழிலை முடக்கி விடும். காரணம் தொழில் என்பது தொடர்புகளுடன் சம்பந்தப்பட்டது.
- மன இருக்கத்தை ஏற்படுத்தி இருதய வியாதிக்கு வழிவகுக்கும்.
- முறையாக சிந்தித்து செயல்படுவதை தடுத்து நமது செயல்களை தவறானதாக்கி விடுகின்றது. கோபம், மாரடைப்பு முதலான இருதய நோய்களை உண்டாக்கி உயிரைப் பறித்து விடும் என்று வல்லுநர்கள் கூறுகின்றார்கள். 55 வயதுக்கு கீழே உள்ளவர்கள் கோபப்பட்டால் அவர்கள் மாரடைப்பு உள்ளிட்ட இருதய வியாதிகளால் உயிரிழப்பதற்கான வாய்ப்பு 3 மடங்கு ஆகும். ஆனால் 55 வயதுக்கு கூடுதலாக இருந்தால் உயிரிழப்பு ஆபத்து 6 மடங்காக உயர்கிறது.
- கோபமானது இதய ரத்த நாளங்களை கடினமாக்கும். அடைப்புகளை திடீரென சிதைப்பதால், அங்கே அடைப்பு வேகமாக உண்டாக வாய்ப்பு ஏற்படும். இது மாரடைப்பில் விட்டு விடும்.
- இதயத் தசைகளில் வலிப்பு, இதயத் துடிப்பில் பாதிப்பு, உயர் ரத்த அழுத்தம், நெஞ்சுவலி போன்ற சிக்கல்களும் கோபத்தினால் ஏற்படும் விளைவுகள்தான்.
- மூளையை தாக்கும் பக்கவாதத்துக்குக் கூட கோபம் காரணமாக அமைவதுண்டு. ஆக, கோபம் உங்களை அழிப்பதற்கு முன் நீங்கள் அதை அழித்து விட வேண்டியது முக்கியம்.

**கோபத்தைக் கட்டுப்படுத்துதல்:**

கோபம் வரும்போது குறிப்பிட்ட மனிதன் தன்னிலை இழக்கிறான். இதனால் தான், கோபத்தில் கொந்தளிப்பவர்களுக்கு வியர்வை, நடுக்கம், மூக்கு விடைத்துக் கொள்தல், தூக்கமின்மை, ஓய்வின்மை, நெஞ்சுவலி, மாரடைப்பு, ரத்த அழுத்தம் திடீரென அதிகரித்தல், எரிச்சல், தசைகள் கெட்டித் தன்மை ஆவது, தலைவலி போன்ற பல பிரச்சினைகள் தோன்றுகின்றன.

**கோபத்தை குறைக்க சில வழிகள்:**

1. கோபத்தின் முக்கிய காரணியான வெறுப்பை கைவிடுங்கள். மற்றவர்களையும் அன்போடு பாருங்கள். நிதானமாக கோபமூட்டிய நபரின் சூழ்நிலையை சிந்தியுங்கள்.

2. கோபத்தை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை தவிர்த்திடுங்கள். உடனே உங்கள் மனதை வேறு விடயத்தில் திருப்புங்கள்.

3. அவசரம் ஒருபோதும் வேண்டாம். பொறுமையாக இருங்கள்


4. நேரம் மேம்பாடு மற்றும் சுய கட்டுப்பாட்டை கடைப்பிடியுங்கள்.

5. செய்யும் வேலையை நேசத்துடனும், நேர்மையுடனும், குழப்பம் இல்லாமலும் செய்யுங்கள்.

மீன்பார்வை

தொகுப்பு: அஸாருதீன்

# பெஞ்சமின் பிராங்கிளின்



பெஞ்சமின் பிராங்கிளின் (Benjamin Franklin (*ஜனவரி 17, 1706 - ஏப்ரல் 17, 1790*) என்பவர் ஐக்கிய அமெரிக்காவை உருவாக்கியவர்களுள் ஒரு மூத்த தலைவர் ஆவார். இவர் ஓர் அரசியல் தலைவர் மட்டுமல்ல, ஒரு எழுத்தாளர், அறிவியலாளர், கண்டுபிடிப்பாளர் ஆவார். மின்னியலில் இவரின் கண்டுபிடிப்புகளுக்கும், கருத்துக்களுக்குமாக இவர் இயற்பியல் சரித்திரத்தில் ஒரு முக்கிமான அறிவியலாளராகக் கருதப்படுகிறார். அமெரிக்க ஆங்கில எழுத்திலக்கணத்திலும் சீர்திருத்த முறைமை அவசியத்தை வலியுறுத்தியவர். வணிகம், அறிவியல், இலக்கியம், அரசியல் ஆகிய நான்கு துறைகளில் பெரும் வெற்றி பெற்றவர். இளம் வயதில் கையில் ஒரு காசுகூட இல்லாமல் ஏழ்மையில் இருந்தும் அச்சுத்தொழிலின் மூலமும், பத்திரிக்கையின் மூலமும் நாற்பது வயதுக்குள் செல்வந்தரானவர்.

'Poor Richard's Almanack' என்ற புகழ்பெற்ற இதழை உலகுக்குத் தந்தவர். உலகின் மிகப் பிரபலமான தன் வரலாற்று நூல்களுள் ஒன்று அவருடையது. மின்சாரம் பற்றியும் இடி மின்னல் பற்றியும் புகழ்பெற்ற ஆராய்ச்சிகளை செய்து இடி தாங்கியையும், வெள்ளெழுத்தக் கண்ணாடியையும் (Bifocal Glasses) மற்ற பல கருவிகளையும் கண்டுபிடித்தவர். அரசியலில் சட்ட மன்ற உறுப்பினராக, அரச தந்திரியாக, பிரான்சுக்கான தூதராக விளங்கியவர். அமெரிக்க சுதந்திர பிரகடனத்தைத் தயார் செய்து கையெழுத்திட்ட மூவரில் ஒருவர்.

# பேசியதும் பேச மறந்ததும்

• அமல்ராஜ் பிரான்ஸிஸ்

## யாரும் மற்றொருவர்போல் இல்லை.




இரண்டு நாட்களுக்கு முன்னர் என்னுடைய கையில் கிடைத்த இந்த ''யா.ம.போ.இ'' என்கின்ற நூலைத் தட்டிக் கொண்டு போனபோது எனக்கு சில திடீர் ஆச்சரியங்கள் பிடிபட்டன. எதிர்பார்ப்பு சேமித்து வைத்திருந்த குதூகலத்தை இந்த ஆச்சரியம் நொடியில் இரட்டிப்பாக்கிப் போட்டது. அது நான் ஏலவே ஆங்கிலத்தில் படித்த மூன்று கவிஞர்களை இந்நூலில் அஷ்ரஃப் சிஹாப்தீன் தெரிவு செய்திருக்கிறார். அதுவும் நான் படித்த அதே கவிதைகள். பலஸ்தீனத்தைச் சேர்ந்த Nasser Barghouty, ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த Reza Mohammadi மற்றும் துருக்கியைச் சேர்ந்த Nasim Hikmat.

இவற்றில் Nasser உடைய 'To the children of Palastine' என்கின்ற கவிதை அட்டகாசமானது. Nassim உடைய கவிதை நுட்பங்களை படித்து முடிக்க வேண்டும். Reza என் இதயத்திற்கு மிகவும் பிரியமானவர். Reza பற்றிய ஓர் சுவாரஷ்யமான அனுபவத்தை என்னால் மறக்க முடியாது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நான் ஆப்கானிஸ்தானில் பணியாற்றியபோது அந்நாட்டின் தென் நகரமான கந்தகாரிற்கு அடிக்கடி போய் வருவது வழக்கம். முதல் முறை அங்கிருந்த எங்களுடைய அலுவலகத்திற்குச் சென்று என்னோடு பணியாற்றும் ஒரு நண்பனுடைய அறைக்குள் போனபோது வலப்பக்க மூலையில் தனியனாய் நின்றுகொண்டிருந்த ஒரு புத்தக அலுமாரியைக் கண்டேன். போகும் நாடுகளிலெல்லாம் அந்நாட்டு இலக்கியங்களைச் சேகரித்து, படித்துப் பார்க்க வேண்டும் என்பது என்னுடைய இலட்சியம். இலட்சியத்தில் அந்தச் 'சேகரிப்பு' நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் 'படிப்பு'தான் இன்னும் கைகூடவில்லை.

அப்படி நண்பனுடைய அந்தப் புத்தக அலுமாரியைக் கிண்டியதில் கிடைத்த அத்தனை புத்தகங்களிலும் அந்நிய பாஷைகள். பஷ்ருன், டாரி, பேர்ஷியன் மொழிகளில் ஏராளமான புத்தகங்கள். இடைக்குள் மொத்தமாயிருந்த ஒரு புத்தகத்தை 'அல்லாஹ்வை' மனதில் நிறுத்திக் கொண்டு இழுத்து வெளியில் போட்டபோதுதான் தெரிந்தது. அது ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கும் Reza Mohammadi இன் ஓர் கவிதைப் புத்தகம்.

'அல்ஹம்துலில்லா!'. எடுத்து அறைக்குக் கொண்டுபோய் நான்கு நாட்களில் அதைக் காலி பண்ணி முடித்தேன். பிரமாதமான கவிதைகள். ரூமியை நோக்கித் தாவிக் கொண்டிருக்கும் எழுத்து.

ஆனால் அதை என் கூடவே இலங்கைக்குக் கொண்டு வரவேண்டும் என்கின்ற ஆசை இறுதிவரை நிறைவேறவேயில்லை. காரணம் அது ஆப்கான் அரசால் தடைசெய்யப்பட்ட புத்தகம். காரணம் Reza தலிபான் அமைப்பைச் சேர்ந்தவர். அவர் 2014 இல் லண்டனில் வெளியிட்ட "Taliban's Poetry" என்கின்ற நூல் மிகப் பெரிய சர்ச்சையைக் கிளப்பி ஓய்ந்தது.

அவருடைய புகழ்பெற்ற 'Friendship' மற்றும் 'Illegal Immigration', 'You crossed the border' ஆகிய கவிதைகள் உலகத் தரமிக்கவை. தரமான கவிதைகளின் உச்சகட்ட உதாரணங்கள் இவருடைய கவிதைகள் எனச் சொல்ல முடியும். அவற்றில் "You crossed the border" என்கின்ற கவிதையை அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்கள் அதே உணர்வியலோடும், emotional aliveness ஓடும் இந்த நூலில் மொழிபெயர்த்திருப்பது பேரானந்தத்தைக் கொடுக்கிறது.

இப்படி மேற்சொன்ன மூன்று கவிஞர்களினுடைய கவிதைகளின் ஆங்கில மூலப் பிரதிகளைப் படித்தவன் என்கின்ற முறையில் இப்பொழுது அவற்றை அஷ்ரஃப் சிஹாப்தீனுடைய தமிழில் படிக்கும்போது தேகம் சிலிர்க்கிறது. அவற்றை [illegible] அடிப்படை நுட்பங்களோடு மொழி பெயர்த்திருக்கும் அஷ்ரஃப் சிஹாப்தீனை மெச்சாமல் கடந்துபோக முடியாது. அஷ்ரப் சிஹாப்தீன் போன்றவர்களின் இருத்தல் இத்தலைமுறையின் நல்லூழ் என்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

இன்றைய ஈழத்துத் தமிழ் இலக்கியச் சூழலில் கவிதை பற்றிய எவ்வித கோட்பாடோ அல்லது நுட்பமோ அல்லது விழுமியமோ அதை எழுதும் எவரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. புதுக் கவிதை, நவீனத்துவம், பின்நவீனத்துவம் என இலக்கியச் சூழலில் கலவரங்கள் நடந்துவிட்ட பிறகு இந்த கவிதைகள் தங்களுடைய அத்தனை அடிப்படைக் கட்டுப்பாடுகளையும் தொலைத்துவிட்டன. அதன் தார்ப்பரியத்தை இப்பொழுது வாசகன்தான் தினம் தினம் அனுபவித்துக் கொண்டிருக்கிறான்.

என்னைப் பொறுத்தவரையில் நல்ல கவிதை என்பது எளிமை, சேரடித்தன்மை, உணர்ச்சி மிகு சொல்லாடல் போன்ற அடிப்படிடைத் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும். அத்தோடு நுட்ப பாவங்களும், தூண்டல் கொடுக்க வேண்டிய நுட்ப பொறுப்புக்களும் அதனுடன் சேர்ந்திருக்க வேண்டும். உதாரணமாக, நான் அண்மையில் படித்து, கலைந்து போகாமல் மண்டைக்குள்ளேயே நின்றுவிட்ட நிலா இரசிகனின் கவிதை ஒன்றைச் சொல்கிறேன் பாருங்கள்.

''இரண்டு கால்களுடைய மிருகம்
எப்போதும் என்னுடன்
பயணித்தபடியே இருக்கிறது.''

இங்கு கவிதையின் நுட்பம் என்னவென்று தெரிகிறதா? ஒரு உயிர் கவிஞனாகிறபோது அவனுடைய உடல் 'முன்னிலை' ஆகிவிடுகிறது. அதாவது நிலா இரசிகன் [illegible] வெறும் ஓர் second person! தான். இப்படி எளிமையையும் நுட்பத்தையும் அழகாக பேசும் மூலக் கவிதைகளின் சுவர்கள் அஷ்ரஃப் சிஹாப்தீனுடைய மொழிபெயர்ப்பில் புள்ளியளவு கூட சிதைந்துவிடாமல் இருக்கின்றன. இது உண்மையில் மிகப் பெரியதொரு கைதட்டலை வேண்டி நிற்கும் ஓர் விடயம்.

இந்த நூலை முழு மையாகப் படித்து முடித்தபோது இன்னுமொரு வெளிச்சமும் கண்களில் பட்டது. அதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என்பதற்காக சில கவிதைகளை மீண்டும் மீண்டும் படித்துப் பார்த்தேன். உண்மை தான், இந்தப் புத்தகத்திற்குள் ஏராளமான குறியீட்டு படிமம் போர்த்திய சூஃபிக் கவிதைகள் கிடக்கின்றன.

சூஃபிக் கவிதைகளைச் சென்றடையாத எந்த வாசகனாலும் திருப்தி என்கின்ற ஓர் முடிவிடத்தைப் போய் சேர முடியாது. அது எழுதப்படாத நியதி என்றே சொல்வேன். மேத்தா, அப்துல் ரகுமான், ஞானக்கூத்தன், மானுஷ்ய புத்ரன் என்கின்ற பட்டியலிலிருந்து ரூமி, பப்லோ நெருடா, கலீல் ஜிப்ரான் என்கின்ற பட்டியலினுள் பாயும் எந்தவொரு வாசகனுக்கும் இந்த அதிசய சூஃபி அனுபவம் நிகழும். இப்படித்தான் எனக்கும் அந்த உன்னத தேடல் சாத்தியமானது. உதாரணமாக என்னைக் கட்டிப்போட்ட இரண்டு சூஃபிக் கவிதைகளை சொல்லிவிட்டு இப்புத்தகத்தில் நான் பார்த்த சில கவிதைகளைச் சொல்கிறேன்.

காற்றுக்குக் காதல்
கொடி தாங்கும் கம்பத்தின் மீதே
கொடி மீதல்ல
காதலின் சாரம் அதுவே.

ரூமியின் இந்தப் பாய்ச்சலைத் தொடர்ந்து அவருடைய சீடன் கலீல் ஜிப்ரான் ஒரு பாய்ச்சல் பாய்வான் பாருங்கள்.

காதால் காணவும்
கண்ணால் கேட்கவும்
கற்றுத்தந்தது
காதல்.

இப்பொழுது, அஷ்ரஃப் சிஹாப்தீன் மொழிபெயர்த்திருக்கும் ''உணவு'' என்கின்ற யெமன் நாட்டுக் கவிஞர் மொஹமட் அல் கஊத் இன் கவிதையைப் பாருங்கள்.

அவன்
உணவத்துக்குள் நுழைந்தான்.

பரிசாகரிடம் சொன்னான்
ஒரு தட்டில் அமைதியும்
ஒரு தட்டில் தனிமையும்
ஒரு தட்டில் அலட்சியமும்
கொண்டு வா.

அத்துடன்
ஒரு கத்தியும் வேண்டும்
இந்த நாட்களின்
துயரை அறுக்க!.

நிச்சயம் இது ரூமியிடமிருந்து பிடுங்கிய வித்தையென்றே தோன்றுகிறது.

இந்த குறியீட்டு கவிதைகளை எந்த வாசகனாலும் அவ்வளவு இலகுவாக கடந்து போய்விட முடியாது. கவிதைகளின் ஜீவன் சிலவேளைகளில் இந்த குறியீடு என்னும் நுட்பத்தில்தான் இருக்கிறது. அதைச் சரியாக நகர்த்துவதில் இருக்கிறது ஒரு நல்ல கவிஞனின் கைங்கரியம் அல்லது புத்திசாலித்தனம். இதைப்பற்றி எஸ்.ரா ஒருமுறை சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது.

''ஒரு பழத்துக்கு எத்தனை விதைகள் இருக்கிறது என்பதைத் தேடிக் கண்டடைபவன் அறிவாளி. ஆனால் அந்த விதைக்குள் எத்தனை விருட்சங்கள், பழங்கள் இருக்கின்றன எனத் தேடிப் போகிறவன் கவிஞன்.''

இந்த ''யா.ம.போ.இ'' என்கின்ற நூலில் இருக்கும் அத்தனை கவிதைகளும் இந்த எஸ்.ரா வின் இரண்டாவது தேடலையே காண்பிப்பதாய் அமைகின்றன. அதை அச்சுப் பிசகாமல் கையாண்டு முடித்திருக்கிறார் அஷ்ரஃப்.

இந்த நூலில் எனக்குப் பிடித்த கவிதைகள் என்று பல இருக்கின்றன. பிடிக்காதவை என்றும் சில இருக்கின்றன. ஆனால் பிடித்த கவிதைகளை எழுதிய அந்தக் கவிஞர்களின் ஏனைய கவிதைகளையும் தேடிப் போக வேண்டும் என்கின்ற ஆசையை அஷ்ரஃப் சிஹாப்தீனின் எளிமையான, நுட்பமான மொழிபெயர்ப்பு திருகிவிட்டிருக்கிறது. இதுதான் ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளன் வாசகனுக்குள் நிகழ்த்தக் கூடிய மிகப் பெரியதொரு sustainable impact என நினைக்கிறேன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீள்பார்வை
# விளையாட்டு

## 43 ஆவது தேசிய விளையாட்டு விழா முடிவுகள்




வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் 9 மாகாணங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தி சுமார் 1000 இற்கும் அதிகமான மெய்வல்லுனர் வீர வீராங்கனைகளின் பங்குபற்றலுடன் இம்முறை நடை பெற்ற தேசிய விளையாட்டு விழாவில் வருடத்தின் சிறந்த மெய்வல்லுனர் வீரருக்கான விருதை மத்திய மாகாணத் தைச் சேர்ந்த நீளம் பாய்தல் வீரர் (7.83 மீற்றர்) ஜனக பிரசாத் விமலசிறி பெற்றுக் கொண்டதுடன், வருடத்தின் சிறந்த மெய்வல்லுனர் வீராங்கனைக்கான விருதை மேல் மாகாணத்தைச் சேர்ந்த முப்பாய்ச்சல் வீராங்கனை (13.32 மீற்றர்) விதூஷா லக்ஷானி பெற்றுக்கொண்டார்.

இந்நிலையில், 3 தினங்களாக நடை பெற்ற மெய்வல்லுனர் போட்டிகளில் வருடத்தின் மிகச் சிறந்த அணிகளில் ஆண்களுக்கான சம்பியன் பட்டத்தை மேல் மாகாணமும், பெண்களுக்கான சம்பியன் பட்டத்தை தென் மாகாணமும் பெற்றுக் கொண்டது. இதேவேளை, இம்முறை தேசிய விளையாட்டு விழா வில் 2 தேசிய சாதனைகளும், ஒரு போட்டி சாதனையும் நிகழ்த்தப்பட் டமை குறிப்பிடத்தக்கது.

### கிழக்கு மாகாணத்துக்கு 5ஆவது இடம்

43 ஆவது தேசிய விளையாட்டு விழா வின் மெய்வல்லுனர் போட்டிகளில் கிழக்கு மாகாண அணி 2 தங்கம், 2 வெள்ளி மற்றும் 3 வெண்கலப் பதக்கங் களை வென்றமை குறிப்பிடத்தக்கது. அதிலும் குறிப்பாக கிழக்கு மாகாணத் தைப் பிரதிநிதித்துவப்படுத்தி அண்மைக் காலமாக தேசிய மற்றும் சர்வதேச ரீதி யில் பல வெற்றிகளை ஈட்டிவருகின்ற பொத்துவில்லைச் சேர்ந்த அஷ்ரப், நிந்தவூரைச் சேர்ந்த ஆஷிக், ஒலுவிலைச் சேர்ந்த ரஜாஸ்கான், திருகோணமலை யைச் சேர்ந்த வொஷிம் இல்ஹாம் மற்றும் மொஹமட் பாஸில் உடையார் ஆகியோர் தாம் பங்குபற்றிய தனிப்பட்ட போட்டிகளில் வெற்றியைப் பதிவு செய்திருந்த அதேநேரம், ஆண்களுக்கான 4x100 அஞ்சலோட்டப் போட்டியில் கிழக்கு மாகாண அணிக்காக வரலாற்றில் முதற் தடவையாக தங்கப் பதக்கத்தை யும் பெற்றுக் கொடுத்தனர்.

எனினும் கடந்த வருடம் நடை பெற்ற தேசிய விளையாட்டு விழாவில் வருடத்தின் சிறந்த மெய்வல்லுனராகத் தெரிவான அட்டாளைச்சேனையைச் சேர்ந்த மொஹமட் மிப்ரான், இம்முறை போட்டித் தொடரில் தோல்வியை சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, குழுநிலைப் போட்டி களில் கிழக்கு மாகாண அணி 3 சம்பி யன் விருதுகளைப் பெற்றுக் கொண்டது. இதில் கூடைப்பந்து ஆண்கள் அணி, கிரிக்கெட் ஆண்கள் அணி மற்றும் கபடி ஆண்கள் அணி ஆகியன சம்பியன்களாக தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### வடக்கிற்கு ஒரேயொரு தங்கம்

வட மாகாண அணிக்கு இம்முறை போட்டித் தொடரில் ஒரேயொரு தங்கப் பதக்கத்தை மாத்திரமே வெற்றிகொள்ள முடிந்தது. தேசிய சாதனையுடன் முதல் தங்கப்பதக்கத்தை கோலூன்றிப் பாய்தலில் கலந்துகொண்ட அனித்தா ஜகதீஸ்வரன் பெற்றுக்கொடுத்தார்.

### மேல்மாகாணம் சம்பியன்

இதில் 102 தங்கம், 82 வெள்ளி மற்றும் 76 வெண்கலப் பதக்கங்களை வென்று மேல் மாகாணம் முதலிடத் தைப் பெற்று 43 ஆவது தேசிய விளை யாட்டு விழாவில் சம்பியன் பட்டத்தை சுவீகரித்துக் கொண்டது. 46 தங்கம், 41 வெள்ளி, 45 வெண்கலப் பதக்கங்களை வென்ற மத்திய மாகாணம் 2 ஆவது இடத்தையும், 27 தங்கம், 28 வெள்ளி மற்றும் 52 வெண்கலப் பதக்கங்களை வென்ற வட மத்திய மாகாணம் 3 ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டது.

இந்நிலையில், 6 தங்கம், 8 வெள்ளி மற்றும் 10 வெண்கலப் பதக்கங்களை வென்ற கிழக்கு மாகாணம் 8ஆவது இடத்தையும், 5 தங்கம், 2 வெள்ளி மற்றும் 12 வெண்கலப் பதக்கங்களை வென்ற வட மாகாணம் 9 ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டது.

### 44 ஆவது தேசிய விளையாட்டு விழா இரத்தினபுரியில்

நிறைவுக்கு வந்த தேசிய விளை யாட்டு விழாவின் போது 2018 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 44 ஆவது தேசிய விளையாட்டு விழா சப்ரகமுவ மாகாணம், இரத்தினபுரியில் நடத்துவ தாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப் பட்டது.




## 101 வயது தளகள வீராங்கனைக்கு வீசா மறுப்பு

சீனாவில் ஆரம்பமாகவிருக்கும் ஆசிய மாஸ்டர்ஸ் தொடரில் கலந்து கொள்வதற்காக இந்தியாவைச் சேர்ந்த 101 வயது வீராங்கனை மேன் கவுர் வீசா வுக்கு விண்ணப்பித்திருந்த நிலையில், குறித்த விண்ணப்பம் நிராகரிக்கப் பட்டுள்ளது.

இவ்வருடம் நியூசிலாந்தின் ஆக்லாந்தில் நடைபெற்ற சர்வதேச 35 வயதிற்கு அதிகமானவர்கள் பங்கேற்கும் மாஸ்டர்ஸ் விளையாட்டு தொடரில், இந்தியா வைச் சேர்ந்த 101 வயது மூதாட்டி மேன் கவுர் பங்கேற்றார். 100 மீட்டர் ஓட்டப் பந்தையத்தில் கலந்துகொண்ட இவர் தங்கப் பதக்கம் வென்று அசத்தினார்.

இந்நிலையில், சீனாவில் நடைபெற இருக்கும் ஆசிய மாஸ்டர்ஸ் தொடரில் பங்கேற்க மேன் கவுர் விசா பெற விண்ணப்பித்தார். இருந்தும் அவருக்கு விசா அளிக்க சீனா மறுத்துள்ளது. இதற்காக தொடர்ந்து பயிற்சி எடுத்து வந்த குறித்த மூதாட்டி விசா மறுப்பினால் மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளார்.

எனினும் சோர்ந்து விடவில்லையெனத் தெரிவித்த குறித்த மூதாட்டி, அடுத்த போட்டிகளுக்குத் தயாராகிறேன் என உற்சாகத்துடன் தெரிவித்தார்.

## மலியதேவ கல்லூரியை வீழ்த்திய புத்தளம் ஸாஹிரா



இவ்வருடத்திற்கான பிரிவு II (டிவிசன் - II) பாடசாலைகள் உதைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரில் குருநாகல் மலியதேவ கல்லூரிக்கு எதிரான போட்டியில் புத்தளம் ஸாஹிரா கல்லூரி இலகு வெற்றியைப் பதிவுசெய்தது.

முஸாக்கிர் பெற்ற தொடரான நான்கு கோல்கள் மூலம் புத்தளம் ஸாஹிரா கல்லூரி 4 - 0 என்ற விகிதத்தில் மலியதேவ கல்லூரிக்கு எதிரான போட்டியில் வெற்றிபெற்றுள்ளது.

இப்போட்டி புத்தளம் ஸாஹிரா கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றதுடன் இப்போட்டியானது முழுமையாக 70 நிமிடங்களைக் கொண்டதாக அமைந்தது. போட்டியின் சிறப்பாட்டக்காரராக 4 கோல்களை அடித்த முஸப்பிர் தெரிவுசெய்யப்பட்டார்.




## அகில இலங்கை பாடசாலைகள் விளையாட்டு விழா:

இந்நாட்டின் விளையாட்டு துறைக்கு எதிர்கால நட்சத்திர வீரர்களை உருவாக் கும் நோக்கில் கல்வி அமைச்சின் பூரண மேற்பார்வையின் கீழ் வருடாந்தம் இடம்பெற்று வரும் பாடசாலைகளின் ஒலிம்பிக் விழா என்றழைக்கப்படுகின்ற "அகில இலங்கை பாடசாலைகள் விளை யாட்டு விழா" நிகழ்வுகள் இம்முறை கொழும்பை மையப்படுத்தி எதிர்வரும் ஒக்டோபர் 2 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

கிராமப் புறங்களில் கல்வி கற்கின்ற பாடசாலை மாணவர்களின் விளையாட் டுத் திறமைகளை தேசிய மட்டத்தில் மிளிரச் செய்யும் நோக்கில் 1984 ஆம் ஆண்டு அப்போதைய கல்வி அமைச்ச ராக இருந்த பிரதமர் ரணில் விக்ரம சிங்கவினால் அறிமுகம் செய்யப்பட்ட இப்பாடசாலைகள் விளையாட்டு விழா, இம்முறை 33 ஆவது தடவையாக நடை பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை விளையாட்டு விழா வர லாற்றில் முதற் தடவையாக வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் சுமார் 39,700 பாட சாலை மாணவர்கள் மற்றும் 2,700 நடு வர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இம்முறை விளையாட்டு விழாவில், குழு நிலை மற்றும் மெய்வல்லுனர் போட்டிகள் உள்ளிட்ட 28 வகையான விளையாட்டுக்கள் இடம்பெறவுள்ளன. அதேபோன்று, முதற் தடவையாக கடற் கரை கரப்பந்தாட்டம், எழுவர் ரக்பி போட்டிகளும் இணைத்துக்கொள்ளப்பட் டுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

## 'விசாரணைகளுக்கு ஆதரவு'



சர்வதேச கிரிக்கெட் பேரவையின், மோசடிக்கு எதிரான பிரிவினர் இலங் கையில் முன்னெடுத்துவரும் விசார ணைகளுக்கு, தடையின்றிய ஆதரவை வழங்கி வருவதாக இலங்கை கிரிக் கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் தொடர்பில், ஐ.சி.சி.இன் மோசடிக்கு எதிரான பிரிவி னரின் விசாரணைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

விசாரணைக் குழுவினர் தங்குதடையின்றி தமது நடவடிக் கைகளை முன் னெடுத்து வருகின்றனர். அவர்களுக்கு உரிய ஏற்பாடுகளை நாம் செய்து வருகிறோம். 2012 ஆம் ஆண்டு முதல் இலங்கை வீரர்கள் பங்கேற்ற போட்டிகள் குறித்து அவர்கள் விரிவாக ஆராய்ந்து வருவதாக அறிகிறேன்.

**கேள்வி: எவ்வாறான விசாரணைகள் இடம்பெறுகின்றன?**

பதில்: தற்போதைய சூழ்நிலையில், அதற்குரிய பதிலை என்னால் வழங்க முடியாது. ஆயினும் நாம் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குகிறோம். அனைத்து வீரர்கள் மற்றும் அதிகாரிகளுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு பணிப்புரை விடுத்துள்ளோம்.

**கேள்வி: அவர்கள் எவ்வகையான விசாரணைகளை நடத்தப்போகிறார்கள் என்பதை முன்கூட்டியே அறிவித் துள்ளார்களா?**

பதில்: சில விடயங்கள் குறித்து தெரிவித்தார்கள். 1992 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற போட்டிகள் குறித்தும் அவர்கள் தகவல் சேகரித்துள்ளதாக அறிகிறேன்.

**கேள்வி: இன்னும் எத்தனை நாட்கள் அவர்களின் விசா ரணை தொடரும்?**

பதில்: இன்னும் சில நாட்கள் தங்கியிருப்பார்கள். அதன்பின்னர் அது குறித்து முழுமையான விபரங்களைத் தர முடியும்.

**கேள்வி: இவ்வகையான விசாரணைகளால் இலங்கை கிரிக்கெட் அணிக்கு அபகீர்த்தி ஏற்படுவதாக எண்ண வில்லையா?**

பதில்: ஏதாவது ஒரு சந்தேகம் எழுமிடத்து, விசாரணைகள் நடத்தப்பட வேண்டியது அவசியம். அது வீரர்களின் உண்மைத் தன்மை குறித்ததான தீர்மானத்துக்கு உதவியாக இருக்கும்.

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org